# விதைகள்

பகுதி–17

சகோதரி. லதா டேவிட்

ஒளிமயமான எதிர்காலம்

# விதைகள் – 17

## *Run - up:*

உலகம் உருவாவதற்கு முன்னதாகவே நமக்காக சகல நன்மைகளையும் தயாரித்து; அவற்றை உலகம் உருவானதற்கு பிறகு ஏதேனுக்குக் கொண்டு வந்து; அவைகள் பறிபோனபோது சோர்ந்து போகாமல் 7000 வாக்குத்தத்தங்களாக **(approx.)** அவற்றை ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் என்ற பார்சலுக்குள் **(package)** வைத்து பத்திரமாக பாதுகாத்து; தீர்க்கதரிசிகளின் வாக்குமூலங்கள் மூலமாக அவற்றை சிலுவைக்கு கடத்திக் கொண்டு வந்து; இயேசுவின் மூலமாக அவைகளையெல்லாம் நமக்கு பதிவிறக்கம் **(download)** செய்து கொடுத்த தேவாதி தேவனுக்கு இயேசுவின் மூலமாக சதாகாலங்களிலும் மகிமையுண்டாவதாக, ஆமென்.

## Minimize Vs. Maximize:

இக்கால தேவ சபையில் சுவிசேஷம் நியாயப்பிரமாண சட்டத்திட்டங்களினால் முடக்கப்பட்டுவிட்டது **(minimize)**. அப்படி இருட்டடிப்பு செய்யப்பட்ட சுவிசேஷத்தின் பரிபூரணமான எல்லைகளை சபைகளுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவது தான் **(maximize)** இப்படிப்பட்ட புதிய உடன்படிக்கையின் ஊழியங்களின் பிரதான நோக்கம்.

இக்காலங்களில் சபைகளில் எதிரொலிக்கின்ற நியாயப்பிரமாண சட்ட திட்டங்களை அஸ்திபாரமாகக் கொண்ட பிரசங்கங்கள், விசுவாசிகளை பாரம் சுமந்து, தவித்து, போராடி இளைப்படையச் செய்து விடுகின்றன. இயேசு வெளியே நிறுத்தப்பட்ட சபைகளின் வாசலில் கிருபை வீணாக வழிந்தோடுகின்றது. பிரசங்கங்கள் என்னவோ கேட்பதற்கு எதுகை மோனையோடு மிக நன்றாகத்தான் இருக்கின்றது; எளிதாக நேரத்தைக் கடத்தி விடுவதற்கு உதவியாகவும் இருக்கின்றன. ஆனால் என்ன பிரயோஜனம்? இப்படிப்பட்ட பிரசங்கங்கள் இந்தக் கடைசிக்கால அறுவடையில் எந்த வேலையையும் செய்யப் போவதில்லை, தேவ இராஜ்ஜியத்தை கட்டப்போவதுமில்லை, ஏன்?... வாழ்க்கைப் பிரச்சனைகளிலிருந்து நம்மை விடுவிக்கப்போவதுமில்லை, மனதில் எழும்பும் ஓராயிரம் கேள்விகளுக்கான பதிலைத் தரப்போவதுமில்லை.

மனிதன் மனம் மற்றும் அதன் நினைவுகளைப் பற்றி அறிந்து கொள்வது கண்டிப்பாக அவசியம். ஏனென்றால் மனிதனுடைய வாழ்க்கையின் ***substance*** அவனுடைய மனது தான். மனிதனின் மண்டைக்குள் விடை தெரியாமல் அலறி சுற்றித் திரியும் பல கேள்விகளைப் பிடித்து நிறுத்தியிருக்கிறோம்; தகுந்த பதில்களுடன். நம்முடைய வார்த்தைகளுக்கு எந்த அளவுக்கு வல்லமை இருக்கிறது என்பதையும் புரிய வைக்க முயற்சித்திருக்கிறோம். விசுவாசத்தைப் பற்றியும் சில காரியங்கள் இதில் உண்டு. எழுப்புதல் பற்றியும் எழுதியிருக்கிறோம். வழக்கம் போல பணத்தைப் பற்றியும் சில காரியங்கள் இதிலுண்டு. எறும்புகளைப் பற்றி சில புதிய விஷயங்கள்; வாசித்து பயனடையுங்கள். செழிப்பு, காலப்பிரமாணம் (கண்டிப்பாக படிக்க வேண்டிய விஷயம்) பற்றியும் எழுதியிருக்கிறேன்.

விதைகள் – 16 வரையிலும் பல காரியங்களை அலசி ஆராய்ந்து வந்திருக்கிறோம்; பல கேள்விகளுக்கான பதிலையும் பெற்று வந்திருக்கிறோம். இந்த விதைகள் – 17 லும் உங்கள் மனதின் பல கேள்விகளுக்கு விடை கிடைத்து விடும் என்று கர்த்தருக்குள் விசுவாசிக்கிறோம்.

# Index:

*Run - up:*


**Minimize Vs. Maximize:**

பதில் தேடும் கேள்விகள்:

சிலுவையில் அறையப்படாத இயேசு *Vs* சிலுவையில் அறையப்பட்ட இயேசு:

**Beware of the Dogs:**

நற்செய்தி Vs துர்ச்செய்தி:

நல்ல தேவன் Vs கெட்ட தேவன்:

இயேசுவின் முதல் வருகை, & இரண்டாம் வருகை:

மனதைக் கற்றறிவோம்:

மனம் போன போக்கிலே மனிதன் போகலாமா?:

**Hide-and-seek:**

வழிமறி போராட்டம் நடத்தும் மோசமான நினைவுகளும், திகைத்து நிற்கும் தேவனும்! (?):

மனசுக்கு... பிரேக் பிடியுங்கள்:

மத்தேயு 24:

மண்டையின் மகிமை:

தேவனின் வார்த்தை & மனிதனின் வார்த்தை:

விசுவாசமே விதை – **Faith is the substance:**

விசுவாச இயக்கம்:

எழுப்புதலின் மூலஸ்தானம்:

தலைவிதியை மாற்றுவோம்:

மூளையில் பதிக்கப்பட்ட **Hard disk:**

புரியாத புதிராகிப் போன தேவன்:

மனம் ... அது ஒரு நாடக மேடை:

வெளிப்பாடில்லாத பிரசங்கங்கள்: [? ... சிலுவையில் அறையப்படாத இயேசு]

இலட்சியம் நம் இயேசுவே:

இனி குழப்பம் தேவையில்லை:

மனமே, உனக்காகவும் ஒரு கவிதை: [சிந்தனைக்கு]

பணத்தைப் பற்றி வேதம் என்ன சொல்லுகிறது? ஒரு கண்ணோட்டம்:

பணத்தை சரியாகப் புரிந்து கொள்ளுவோம்:

எறும்பு வாத்தியார்கள்:

எறும்புகளை பின்தொடர்வோம் (இரகசியமாக):

நாடியில் கை வைத்தபடி உன்னதங்களில் உட்கார்ந்திருக்கும் கிறிஸ்தவர்கள்:

விசுவாசத்தின் நல்ல போராட்டம் (good fight of faith)

நாம் ஏன் பிறந்தோம்?:

வாழையடி வாழையாக பயணிக்கும் நினைவுகள்:

கடலில் மூழ்க வாரீங்களா?:

அறிவுக்கு வேலை கொடு:

நாம் வித்தியாசமானவர்கள்: (Something different)

செழிப்பின் தேவன் – Prosperous Lord:

படிக்க படிக்க முகத்தை மாற்றிக் கொள்ளும் புத்தகங்கள்:

காலத்தைப் பற்றி வேதம் தரும் வெளிப்பாடு:

**உதாரணமாக:**

**பொல்லாதவைகளை நல்லவைகளாக்கும் காலம்:**

**எப்படி பிரயோஜனப்படுத்துவது?:**

**தேவன் – காலம் – நாம்:**

**அது சாத்தியமானது தானா? எப்படி?:**

**கடந்த காலப் பயணம் சாத்தியமானது தான்: (!?)**

**முடிவாக ...**

## பதில் தேடும் கேள்விகள்:

***"பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் ... 1 தீமோத். 1:15"*** என்று இரத்தினச் சுருக்கமாக்கப்பட்ட சுவிசேஷத்தின் பரிமாணத்தை விஸ்தாரமாக்கவே நாங்கள் வந்திருக்கிறோம். ஒரு சில வசனங்களின் மூலமாக சுவிசேஷத்தை அதன் பூரணமான எல்லைகள் வரையிலும் விரித்துக் காட்ட முடியும். **பாவிகளை இரட்சிக்க... என்ற இந்த வசனத்தின் மூலம் சுவிசேஷத்தை minimize செய்து ஒன்றுமில்லாமல் ஆக்கிவிட்டார்கள். கம்ப்யூட்டரில் minimize என்ற கட்டத்தில் ஹர்சரை (cursor) நிறுத்தி கிளிக் (click) செய்தால் மொத்த பக்கமும் ஒரு வினாடியில் சர் என்று கீழே ஓடி காணாமல் போய்விடும். சபையில் நற்செய்தி அறிவிக்கிறோம் என்ற பெயரில் இதைத்தான் செய்கிறார்கள். இயேசு உலகத்திற்கு அனுப்பப்பட்ட காரணத்தை மிகவும் குறைத்து கடைசியில் ஒன்றுமில்லாமல் ஆக்கி விட்டார்கள். உற்று உற்றுப் பார்த்தாலும் minimize பண்ணப்பட்ட பிறகு கம்ப்யூட்டர் ஸ்கிரீனில் எதுவுமே தெரிவதில்லை!**

***"மனுஷகுமாரன் கெட்டுப்போனதை ரட்சிக்க வந்தார். மத். 18:11."*** இந்தப் பூமியில் வந்து பிறந்த காரணம் தெரியாமல்; வாழ்க்கையின் நோக்கம் புரியாமல், எங்கெங்கோ அலைந்து திரிந்து, தவறாக வழி நடத்தப்பட்டு, வழி தவறிப் போய், கடைசியில் புகையாய் புகைந்து காணாமல் போய் விட்ட மக்களைத் தேடித்தான் இயேசு வந்தார். **(misplaced, mislaid, missing, gone, nowhere to be found, gone astray, vanished, absent)** தேவனையறியாத உலக மக்களின் நிலைமை மட்டுமல்ல; தேவனை அறிந்து கொண்ட பிறகும் நியாயப்பிரமாண சட்டதிட்டங்களினால் அலைக்கழிக்கப்படுகிற சபை விசுவாசிகளின் நிலைமையும் இப்படித்தான் இருக்கிறது. மனிதனின் படைப்பின் நோக்கம் கெடுக்கப்பட்டுப் போனது, தேவனுடைய திட்டம் கெடுக்கப்பட்டது, பூமி கெடுக்கப்பட்டுப் போனது. எல்லாவற்றையும் சரி செய்யத்தான் இயேசு வந்தார்; அவர் வந்த நாள் தான் கிறிஸ்மஸ் என்பது எல்லாருக்கும் தெரியும். ஆனால் ஏன் வந்தார் என்பதைப் பற்றி கொஞ்சம் ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் யாருக்குமே எதுவுமே தெரிந்திருக்கவில்லை. உலகம் கெட்டுக் கெடக்குது என்று பாடிய பாட்டையே பாடிக்கொண்டிருக்காமல்; இயேசு பூமியில் மனிதனாய் அவதரித்து மெனக்கெட்ட காரிய காரியங்களை ஆராய்ந்து பொறுப்பை கையிலெடுப்பது தான் புத்திசாலித்தனம், அது தான் கிறிஸ்மஸ்.

***"... ஊழியஞ்செய்யவும், (Minister, servent) அநேகரை மீட்கும்பொருளாகத் (ransom, redemption, recovery, deal, salvation) தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் ... மத். 20:28."*** பாவத்தால், அதனால் வந்த சாபத்தால், அதனால் வந்த தரித்திரத்தால், வியாதிகளால் ... இப்படியாக பூமியின் மீது கொட்டிக்கிடக்கும் லட்சக்கணக்கான பிரச்சனைகளிலிருந்து மனிதனை விடுவிக்க வந்தார். சிறைச்சாலையில் இருக்கும் கைதிக்கு ஜாமீன் கையெழுத்துப் போட்டு பணம் கட்டி வெளியே கொண்டுவருவதைப் போலத்தான் இதுவும். மனிதனின் தவறுக்கு தான் பொறுப்பெடுத்துக்

கொண்டார்; அவருடைய மானத்தை வாங்காமலிருப்பது தான் கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கிற நம்முடைய பொறுப்பு.

***"இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே (seek and to save) மனுஷகுமாரன் வந்திருக்கிறார் ... லூக். 19:10."*** மனிதன் தனக்கு தேவன் கொடுத்த சகல நன்மைகளும் அடங்கின மகிமையான ஏதேனின் வாழ்க்கையை இழந்து போனான். அதைத் திருப்பிக் கொடுக்கவே இயேசு வந்தார். ஏதேனின் சகல நன்மைகளும் இப்போது 7000 வாக்குத்தத்தங்களாக உருமாற்றம் அடைந்திருக்கின்றன. அவைகள் இயேசுவுக்குள்; இயேசு நமக்குள். அப்படியானால் இழந்ததை திருப்பிக் கொள்வதற்கான சாதகமான சூழ்நிலைகள் இப்போது இயேசுவால் நமக்கு உண்டாயிருக்கிறது.

***"மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல; இரட்சிக்கிறதற்கே வந்தார் ... லூக். 9:56. (not come to destroy men's lives, but to save them)."*** ஜீவன் என்றால் மனிதனுடைய வாழ்க்கையையும், வாழ்க்கைக்குத் தேவையான சகல நன்மையான காரியங்களையும் குறிக்கிறது. மனிதன் தன்னுடைய அறியாமையினாலும் இயலாமையினாலும் பெற்றுக் கொள்ளாமலிருக்கிற நன்மைகளை அவனுக்குக் கொடுக்க வந்தார். ஆதாம், ஏவாள் ஆகியோரால் **(the first man and woman, progenitors of the human race)** இழந்து போன ஏதேனின் நன்மைகளை (ஏறக்குறைய 7000) மனிதனுக்குத் திருப்பிக் கொடுக்கவே இயேசு வந்தார். தன்னிடமிருந்து, தன்னைப்போலவே, தன்னால் உருவாக்கப்பட்ட மனிதன் எல்லாவிதத்திலும் தன்னைப் போலவே எந்த குறைவுமில்லாமல் வாழ்ந்திருக்க வேண்டுமென்றே தேவன் விரும்பினார். தான் கொடுத்த சமாதானம், சந்தோஷம், சுகம், பெலன், ஆரோக்கியம், பரிசுத்தம், ஐசுவரியம், தங்கம், பூ, பூப்போட்ட சேலைகள், கார், வீடு போன்ற எண்ணிலடங்காத ஆசீர்வாதங்களை தானே திரும்பப் பறித்துக் கொள்ள வரவில்லை. அவைகளையெல்லாம் திரும்பக் கொடுக்கவே வந்தார் என்ற உண்மை பசுமரத்தாணிபோல மனதில் பதிக்கப்பட வேண்டிய ஒன்று. தேவன் நம்மை திருத்துவதற்காக, பாடம் கற்பிப்பதற்காக இவைகளையெல்லாம் நம்மிடமிருந்து பறித்துக் கொள்வார், கொண்டார் என்று நினைப்பது ... ? அது சாத்தானின் திட்டமிடப்பட்ட சதி என்பதைப் புரிந்து கொள்வோம். தேவனுடைய பிள்ளைகளை இப்படியெல்லாம் சொல்லி வஞ்சிப்பதற்காக சாத்தானால் திட்டமிடப்பட்டு செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்ற சகல பிரசங்கங்களையும் திருத்தி சரியானதாக மாற்றுவதே இந்த புதிய உடன்படிக்கையின் ஊழியம்.

***"அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், ... யோவான்.1:11."*** பூமியும் அதிலுள்ள எல்லாமே இயேசுவுக்குத்தான் சொந்தம். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. ... ***"சகலமும் அவரைக்கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. கொலோ.1:16. (...God created everything in heaven and on earth, ... God created the whole universe through him and for him)"*** அதனால் தன்னுடைய உடைமைகளைத் தேடி அவர் வந்ததில் ஆச்சரியம் எதுவுமில்லை. தேவன் இயேசுவின் மூலமாக சகலத்தையும் உருவாக்கியதற்கு ஒரு நோக்கம் இருந்தது. எதையும் காரணமில்லாமல் அவர் உருவாக்கவில்லை. அவர் தன்னையும், தன்னுடைய காரியங்கள் எல்லாவற்றையும் விரிவாக்கம் செய்ய நினைத்தார். அப்படி அவர் நினைத்ததில் நியாயம் இருந்தது; ஏனென்றால் அவர் தேவன் அப்படித்தான் நினைத்தாக வேண்டும். நாமே இருந்த இடத்தில் இருப்பதில்லையே? முன்னேறிப் போய் எதையாவது பிடிக்க, சாதிக்க, ஜெயிக்க ஆசைப்படுகிறோமே. பூமியும் மனிதனும் தான் அவருடைய செயல்திட்டத்தின் மூலப்பொருள். அவருடைய செயல்திட்டம் பிரச்சனைக்குள்ளானபோது; அதை அவர் சரி செய்ய நினைத்ததில் நியாயம் இருந்தது. அதற்காக அவர் தன் குமாரனை பூமிக்கு அனுப்பியதில் காரணம் இருந்தது. அனுப்பப்பட்ட நோக்கத்தை இயேசு வெற்றியாக முடித்தார் சிலுவையில். **இயேசுவின் சரீரத்தை சிலுவையிலிருந்து இறக்கி எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள்; ஆனால் அவர் சம்பாதித்த வெற்றியை, விடுதலையை அங்கேயே தொங்கிவிட்டுவிட்டுப் போய்விட்டார்கள்.** ஆனால் நாமோ அப்படியிருக்கவில்லை; சிலுவையில் தொங்கவிடப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்களை கீழே இறக்கி முடிச்சை அவிழ்த்து எடுக்க ஆரம்பித்து விட்டோம்.

***"உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை***

*உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். யோவா. 3:17."* தன்னுடைய திட்டத்தை முதல் மனிதன் தோல்விக்குள்ளாக்கிய போது; ஆண்டவர் தனக்கு வந்த கோபத்தில் பூமியை ஒரேயடியாக அழித்துப் போட்டிருக்கலாம் **(condemn).** ஆனால் தேவனுடைய அன்பு என்ற குணாதிசயம் அவரை அப்படி யோசிக்க வைக்கவில்லை. தன்னுடைய ஒற்றைக்கொரு செல்லப்பிள்ளையை நிவாரணியாக அனுப்பினார். பூமியை – அதிலுள்ள மனிதர்களை – அவர்களின் மனதைச் சரிசெய்ய அனுப்பினார். குறைவுள்ள மனிதர்களை மனதார ஏற்றுக்கொண்டார் **(approval),** ஆதரித்தார் **(support),** கனப்படுத்தினார், மரியாதை கொடுத்தார் **(honor),** மனிதனைச் சூழ்ந்து கொண்ட லட்சக்கணக்கான பிரச்சனைகளிலிருந்து அவனைக் காப்பாற்றினார் **(defense),** மகிமைப்படுத்தினார் **(praise).**

## சிலுவையில் அறையப்படாத இயேசு *Vs* சிலுவையில் அறையப்பட்ட இயேசு:

*"நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம் ... 1 கொரி. 1:23." (crucified) "சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்தேன். 1 கொரி. 2:2."* கேட்பவர்களின் மனதில் குழப்ப மேகங்களை எழும்பி வரச்செய்கிற எதுவுமே நற்செய்தி அல்ல; அவை சிலுவையில் அறையப்படாத இயேசுவைப் பற்றின பிரசங்கங்கள், அது மழை தராத வெற்று மேகங்களே. இப்படிப்பட்ட மழை தராத மேகங்களை எழுப்புவதிலேயே குறியாக இருக்கிற பிரசங்கங்களே அதிகம். சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை மட்டுமே பவுல் அறிவிக்கத் துடிப்பதற்கு காரணம் இருக்கிறது. அப்படிப்பட்ட பிரசங்கங்கள் தான் ஆசீர்வாத மழையைக் கொண்டுவர முடியும்; அந்த ஆசீர்வாதம் ஐசுவரியத்தைத் தரும், ஐசுவரியம் தேவ இராஜ்ஜிய வேலையைச் செய்ய ஆதரவாகவும் இருக்கும்.

சிலுவையில் தான் வாக்குப்பண்ணப்பட்ட சுமார் 7000 வாக்குத்தத்தங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இழந்து போன ஏதேனின் மகிமை இந்த வாக்குத்தத்தங்களுக்குள்ளாகத்தான் ஒளிந்திருக்கிறது என்பது தெரிந்த விஷயம். இயேசு சிலுவைக்கு வருவதற்கு முன்னதாக அவர் பூமியில் நியாயப்பிரமாணத்துக்குட்பட்டவராக வாழ்ந்த காலக் கட்டத்தின் அடிப்படையில் செய்யப்படும் பிரசங்கங்களினால் தேவ இராஜ்ஜிய வேலைக்கு எந்த பிரயோஜனமுமில்லை. அப்படியே அவர் பிறப்பதற்கு முற்பட்ட பழைய ஏற்பாட்டின் காலகட்டங்களினடிப்படையில் செய்யப்படும் பிரசங்கங்களும் வீணாகத்தான் போய்க்கொண்டிருக்கிறது.

சிலுவையில் அறையப்படாத இயேசுவைப் பற்றின பிரசங்கங்கள் பழைய ஏற்பாட்டின் காலத்தில் இருந்த தேவகோபத்தை சிலுவையின் மூலமாக இறக்குமதி செய்ய முயற்சிக்கின்றன. பழைய ஏற்பாட்டின் தேவகோபம் அடங்கிய பயங்கரமான சம்பவங்களை நற்செய்தி என்ற சோல்னா பைக்குள் போட்டு எடுத்துக்கொண்டு வந்து கூவிகூவி விற்கிறார்கள். இவர்கள் தாங்களும் குழம்பி; தங்களின் குழப்பங்களை அடுத்தவர்களுக்கும் விற்கிறார்கள். இயேசுவைப் போல் பாவமில்லாமல் வாழ சுயமாக முயற்சிகள் எடுக்கிறார்கள், குட்டிக்கரணம் அடித்துப் பார்க்கிறார்கள்; முடியாமல் போனதும் நற்குணசாலிகளாக நடித்து, வேஷம் போட்டு சர்க்கஸ் காட்டுகிறார்கள். இவர்களுடைய சர்க்கஸைப் பார்க்க வரும் கூட்டம் மிகுதி. இப்படிப்பட்டவர்களைத் தான் ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாயாக வேதம் அடையாளம் காட்டுகிறது.

## Beware of the Dogs:

1967–ஆம் வருஷ காலகட்டங்களில் நடந்த ஒரு சம்பவம் நினைவில் இருக்கிறது. வால்பாறையில் தேயிலைத் தோட்டங்கள் நிறைந்த ஒரு காட்டுப்பகுதியில் அதிகப் பாதுகாப்பில்லாத ஒரு தன்னந்தனிய வீடு. எல்லைச் சுவர் கட்டப்படாத அக்காலத்தில் வெறும் கம்பி வேலிகள் மட்டும் தான்; அதில் காட்டுச் செடிகள் படர்ந்திருக்கும். காட்டுவிலங்குகள் வீட்டின் குடியிருப்பின் எல்லைகளுக்குள் வந்துவிடாதபடி பாதுகாப்பது புழக்கடை பக்கமாக இருக்கும் மிகச் சாதாரணமான ஒரு கம்பிவலைக் கதவு மாத்திரம் தான். ஓநாய்களின் ஊளையிடும் சத்தங்களை நான் கேட்டு

பயந்ததுண்டு; ஆனால் பார்த்தில்லை. ஒரு நாள் அந்த கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தபோது ஓடிவந்த என்னுடைய அம்மா என்னை உள்ளே பிடித்து இழுத்து விட்டு கதவைப் பூட்டியபடி சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வருகிறது. காட்டுக்குள் இருக்கும் ஓநாய் சிறுபிள்ளைகளைப் பார்த்தால் பிடித்துக் கொண்டு போய்விடும் என்றார்கள். அப்போ பெரியவர்களை ஒன்றும் செய்யாதா? என்று கேட்ட என்னுடைய கேள்விக்கு; பெரியவங்களைப் பார்த்தால் பயந்து ஓடிப்போய்விடும் என்றார்கள்.

***"... எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். மத். 7:15."*** (Wolf) நாயைப் போன்ற தோற்றமுடைய புத்திசாலித்தனமான, தந்திரமான, வேட்டைத்திறமையுடையது இந்த ஓநாய்கள். வியாதியினால் பாதிக்கப்பட்டு பலவீனமடைந்த, இன்னமும் வளர்ச்சியடையாத குட்டி விலங்கினங்களைதான் இது குறிவைக்கும். நினைவுகளில் பலவிதமான வஞ்சனைகளை வைத்துக் கொண்டு நல்லவர்கள் போல நடிப்பார்கள். உண்மை தெரியாத தேவபிள்ளைகள் இவர்களை நம்பி ஏமாந்து போவார்கள். என்றாவது ஒரு நாள் அவர்களுடைய சுயரூபம் தெரியவரும் போது, வண்டவாளம் தண்டவாளம் ஏறும் போது, அதிர்ச்சியடைந்து, வாயடைத்துப் போய், திகைத்து, கல்லாகிப் போய் நின்று விடுகிறார்கள். ***"அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; ... மத். 7:16"***

எத்தனை பிரசங்கங்கள் கேட்டாலும் இன்னமும் தேவனுடைய கிருபையைப் பற்றி புரிந்து கொள்ளாமலிருக்கிற விசுவாசிகள் இவர்களின் மாய்மாலத்திற்கு பலியாகி விடுகிறார்கள். ***"எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற ... வீடுகளில் இப்படிப்பட்வர்கள் நுழைந்து, அவர்களை வசப்படுத்திக்கொள்ளுகிறார்கள். 2 தீமோத். 3:7."*** இந்த பிரசங்கங்கள் இயேசுவின் மூலமாக தேவன் மனுக்குலத்திற்கு செய்திருக்கிற எதையுமே பார்க்க விடாதபடி திரைபோட்டு மறைத்து விடுகிறது. இயேசு என்ற போர்வைக்குள் இருந்து கொண்டு தங்களுடைய சுயமுயற்சியினால், சுய ஞானத்தினால் நல்லவர்களாக நடந்து காட்டச் சொல்லி நம்மைக் கட்டாயப்படுத்துகின்றனர். தாங்களும் அப்படியே முயற்சி செய்கின்றனர். இதனால் இவர்கள் எப்போதும் மனஅழுத்தத்துடன் காட்சியளிக்கின்றனர். பரிசுத்தவான்களாக நடித்து நடித்து கடைசியில் சோர்ந்து போய் முடியாமல் போகும் காலகட்டத்தில் ஊளையிட்டுக் கொண்டு கடிக்க வருவார்கள். அப்போது தான் அவர்களை ஓநாய்கள் என்று நாமும் அடையாளம் கண்டு கொள்வோம்.

நாய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்ற எச்சரிப்பின் வசனமும் இவர்களைப் பற்றியது தான். நாய்கள் ஜாக்கிரதை (Beware of the dogs) என்று பெரிய வீடுகளின் சுவர்களில் எழுதப்பட்டிருக்கும் இந்த வார்த்தைகளைப் பார்த்ததும் எனக்குச் சிரிப்பு வரும். அதன் உள் அர்த்தம் அந்த வீட்டில் உள்ள நான்கு கால் நாய்களைப் பற்றினதல்லவென்று எத்தனை பேருக்குத் தெரியும்? இப்படிப்பட்ட கிருபையின் பிரசங்கங்களை தண்ணீர் தெளித்து அணைக்க முயற்சிக்கும் நியாயப்பிரமாணப் பிரசங்கங்கள் ஏராளம். நெருப்பு அணைந்து போனாலும் மிச்சமிருக்கும் தணல் ஊதப்படுவதால் இன்றளவும் தேவஇராஜ்யத்தின் செயல்திட்டங்கள் வெற்றியாக நடந்து வருகின்றன.

## ***நற்செய்தி Vs துர்ச்செய்தி:***

தேவபிள்ளைகளுக்கு இலக்கை ஏற்படுத்தி, அதை அடைய உதவி செய்யாத எதுவும் நற்செய்தி அல்ல. இலக்கு இல்லாமல் எதையும் அடைய முடியாது. வாக்குத்தத்த ஆசீர்வாதங்களை அடைய முயற்சிக்கிற எத்தனை பேர் அதற்கான இலக்கை நியமிக்கிறார்கள்? நற்செய்தி என்ற பெயரில்; ஆனால் எந்த நற்செய்தியுமே இல்லாத மாய்மால கிறிஸ்தவத்தைப் பார்த்து உலகம் பயப்படுவதில் ஆச்சரியம் எதுவுமில்லை. உலகமெங்கும் நிமிஷந்தோறும் லட்சக்கணக்கான கிறிஸ்தவர்கள் பரபரவென்று இயேசுவை தேவனற்ற உலக மக்களுக்குள் திணிக்க மல்லுக் கட்டுகிறார்கள். என்றாலும் ஒவ்வொரு வினாடியிலும் இயேசு அவர்களால் புறக்கணிக்கப்படுகிறார் என்ற உண்மை வேதனையோடு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

தங்களுடைய நற்செய்தி அறிவிப்பு வெற்றியாக இல்லை என்று அறிந்து கொண்டாலும்;

வேறு வழி தெரியாத காரணத்தினால் திரும்பத் திரும்ப அதையே செய்கிறார்கள். இதனால் தோல்விகள் தொடர்கதையாகி வருகிறது. **செய்ததையே செய்துவிட்டு முடிவை (consequence, outcome, effect, end result) மட்டும் வேறுமாதிரியாக எதிர்பார்ப்பது முட்டாள்தனம். வேறுமாதிரியான முடிவு வேண்டுமானால் வேறு மாதிரியான புதிய முயற்சிகளை எடுக்க வேண்டும்.** இயேசு சிலுவையில் முடித்து வைத்த கிரியை பிரமாணத்தை அல்ல; அவர் துவங்கிய கிருபை பிரமாணத்தை முயற்சிப்போம், வெற்றி நிச்சயம்.

## நல்ல தேவன் Vs கெட்ட தேவன்:

பழைய ஏற்பாட்டில் யெகோவா என்ற பெயரில் அறியப்படும் தேவனை பழைய கிரியைப் பிரமாணத்தின் கண்ணோட்டத்தில் பார்த்துவிட்டு அஞ்சி நடுங்குவது நியாயப்பிரமாண சபைகளின் வழக்கமாக இருக்கிறது. அவர்கள் தேவனை இன்னும் ருசித்துப் பார்க்கவில்லை என்பது புரிகிறது. குலோப் ஜாமுனை பற்றிக் கேள்விப்படுவதால் மட்டும் அதைப் பற்றி புரிந்து கொள்ள முடியாது. அதை வாங்கி தொட்டு அதன் மென்மையை புரிந்து கொண்டு, கண்ணால் அதன் அழகைப் பார்த்து, அதன் வாசனையை முகர்ந்து பார்த்து, அதை உறிஞ்சி சாப்பிட்டுப் பார்க்கும் போது தான் ஆஹா என்ன ருசி என்று சொல்ல முடியும். ***"கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்;... சங். 34:8 (taste and see that the LORD is good)"*** தேவனையும் அப்படி அனுபவித்துப் (taste, try, test) பார்த்தால் தான் புரிந்து கொள்ள முடியும். **தேவன் என்று ஒருவர் இருப்பாரானால் நிச்சயமாக அவர் நல்லவராகத்தான் இருக்க முடியும், கெட்டவராக இருக்க வாய்ப்பில்லை என்றார் கடவுளை நம்பாத விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் (God is subtle but he is not malicious).** கடவுளை நம்பாத ஒரு மனிதனுக்கு கிடைத்த இந்த வெளிப்பாடு கூட தேவபக்தியுள்ள இக்கால சபைக்கு இல்லை. யோசிக்க வேண்டிய விஷயங்களில் இதுவும் ஒன்று.

நியாயப்பிரமாணத்தின் (கிரியை பிரமாண) கீழ் இயங்கும் சபையினர் பெரும்பாலும் தங்களை பிஸியாக இருப்பதுபோல் காட்டிக் கொள்வார்கள். ஏனென்றால் இவர்களுக்குக் கிரியையில் தான் நம்பிக்கை இருக்கிறது. ஏதாவது செய்தால் தான் தேவனை திருப்திப்படுத்த முடியும் என்ற மனநிலை இவர்களுக்கு இருப்பது தான் காரணம். நம்முடைய தேவன் எவ்வளவு பெரியவர், வல்லமையுள்ளவர், மகிமையுள்ளவர்? என்பதற்கான ஒரு உதாரணம் தருகிறேன் கீழே: தேவன் தமது மகிமைக்காக உருவாக்கிய அண்டசராசரத்தின் பிரமாண்டத்தை கவனியுங்கள்:

**The part of the Universe that we can see, referred to as the observable universe, has a diameter of about 93 billion light years (28 billion parsecs) (one thousand million: one thousand million, written as 1 followed by nine zeros) (விட்டம், நீளம்).**

**a volume of 4 × 1083 liters. The size of the whole Universe is not known - it may be infinite. (அளவிடமுடியாதது)**

**Diameter 8.8 × 1026 m (28.5 Gpc or 93 Gly)[1]**

**Volume (கொள்ளளவு) 4×1080 m3[2]**

**Mass (ordinary matter) (உருவ அமைப்பு) 1053 kg [3]**

**Density (குடிமன்) 9.9 × 10-30 g/cm3 (equivalent to 6 protons per cubic meter of space)[4]**

**Age (வயது) 13.799±0.021 billion years[5]**

**Average temperature (வெப்பநிலை) 2.72548 K[6]**

**Contents Ordinary(அளவு) (baryonic) matter (4.9%)**

**Dark matter (26.8%) (ஆராயப்படாத பகுதி)**

**Dark energy (68.3%) (ஆராயப்படாத வேகம், சக்திகள்)**

இப்படிப்பட்ட தேவனை நம்முடைய கிரியைகளினால் எப்படி திருப்தி படுத்த முடியும்? நிச்சயமாக முடியாது. ஆனால் ஒன்று செய்யலாம் அவருடைய கிருபையைச் சார்ந்து கொள்வதன் மூலம் அவர் நம்மில் திருப்தியடையும்படி செய்யலாம்.

## இயேசுவின் முதல் வருகை, & இரண்டாம் வருகை:

இயேசுவின் முதல் வருகையின் காரணகாரியத்தையே அறிந்து கொள்ளாமல்; அவருடைய இயேசுவின் இரண்டாம் வருகைக்காக காத்திருக்கும் சபை! அவருடைய வருகையின் காரணகாரியத்தைப் பற்றி எதுவுமே தெரியாமல், அல்லது தவறாக புரிந்து வைத்திருக்கும் சபையார் அவர் வரும்போது எப்படி நடந்து கொள்வார்கள் (respond) என்று சிந்தித்துப் பாருங்கள். அவரை செழிப்பின் பிரசங்கியார் என்று சொல்லி கலாய்த்து ஓரம் கட்டுவார்கள், பிரசங்கம் பண்ணக்கூட அனுமதிக்க மாட்டார்கள். பாவிகளை சிலுவையில் அறையும் அக்கால நியாயப்பிரமாண சட்டம் இக்காலத்தில் நடைமுறையில் இல்லையென்பதால் அவர் தப்பித்தார்; இல்லாவிட்டால் நடப்பதே வேறு!

நியாயப்பிரமாணக் கண்ணோட்டத்தில் இக்காலச் சபையில் செய்யப்படுகிற இரண்டாம் வருகை பற்றின பிரசங்கங்கள் நிச்சயம் சரியாக இருக்காது என்பதில் சந்தேகமில்லை. ஒரு நல்ல திகில் படம் பார்த்த உணர்வு ஏற்படுகிறது அவ்வளவு தான். நான் இயேசுவை ஏற்றுக் கொண்ட ஆரம்பக் காலகட்டங்களில் இப்படிப்பட்ட பிரசங்கங்களை விரும்பிக் கேட்பதுண்டு, வாசிப்பதுண்டு. நான் கிறிஸ்துவில் வேர் கொள்ளவோ, வளரவோ இந்த வகைப் பிரசங்கங்கள் எனக்கு எந்த விதத்திலும் பிரயோஜனப்படவில்லை. என்னைக்குறித்த தேவனுடைய திட்டம், நான் அனுப்பப்பட்டதன் நோக்கம் எதையும் புரிந்து கொள்ள முடியாதபடி ஒரு வித பயம் மனதைப் பிடித்து உலுக்கி, அங்கேயிருந்த கொஞ்சம் நஞ்சம் நல்ல காரியங்களையும் வெளியே பிடித்துத் தள்ளியது. இயேசுவை ஏற்றுக் கொள்ளாமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே என்று நினைக்க வைத்தது. தேவனற்ற உலக ஜனங்களிடமிருந்த தைரியம் கூட அக்காலங்களில் எனக்கில்லை. இதே அனுபவம் உங்களுக்கும் இருந்திருக்கும்; கொஞ்சம் திரும்பி நின்று உங்கள் வாழ்க்கை பயணத்தை நோக்கிப் பாருங்கள் (rethink), நான் சொன்னது சரியாக இருக்கும்.

இயேசுவின் முதல் வருகைக்கான காரணம் சரியாக புரியுமென்றால், அதைப் பற்றின விழிப்புணர்வு வருமானால், இரண்டாம் வருகைக்கு நாம் ஏற்கெனவே தயாராகத்தான் இருக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ளலாம். அதற்கான முயற்சிகள் தான் இந்த புத்தகங்கள். ***"ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவராக்கினவரும், இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற ... கொலோ. 1:12, 13."***

## மனதைக் கற்றறிவோம்:

மனதைப் பற்றி இக்காலகட்டங்களில் அதிகமதிகமாய் கற்றுக் கொண்டு வருகிறோம். அது அதிக அவசியமானதும் கூட. சகல வித நன்மை, தீமைகளின் ஊற்று மனம் தான். அதிலிருந்து ஜீவ நதியை பாய வைக்கலாம்; அதே நேரம் மரண நதிகளையும் பாய வைக்க முடியும். தீர்மானிப்பது நம் மனதின் எண்ணங்கள் தான். ***"... என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். யோவா. 7:38."***

## மனம் போன போக்கிலே மனிதன் போகலாமா?:

மனம் போகிற போக்கிலெல்லாம் போகலாமா என்றால்; என் பதில் நிச்சயமாகப் போகக்கூடாது. மனதின் பிடரியில் மூக்கணாங்கயிறு போட்டு இழுத்து சரியான பாதையில் நாம் தான் நடத்தணும். உன் மனசு சொல்கிறபடி கேள், எல்லாம் சரியாக நடக்கும் என்று சொல்வது

எப்படி சரியாகும்? வாழ்க்கையின் பலவிதமான மோசமான சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட மனம் எப்படி நமக்கு சரியான வழியைக் காட்ட முடியும்? அதனால் நாம் சரியான வழியில் நடக்க வேண்டுமானால்; மனம் சரியான பாதையைக் காட்ட வேண்டும். மனம் சரியான பாதையைக் காட்ட வேண்டுமானால்; அதில் சரியான காரியங்கள் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். சரியான காரியங்களைப் பதிவு செய்யவேண்டுமானால் அதற்கு தேவன் தான் வந்தாக வேண்டும். மனிதன் தன்னில் தானே சரியான காரியங்களை மனதில் உருவாக்க முடியாது; ஏனென்றால் மனிதன் கணக்கிலடங்காத குறைவுகளை தனக்குள் கொண்டவன். ஆனால் எந்த குறைவுமில்லாத தேவன் தான் சரியான காரியங்களை நம் மனதிற்குள் கொண்டு வர உதவி செய்ய முடியும்.

## *Hide-and-seek:*

தேவன் சரியான காரியங்களை வேதத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார். ஆனால் அதை ஆராய்ச்சி செய்து பார்ப்பதன் மூலம் தான் கண்டுபிடிக்க முடியும். அப்படி கண்டுபிடிக்கப்பட்ட சரியான காரியங்களை மனதில் பதியன் போடலாம். வேதத்தை மேலோட்டமாக வாசிப்பதால் மட்டும் சரியான காரியங்களை மனதிற்குள் கொண்டு வரமுடியாது. வேதத்தில் காணப்படும் எல்லா வசனங்களுமே நன்மையானவைகளும் அல்ல. (இதை வாசிக்கும்போது சிலருக்கு கோபம் வந்தால் அதற்கு நான் பொறுப்பல்ல) உதாரணமாக: ***"அகித்தோப்பேல் தன் யோசனையின் படி நடக்கவில்லை என்று கண்டபோது, ... நான்று கொண்டு செத்தான்; ... 2 சாமு. 17:23".*** இப்படிப்பட்ட வசனங்களை மனதில் வைத்தால்; பிறகு அகித்தோப்பேல் செய்ததைத்தான் செய்ய வேண்டியதிருக்கும். அப்படியானால் நல்ல காரியங்களை எப்படி தெரிந்து கொள்வது? வேதத்தில் காணப்படும் ஏதேனின் மகிமையடங்கிய ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் பட்டியலில் வருகிற வாக்குத்தத்தங்களை எடுத்துக் கொள்ளலாம். உதாரணமாக: ***"கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலைமேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம். ஏசா. 35:10"*** இந்த வசனத்தை மனதில் பதிய வைத்தால் ஆனந்தம், களிப்பு, மகிழ்ச்சி, சந்தோஷம் போன்ற நல்ல உணர்வுகள் (positive thoughts, confident, clear-cut, encouraging, progressive, up) மனதில் உண்டாகும். சஞ்சலம், தவிப்பு போன்ற மோசமான சிந்தனைகள் (negative thoughts, downbeat, off-putting, discouraging, depressing, bad, harmful, damaging) மனதைவிட்டுப் போய்விடும். மனதில் நேர்மறை சிந்தனைகளை வளர்ப்பது தேவனுக்குப் பிரியம், அவருடைய திட்டத்திற்கும் அது ஏற்றது.

## *வழிமறி போராட்டம் நடத்தும் மோசமான நினைவுகளும், திகைத்து நிற்கும் தேவனும்! (?):*

பூமியின் மீது நடக்கிற சகல குற்றங்களுக்கும் மனிதனின் மோசமான மனநிலைமைகள் தான் காரணம். அப்படியானால் நல்ல காரியங்கள் நடப்பதற்கு நல்ல மனநிலை காரணமாக அமைகிறது என்று நிதானிக்கலாம். ஒரு கொலைகாரனைப் பிடித்து அவனுடைய மனதை படம் பிடித்துப் (scan) பார்த்தால் அங்கே ஒரு பயங்கரமான கருப்பு வெள்ளை திகில் படத்தைப் பார்க்க முடியும். சிகரெட் புகையைப் போல மனிதனின் நினைவின் கதிர்வீச்சுக்களும் சுற்றிலும் பரவி அடுத்தவரையும் கெடுக்கும் ஆற்றல் உள்ளது. பிரச்சனை போய்க்கொண்டிருக்கிற ஒரு வீட்டுக்குள் நுழைந்து பார்த்தால்; அங்கே உள்ள எல்லோருடைய முகத்திலுமே சோகம் கதை சொல்லிக்கொண்டிருப்பதைப் பார்க்க முடியும். வேறென்ன யாரோ ஒருத்தர் கவலையை ஒழுக விட்டதால் வீடு சோகத்தில் மூழ்கியது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தேவனால் கூட எதுவும் செய்ய முடியாது என்பது உங்களுக்குத் தெரியுமா? நம்பாவிட்டால் வந்து பாருங்கள் காட்டுகிறேன்.

***"எல்லாரும் அழுது அவளைக்குறித்து துக்கங்கொண்டாடுகிறதைக் கண்டு: அழாதேயுங்கள், அவள் மரித்துப்போகவில்லை, நித்திரையாயிருக்கிறாள் என்றார். எல்லோரையும் அவர் வெளியே போகப் பண்ணி, அவளுடைய கையைப்பிடித்து பிள்ளையே எழுந்திரு என்றார். மாற். 8: 52, 54" "அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச்***

*செய்யவில்லை. மத். 13:58.” “... சில நோயாளிகள்மேல் கைகளை வைத்து, அவர்களைக் குணமாக்கினதேயன்றி, வேறொரு அற்புதமும் செய்யக்கூடாமல், (He was not able to perform any miracles there) அவர்களுடைய அவிசுவாசத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டு; ... மாற் 6: 5, 6”* கவனித்துப் பாருங்கள்: ஜனங்களின் மோசமான கவலை, அவிசுவாசம் நிறைந்த மனநிலை தேவனை செயல்படவிடாதபடி அவருடைய கைகளைக் கட்டிப்போட்டது. சுற்றியிருந்த மக்களின் அவிசுவாசம் என்ற எதிர்மறை சிந்தனை இயேசுவை அற்புதம் செய்யவிடாதபடி தடுத்தது. அப்படிப்பட்ட சிந்தனையோடிருந்த மக்களை அவர் வெளியே அனுப்புவதைப் பார்க்கிறோம். அவர்கள் வெளியே போன பிறகு தான் அவரால் அற்புதம் செய்யவே முடிந்தது. இன்றளவும் மனிதர்களால் தேவனுக்கு இது தான் பிரச்சனை. **ஜெபக்கூடுகைகளுக்குக் குறைவில்லை, தேவன் ஜெபத்தைக் கேட்பதற்கும் குறைவில்லை. ஆனால் பதில் கொடுக்க முடியாதபடி, பலனைப் பெற முடியாதபடி மனிதர்களுடைய குழப்படியான நினைவோட்டங்கள் முண்டியடித்துக் கொண்டுப் போய் தேவனுக்கு முன்பாக நின்று வழியை மறைத்து போராட்டம் நடத்துகின்றன. இந்த வழிப்பறிக் கொள்ளையர்களை துரத்தியடிக்காவிட்டால் தேவனால் முன்னேறி வர முடியாது.**

## *மனசுக்கு... பிரேக் பிடியுங்கள்:*

கஷ்டம் தான், என்றாலும் முயற்சித்துத் தான் ஆகவேண்டும்; ஏனென்றால் இது வாழ்க்கைப் பிரச்சனை. என் வாழ்க்கையையே கெடுத்து குட்டிச்சுவர் ஆக்கிவிட்டார்கள், காலை வாரி விட்டு விட்டான், தலையில மண்ணை அள்ளி போட்டு விட்டான், போன்ற வாக்கியங்களை அடிக்கடி கேட்டிருப்போம். யார் கெடுத்தது? வேறுயாருமில்லை நாமே தான், நம்முடைய மனசு தான் என்பதைத் தெரிந்து கொண்டால்; அவங்களையும் இவங்களையும் திருத்த முயற்சி எடுப்பதை நிறுத்தி விடுவோம். முதலில் நம்மைச் சரியாக்கிக் கொண்டாலே போதும்; மற்றவர்கள் தானாகச் சரியாகி விடுவார்கள். நம்முடைய மோசமான எண்ணக் கதிர்வீச்சுகளின் எதிர்விளைவுகள் (vibrations) நின்று போகும்.

மனதிற்குச் சரியான பாதையை போட்டுக்கொடுக்க வேண்டிய பொறுப்பு நம்முடையது. மனதைச் சரியான இடத்தில் (location), சரியான கோணத்தில் (point of view), சரியான குறிப்புகளை (programming) கொடுத்து நிறுத்த வேண்டும். தன்னிச்சையாக ஓடிக்கொண்டே இருக்கும் இயல்புடைய மனதின் நினைவுகள். அதனால் அதை அதிக முன்னெச்சரிக்கையோடு கையாள்வது அவசியம். மனதை அடக்கி, நிறுத்தி, அதை ஒழுங்குபடுத்தி, கற்றுக்கொடுத்து, சரியான பாதையில் நடத்த வேண்டிய பொறுப்பு நம்முடையது. பிரேக் பிடிக்காததினால் தன்னிலையிழந்த கார் தாறுமாறாக ஓடி மலைச்சரிவில் உருண்டு விழுந்து விபத்துக்குள்ளாவதைப் பார்த்திருக்கிறோமே! பிரேக் பிடிக்கப்படாத நினைவோட்டத்தின் முடிவும் அப்படித்தான் இருக்கும்.

நினைவுகளை ஓடவிட்டு மேற்பார்வை பார்த்துக் கொண்டிருக்கும் நம் மனம் விலையேறப்பெற்றது, அதன் மதிப்பை அளக்க முடியாது. சரீரம் செத்து கீழே விழுந்த பிறகும் ஓடிக்கொண்டேயிருக்கும் ஆற்றல் அதற்கு உண்டு. மனதை பசியால் வாடவிடாமல் தேவையான உணவு கொடுத்து பராமரிக்க வேண்டும். கண்டதையும் தூக்கி உள்ளே போட்டு அதை சாக்கடையாக்கக் கூடாது. வேதத்தை தினமும் வாசித்து, தியானித்து, ஆராய்ந்து, குறிப்பெடுத்து, அறிக்கையிட்டு, ஜெபிக்கும் பழக்கம் இருந்தாலே போதும்; மனம் தெளிந்த நீரோடையாக இருக்கும். **பேசுவதற்கு முன்னதாக யோசிக்கச் சொல்லி மனதுக்கு உத்தரவு கொடுக்க வேண்டும். சரியானவற்றை யோசிக்கவில்லையென்றால்; மனம் தானாகவே தவறானவற்றை யோசிப்பதற்கென்று எடுத்துக் கொள்ளும். (நீதி. 10:20, 15:14, 28)** மனம் அழுத்தத்திற்குள்ளாக இடம் கொடுக்கக்கூடாது; ஒருவேளை அழுத்தத்திற்குள்ளாகியிருக்கும் போது வாயைப் பேசவிடாமல் கையை வைத்துப் பொத்திக் கொள்வது நல்லது! மனமகிழ்ச்சி மிகவும் நல்லதொரு நேர்மறை நினைவலையாகும்; வாழ்க்கையில் ஜெயிக்க இந்த குணாதிசயம் மிகவும் உதவியாக இருக்கும். நம்முடைய பிரயாசத்திற்கான பலனைக் கொண்டு வரும். நம்முடைய உழைப்பு வீணாகாதபடி காத்துக்கொள்ளும். தேவன் நமக்காக வைத்திருக்கிற சகல நன்மைகளையும் கண்டுபிடிக்க மனதுக்கு கட்டளை கொடுங்கள்; அது தேடி கண்டுபிடித்துவிடும். (பிர. 2:10, 5:2, 7:28)

மனித இனம் தோற்றுவிக்கப்பட்ட ஆரம்பக் கட்டத்திலேயே மனதில் பிரச்சனை உருவாகிவிட்டது. முதல் மனுஷியின் மனதைக் கெடுத்தான் சாத்தான்; எதிர்மறைச் சிந்தனைகள், பயம் மனதில் ஆரம்பித்தது. பயம் என்பது ஒரு பயங்கரமான சிந்தனை அரக்கன். ஓடி ஒளிய வைப்பதும், பாவத்திற்குள் இழுத்துக்கொண்டு போய் மாட்டிவிடுவதும், செய்த பாவத்தை மறைக்க வைப்பதும், பிறகு அதை சொல்லிச் சொல்லி மிரட்டுவதும் (blackmail செய்வதும், pressure கொடுப்பதும்) இதன் வேலை. இன்றளவும் இதே பிரச்சனைகளால் மனிதன் தொடர்கதை எழுதிக்கொண்டிருக்கிறான். அவனுடைய திகில் ஓட்டம் நின்றபாடில்லை. மனதின் அடாவடித்தனங்களால் மனுக்குலம் சோர்ந்து போய் மயங்கி விழுந்தது.

மயக்கத்தைத் தெளிய வைக்க இயேசு வந்தார். ஆயிரமாயிரம் பிரச்சனைகளால் துரத்தப்பட்டு ஓடிக்கொண்டேயிருக்கும் மனிதனுக்கு உட்கார நேரமில்லை. அவனுக்கு ஓய்வைக் கொடுக்கவே இயேசு வந்தார். ***"வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். ...என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் (rest) கிடைக்கும். மத். 11:28, 29"***

மனசுக்கு ஓய்வு இயேசுவிடம் மட்டுமே உண்டு. அதாவது தேவனுடைய வார்த்தையில்; அதாவது வேதத்தில், வசனத்தில் மட்டுமே உண்டு. இன்று வேதம் வாசித்தீர்களா? ஜெபம் செய்தீர்களா? என்ற அறிவிப்புகளைப் பார்க்கும் போது யாரும் அதை ஒரு காரியமாக எடுத்துக் கொள்வதில்லை. ஒரு கிண்டல் உணர்வோடு நடந்து போய்விடுவதுண்டு. ஆனால் இதன் உள்ளார்ந்த அர்த்தம் என்னவென்றால் இன்று உங்கள் மனதை (ஆத்துமாவை) சரி செய்து உங்கள் வாழ்க்கையோட்டத்திற்கு முன்பாக நிறுத்தி விட்டீர்களா? என்பது தான். யோசிக்க வேண்டிய காரியம் இது.

வேதம் வாசித்து ஜெபிக்கும் நேரத்தில் சிந்தனைகள் தன் ஓட்டத்தை நிறுத்தி ஓய்வெடுத்துக் கொள்கிறது (stopping of work, place to stop and relax). ஒரு குட்டித்தூக்கம் போட்டு எழும்பி விடுகிறது (refreshing to body and mind) பயம் போன்ற மோசமாக உணர்வுகளைப் பிடித்து வெளியே தள்ளுகிறது (freedom from mental or emotional anxiety) இலேசாகிவிட்ட மனதிலிருந்து நமக்கு ஆதரவுக்கரங்களை நீட்டியபடி நினைவுகள் நிதானமாக வெளிவருகின்றன. நம்மைக்குறித்த தேவனுடைய திட்டத்தில் தொடர்ந்து முன்னேறி ஜெயிக்க, அவை நமக்கு உதவி செய்கின்றன.

## *மத்தேயு 24:*

**பூமியின் மீது என்ன நடந்தாலும் சரி; அதற்கான கேள்விகளுக்கு நம்மிடம் பதில் இருக்குமானால் ... நாம் சரியானபடி தேவனுக்குள் இயங்கிக் கொண்டிருக்கிறோம் என்று அர்த்தம். நமக்கே கேள்விகள் இருக்குமானால்; அடுத்தவர்களின் கேள்விகளுக்கு நாம் பதிலாவது எப்படி?** இயேசுவின் கிருபைக்குள் வாழ ஆரம்பிக்கும் போது இந்த வல்லமை நமக்குள் இயங்கத் துவங்குகிறது. இயேசுவின் இரண்டாம் வருகையைப் பற்றிய கடைசிக் கால பிரசங்கங்கள் இக்காலங்களில் சக்கைப்போடு போடுகின்றன. தேவனுடைய கிருபையைப் பற்றின சரியான வெளிப்பாடு இல்லாமல் செய்யப்படும் இந்த வகையான பிரசங்கங்கள் எந்த அளவிற்கு சரியானதாக இருக்கும்? இயேசுவின் இரண்டாம் வருகையைப் பற்றின செய்திகள் சிறுபிள்ளைகளுக்கு பூச்சாண்டி காட்டும் விதத்தில் அமைகின்றன. யாரும் பூச்சாண்டியை வரவேற்க மாட்டார்கள்; பயந்து ஓடத்தான் செய்வார்கள். பயந்து ஓடிப்போய் கதவுக்கு பின்னாக நின்று கொண்டு நைசாக தலையை மட்டும் வெளியே நீட்டி வராத பூச்சாண்டியை ஒற்றைக் கண்ணால் எட்டிப் பார்த்த என் சிறுபிள்ளைக் காலம் ஞாபகத்திற்கு வருகிறது. இப்படிப்பட்ட வேண்டாத பயமுறுத்தல்களால் நான் இந்நாள் வரையிலும் என் வாழ்க்கையில் சம்பாதித்தது தோல்விகளையும், அழிவுகளையும் தான்.

அப்படியானால் இதைப் பற்றிய நம்முடைய பிரசங்கம் என்ன? 3 மணி நேரம் ஓட்டப்படும் இந்த திகில் திரைப்படங்களினால் மனதில் பயம் சூழ்கின்றது. **ஒரு பிரசங்கத்தைக் கேட்டுவிட்டு வெளியே வரும்போது மனம் நிறைய பயம் இருக்குமானால் ... நீங்கள் கோபப்பட்டாலும் பரவாயில்லை உண்மையைச் சொல்லுகிறேன். இனிமேல் நீங்கள் உருப்பட மாட்டீர்கள் என்று தான் அர்த்தம்.**

மனதை விசுவாசத்தால் நிறையப்பண்ணுகிற பிரசங்கங்களைக் கேளுங்கள். இயேசுவின் முதல் வருகைக்கான காரண காரியங்களை ஆராய்ந்தறிந்து அவருடைய இராஜ்ஜிய வேலையைப் பார்ப்பது தான் நமக்கு கொடுக்கப்பட்ட வேலை. இதைச் சரியாக செய்து கொண்டு முன்னேறிக் கொண்டேயிருப்போமானால் இரண்டாம் வருகை ஒரு பிரச்சனையாகவே இருக்காது. உபத்திரவங்களெல்லாம் பிரசவ வேதனைக்கு ஒப்பீடாகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது; முடிவோ சந்தோஷக்குழந்தை!

## மண்டையின் மகிமை:

*"நீதிமானுடைய சிரசின் மேல் ஆசீர்வாதங்கள் தங்கும்; ... நீதி. 10:6."* அதாவது தலையின் மேல்... மூளையில் ... மனதில் ... நினைவுகளின் உற்பத்தி ஸ்தலத்தில் ... ஆசீர்வாதங்கள் தங்கியிருந்து வேலை பார்க்கிறது என்பதை கவனியுங்கள். வேதம் ஆத்துமா என்று அறிவிக்கிற மனம் தான் சகலவித ஆசீர்வாதங்களின் ஊற்றுக் கண். தேவனுடைய ஆசீர்வாதங்கள் இதன் வழியாகத்தான் செயல்பாட்டுக்கு வருகின்றன. வானத்திலிருந்து தங்கப் பாளங்களை கொட்டினால் மண்டை உடைந்து போகும், பணத்தைக் கொட்டினால் அது இந்த உலகத்தில் செல்லாத நோட்டுகளாகத்தான் இருக்கும். அதனால் தேவன் இப்படியெல்லாம் செயல்பட மாட்டார் என்பதைத் திட்டமாக அறிந்து கொள்வோம்.

வேதத்தை ஆராயும் போது, சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசிக்கும் போது; ஆசீர்வாதங்கள் மனதில் பதியன் போடப்படுகின்றன, பிறகு அவைகள் நினைவுகளாக சிறகடித்துப் பறக்க ஆரம்பிக்கின்றன. தேவன் தன் குமாரன் இயேசுவின் மூலமாக ஏற்கெனவே ஆயத்தப்படுத்தி வைத்திருக்கும் ஆசீர்வாதங்களைக் கொத்திக் கொண்டு திரும்ப வருகின்றன. நினைவுகள் என்பது மனதின் மொழி என்று சொல்லலாம், நம்முடைய உள்ளான ஆவி மனிதனின் வார்த்தைகள் என்றும் சொல்லலாம். கண்காணாத உலகத்தின் இந்தச் செயல்பாடுகளைக் கண்காண்கிற உலகத்திற்கு பரிமாற்றம் செய்கிற வேலையை நம் நாக்கு செய்கிறது. அடுத்தக்கட்டமாக செயல்பாடுகள் ஆரம்பிக்க, காரியங்கள் வாய்க்கின்றன.

## தேவனின் வார்த்தை & மனிதனின் வார்த்தை:

*"மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்திற்குத் திரும்பாமல் பூமியை நனைத்து, அதில் முளை கிளம்பி விளையும்படிச் செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ, அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும். ஏசா. 55:10, 11. ... it will not fail to do what I plan for it; it will do everything I send it to do."* மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி பூமியை நனைத்து; அங்கே விதைக்கப்பட்டிருக்கும் விதையை முளைத்தெழும்பும்படிச் செய்கிறது. மனிதனுக்குத் தேவையான உணவை விளைய வைக்க அது உதவி செய்வதைப் போலவே தேவனுடைய வார்த்தையும் வேலை செய்கிறது. தேவனுடைய வார்த்தை அவரைத் தேடுகிறவனுடைய மனதில் இறங்குகிறது. மனிதனின் மனம் ஒரு நல்ல விளைநிலமாக செயல்படுகிறது. தேவனுடைய வார்த்தைகள் அங்கே விதையாக விழுந்து முளைக்கிறது. பிறகு அது செயல்பாட்டுக்குள் வரும்போது வாழ்க்கை செழிப்பாகிறது, ஏதேனாகிறது, ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் என்ற baggage-ல் இருக்கிற 7000 வாக்குத்தத்தங்களும் வாழ்க்கையில் வந்து பலிக்கிறது.

மழையும் பனியும் எப்படி வேலை செய்கிறது என்று பார்த்தோம், தேவன் எப்படி வேலை செய்கிறார் என்று பார்த்தோம். இனி நாம் எப்படி வேலை செய்வது என்பதைப் பார்க்கப்போகிறோம். எந்த விதமான வித்தியாசமும் இல்லை, நாமும் இதே போல் தான் வேலை செய்ய வேண்டும். நம்முடைய நினைவுகளும், வார்த்தைகளும் தேவனுடையதைப் போலவே வல்லமையுள்ளவை; அவைகளும் வேலை செய்யும். முயற்சி பண்ணித்தான் பார்ப்போமே, it will not fail.

## விசுவாசமே விதை – Faith is the substance:

***“விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. எபி. 11:1”*** இந்த வசனத்தைச் சரியாக புரிந்து கொள்ள நான் வருஷக்கணக்கில் முயற்சிகள் எடுத்ததுண்டு; ஆனால் என்னுடைய முயற்சி வீணாகவில்லை. தமிழை விட ஆங்கிலத்தில் இந்த வசனம் எளிதாக புரிந்து கொள்ளுகிற விதத்தில் அமைந்திருக்கிறது. *Faith is the substance of things hoped for, the evidence of things not seen.* நாம் எதை எதிர்பார்க்கிறோமோ, என்ன வேண்டுமென்று ஆசைப்படுகிறோமோ, அதற்கான விதை தான் விசுவாசம். நாம் ஆசைப்படுகிற காரியம் எதுவும் இன்றளவும் நடக்கவில்லை, இன்னமும் அது எதிர்காலத்திற்குள் தான் இருக்கிறது. என்றாலும் அதற்கான விதையாக விசுவாசம் செயல்படுகிறபடியினால்; நிச்சயமாக அது ஒரு நாள் நம் கண் முன் வந்துவிடும் என்று மனம் நம்புகிறது.

கடந்த காலத்தில் நடந்து முடிந்த காரியங்கள் எல்லாமே நம்முடைய விசுவாச விதையிலிருந்து முளைத்த காரியங்கள் தான். ஆனால் நம்மையும் அறியாமல் நடந்த காரியங்கள் அவை. விசுவாசம் என்றால் என்னவென்றே தெரியாத கடந்த காலங்களிலும் நாம் நம்மையறியாமல் அதை செயல்படுத்தி வந்திருக்கிறோம். ஆனால் என்னவென்றே தெரியாத ஒரு காரியத்தை, நம்மால் புரிந்து கொள்ள முடியாத காரியத்தை நம்மையறியாமல் கையாள்வது மிகவும் எளிதான ஒன்று தான். அது மிக மிகத் தற்செயலாக நடந்து முடிந்து விடுகிறது. ஆனால் அதன் விளைவுகள் மிக மிக மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தி விடுகிறது. காரணம் விசுவாசம் எதற்காக தேவனால் வடிவமைக்கப்பட்டு மனித மூளைக்குள் (மனதிற்குள்) வைக்கப்பட்டிருக்கிறது என்பது புரியாத காரணத்தினால், அதன் செயல்பாடுகளிலும் பல பின்னடைவுகள் இருக்கின்றன.

நம்முடைய வாழ்க்கையின் பல்வேறு காலகட்டங்களில், பலவிதமான மோசமான சம்பவங்களை நாம் சந்தித்ததற்கும், நம்முடைய வாழ்க்கை கெடுக்கப்பட்டு, அழிந்து போனதற்கும் இது தான் காரணம்.

ஆனால் புரிந்து கொண்டு செயலாற்றும் போது; நம் எதிர்கால வாழ்க்கையை பிரகாசமாக்கிவிட நம்மால் முடியும். தற்சமயம் நம் கையில் எதுவுமில்லாமல் இருக்கலாம். பணமோ, சுகமோ, பெலனோ, சந்தோஷமோ, சமாதானமோ ... இப்படி எந்த நன்மைகளும் இல்லாமலிருக்கலாம். ஆனால் அதற்காகக் கவலைப்பட்டு நாடியில் கையை வைத்து வானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. நாம் என்னவெல்லாம் வேண்டுமென்று ஆசைப்படுகிறோமோ; அவைகளெல்லாமே எதிர்காலத்திற்குள் தான் இருக்கிறது. ஆனால் அவைகளெல்லாம் தானாக நம் வாழ்க்கைக்குள் நுழைந்து விடாது. அப்படி நுழைவதாக இருந்தால் யாருக்குமே எந்த பிரச்சனையும் இருந்திருக்காது. நாம் எதிர்பார்த்திருக்கும் சகல நன்மைகளின் விதைகளை நாம் தான் நம் மனதில் போட்டு விளைய வைக்க வேண்டும். அதற்குத் தான் விசுவாசம் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

நாம் என்ன வேண்டுமென்று விரும்புகிறோமோ, எதை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோமோ அதற்கான விதை தான்*(substance)* விசுவாசம். நாம் எதிர்பார்த்திருக்கிற அந்த குறிப்பிட்ட காரியத்தை இன்னும் நம் கண்களால் பார்க்கவில்லை தான். என்றாலும் அதற்கான விதை விசுவாசம் என்ற வடிவில் தயாராக இருப்பதால்; நிச்சயமாக அதன் பலனை (விளைச்சலை) எதிர்காலத்தில் எதிர்பார்க்கலாம். நம்முடைய விசுவாசம் நம்மை ஏமாற்றாது. ஒரு மாதளம்பழத்தின் விதை விதைக்கப்பட்டால் நிச்சயமாக ஒரு குறிப்பிட்ட காலத்திட்டத்தில் அது மாதளம் மரத்தைத்தான் முளைத்தெழும்பச் செய்யும். அதற்குப் பதிலாக ஒரு மாமரத்தையோ, கொய்யாமரத்தையோ துளிர்க்க வைத்து நம்மை ஏமாற்றுவதில்லை. ***“...மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். கலா. 6:7 ...நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம். கலா. 6:9.”*** விசுவாசம் என்றால் என்ன? அது எப்படி வேலை செய்கிறது என்பதைப் புரிந்து கொண்டால் ...சொல்லவே வேண்டாம். நீங்கள் என்னவெல்லாம் வேண்டுமென்று ஆசைப்பட்டீர்களோ; அவையெல்லாவற்றையும் அதனதன் காலத்தில் உங்கள் கண் முன்னால் கொண்டு வந்து நீங்கள் நிறுத்தப்போவது உறுதி.

## ***விசுவாச இயக்கம்:***

இதுவரையிலும் நம் வாழ்க்கையில் நடந்தது எதுவுமே தற்செயலானது அல்ல; எல்லாமே இந்த விசுவாச விதையிலிருந்து தான் ஆரம்பமானது. நம்முடைய தேவன் ஒரு விசுவாசத்தின் தேவன்; அதாவது விசுவாசத்தின் மூலம் செயல்படும் தேவன். நம்மையும் அச்சு அசலாக அவரைப்போலவே உருவாக்கிவிட்டதால் நாம் இந்த விசுவாசம் என்ற மூலாதார காரியத்திலிருந்து *(concept)* தப்பித்துக் கொள்ள முடியாது. விசுவாசமில்லாமல் நம்மால் இயங்க முடியாது. விசுவாசமென்றால் என்னவென்றே தெரியாத நபரும் இந்த விசுவாசத்தின்படி தான் இயங்குகிறார். ஒரு கிறிஸ்தவராகவோ, விசுவாசியாகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை; தேவனையறியாத ஒரு சாதாரண உலக மனிதனும் தன்னுடைய நினைவுகளை இந்த விசுவாசத்தினடிப்படையில் தான் இயக்குகிறான். ஆனால் விசுவாசம் என்றால் என்னவென்றே தெரியாமல் இயக்குகிறான். அதனால் தொடர்ச்சியாக நம்பிக்கொண்டேயிருக்கிற காரியங்களை ஒரு நாள் மனம் நிஜமாகவே கண் முன்னால் கொண்டு வந்துவிடும் என்ற உண்மை தெரியாததினால் கண்டதையும் யோசிக்கிறான். அதனால் வாழ்க்கையில் கண்டதும் நடக்கிறது, நல்லதும் நடக்கிறது, கெட்டதும் நடக்கிறது. கெட்ட காரியங்களுக்கு மனம் அனுகூலமாக இருக்கிறபடியினால் கெட்டது அதிகமாக *(majority)* நடக்கிறது. கெட்டதை யோசிப்பதற்கு யாரும் சொல்லிக்கொடுக்க வேண்டிய அவசியமில்லை; குழந்தை பருவத்திலிருந்தே அது தானாக நடக்கிறது. ஆனால் நல்லதை யோசிக்கச் சொல்லி யாராவது சொல்லிக் கொடுக்க வேண்டியதாயிருக்கிறது, அதற்கு பயிற்சி கொடுக்க வேண்டியதாயிருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் இதைத்தான் நமக்குக் கற்றுக் கொடுத்து வருகிறார், வேதமே அதற்கு ஆதாரம்.

தேவன் எப்படியோ நாமும் அப்படித்தான்; அவர் எப்படி இயங்குகிறாரோ அப்படித்தான் நாமும் இயங்கியாக வேண்டும், வேறு வழியில்லை. ***"... தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாகயிருந்தது; (it was very good) ... ஆதி 1:31."*** தேவன் உருவாக்கிய எல்லாமே மிகவும் நன்றாக இருந்ததற்குக் காரணம்; அவர் எல்லாவற்றையும் உருவாக்குவதற்கு முன்னதாகவே தன்னுடைய மனதில் மிக நன்றாகத் திட்டமிட்டார். தான் நினைத்தபடியே நடக்கும் என்று விசுவாசித்தார்; அதன்படியே ஆயிற்று. நாமும் கூட தேவனைப் போலவே சிந்தித்தால் நம்முடைய எதிர்காலத்தை மிகவும் நன்றாக ஆக்கிவிட முடியும். ***"கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; (this mind be in you) பி–. 2:5. ...எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது. (we have the mind of Christ) 1 கொரி. 2:16."*** இயேசுவைப் போலவே நாம் சிந்திக்கப் பழக வேண்டும். அது எப்படி? ஆதியாகமம் 1–ஆம் அதிகாரத்தில் அதைப் பார்க்கலாம். தேவன் சொல்லிச் சொல்லி உருவாக்கின எல்லாமே முதலில் அவருடைய மனதில் விசுவாச ரூபத்தில் இருந்தது. தேவன் வானத்தையும் அதிலுள்ள யாவற்றையும், பூமியையும் அதிலுள்ள யாவற்றையும் பற்றி மிக நேர்த்தியாக தன் மனதில் திட்டமிட்டு பேசுவதைப் பார்க்கிறோம். இதைத்தான் நாமும் முயற்சிக்க வேண்டும்.

இப்போது நம்மிடம் உள்ளது எதுவானாலும் சரி; அது இது வரை நாம் நினைத்த எண்ணங்களின் பரிணாம மாற்றம் தான். அதனால் நம்முடைய மனதை பாதுகாத்து பராமரிப்பது அவசியம். ***"ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள். நீதி. 3:13. ஞானமே முக்கியம், ஞானத்தை சம்பாதி; என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக்கொள். நீதி. 4:7. பொன்னைச் சம்பாதிப்பதிலும் ஞானத்தைச் சம்பாதிப்பது எவ்வளவு உத்தமம்! வெள்ளியைச் சம்பாதிப்பதிலும் புத்தியைச் சம்பாதிப்பது எவ்வளவு மேன்மை! நீதி. 16:16"***

மனதிற்குள் நல்ல காரியங்களைப் போடுவதின் மூலமாக அதைப் பாதுகாத்து பராமரிக்க முடியும். கண்டதையும் கொட்டினால் அது குப்பைத் தொட்டியாக மாறிவிடும். மனதிற்குள் சரியானதைப் போட்டால் அது சரியான பாதையில் நம்மை நடத்தும்; தவறானதைப் போட்டால் பாதை மாறச் செய்து நம்மைக் கொண்டு போய் நடுக்காட்டில் நிறுத்தி விடும். நாம் திக்குத் தெரியாத காட்டிற்குள் வந்து சேர்ந்தது இப்படித்தான். யாரோ அல்ல நாமே தான் நம் தலை மேல் மண்ணையள்ளிக் கொட்டிக் கொண்டோம்.

## எழுப்புதலின் மூலஸ்தானம்:

உலகம் கல்வியை முக்கியப்படுத்துவதற்கு காரணமும் இது தான். நான்கு வயது முதல் 22 வயது வரையிலும் பிள்ளைகளை படிக்கச் சொல்லி கட்டாயப்படுத்தி பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவதற்கு காரணம் இருக்கிறது. மனதைக் கைப்பற்றி, அதைக் கீழ்ப்படுத்தி, ஆளுகை செய்து, பண்படுத்தி, காத்து, அதன் பலனால் பூமியை நிரப்புகிற வேலையை கல்விக்கூடங்கள் செய்கிறது என்றால் அதை மறுக்க முடியாது. உலகக் கல்வியில் ஆயிரம் பிரச்சனைகள், குறைவுகள் இருந்தாலும் படிப்பு மனிதனை சீர்திருத்துகிறது என்பதை மறுக்க முடியாது. படித்தவர்கள் நன்றாகத்தான் இருக்கிறார்கள் என்பதையும் மறுக்க முடியாது; ஒரு சில விதிவிலக்குகள் இருக்கலாம். மனதைச் சரியாக வைத்துக் கொண்டால்; அதில் சரியானதை ஏற்றிவிட்டால், பிறகு எல்லாம் நல்ல விதமாக நடக்கும் என்பதை எல்லா மனிதர்களும் கணித்து வைத்திருக்கிறார்கள்.

இக்காலங்களில் தேவசபைக்கும் இதைப்பற்றின வெளிப்பாடு கிடைத்து வருகிறது; இதைத்தான் எழுப்புதல் என்று வேதம் அறிவுறுத்துகிறது. இதற்கு முன்னதாக எழுப்புதலைப் பற்றி எத்தனையோ பிரசங்கங்கள் கேட்டு எதையெதையோ மனதில் ஏற்றி வைத்திருப்பீர்களானால்; அவற்றையெல்லாம் தைரியமாக அழித்து விடலாம். ***"எந்த ஸ்திரீகளுடைய இருதயம் ஞான எழுப்புதல் அடைந்ததோ, (whose heart stirred them up in wisdom) ... யாத் 35:26."*** எழுப்புதல் என்பது மனதளவில் ஏற்படுகிற ஒரு மாற்றத்தைக் குறிக்கிறது.

இயேசுவின் மூலமாக பிதாவாகிய தேவன் சிலுவையில் ஏற்படுத்தின புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களடங்கிய பிரசங்கங்களைக் கேட்கும் போது மனதளவில் ஏற்படுகிற மாற்றம் மிகப் பயங்கரமானது, பிரமாண்டமானது. அது மனதைத் தூண்டிவிட்டு புதிய காரியங்களுக்குத் தயார் செய்கிறது. அசைவற்று படுத்துக்கிடந்த ஆத்துமாவிற்கு அது இயக்கத்தைக் கொடுக்கிறது; செத்த உணர்வுகளுக்கு உயிர் கொடுக்கிறது. நமக்குள் உறங்கிக் கிடந்த மகிமையை எழுப்பி விடுகிறது. பெரிய அளவிலான முயற்சிகளை எடுக்கச் சொல்லி மனம் நம்மை ஊக்கப்படுத்த ஆரம்பிக்கிறது. மனம் ஒரு உந்து விசையாக மாறி வாழ்க்கையில் முன்னேற உதவி செய்கிறது. மொத்தத்தில் சொல்லப்போனால் மனம் மிகவும் நல்லதாக, அழகானதாக, நிறைவானதாக மாறிவிடுகிறது. இன்னும் சுருக்கமாகச் சொல்லப்போனால்; தேவன் மனிதனின் மூளையில் சிந்திக்கும் ஆற்றலையுடைய மனம் என்கிற பகுதியை எதற்காக வைத்தாரோ; அந்தக் காரணத்தை சரியாக நிறைவேற்றும் தகுதியை மனம் பெற்றுக் கொள்கிறது, இதுதான் எழுப்புதல். தேவன் மனிதனுக்குள் மனதை வடிவமைத்த நோக்கத்தை அது நிறைவேற்ற ஆரம்பித்துவிட்டதென்றால் வேறென்ன வேண்டும்? தேவனுடைய திட்டம் மடமடவென்று பூமியில் நிறைவேற ஆரம்பித்து விடும்.

## தலைவிதியை மாற்றுவோம்:

கிறிஸ்தவத்தின் அடிவாரமான விசுவாசமே மனம் சம்பந்தப்பட்ட காரியம் தான். நிழல் நிஜமாகும் கதை தான் விசுவாசத்தின் கதை. ஆவி ரீதியில், கண்களால் காணக்கூடாத காரியங்களை கண்களால் காணக்கூடிய அளவில் கொண்டு வருவதற்கு விசுவாசம் தான் பாலம் போடுகிறது. ஆசை போவது விண்ணிலே, கால்கள் போவது மண்ணிலே, பாலம் போடுங்கள் யாராவது ... என்ற சோகப்பாடல்கள் தேவையில்லை. இயேசு வந்து விசுவாசப் பாலம் போட்டு விட்டார். இந்த விசுவாசம் என்பது ஒரு பிரமாணம் என்று பார்த்தோம். இந்தப் பிரமாணத்தின்படி தான் நாம் இயங்குகிறோம்; அதாவது நம்முடைய மனம் இயங்குகிறது. நீங்களே கொஞ்சம் யோசித்து நிதானித்துப் பாருங்கள். நம்முடைய வாழ்க்கையில் இதுவரையில் நடந்ததில் ஒன்று கூட நம் மனதைத் தாண்டி வரவில்லை. நடந்த எந்தவொரு காரியமானாலும் சரி; அது நடப்பதற்கு முன்னதாகவே நம்முடைய மனத்திரையில் சினிமா போல ஓடிக் கொண்டிருந்தது என்பதை யூகிக்க முடியும்.

எல்லாவற்றையும் நாம் தான் இழுத்துக் கொண்டு வந்தோம்; யாரோ வந்து நம் வாழ்க்கையில் குப்பையைக் கொட்டிவிட்டுப் போகவில்லை. எல்லாவற்றுக்கும் நீ தான் காரணம், அவன் தான் காரணம்... என்றெல்லாம் புலம்புவது சரியானதல்ல. அது நாம் தப்பித்துக் கொள்வதற்காக

பேசப்படுகிற மழுப்பல் வார்த்தைகள் தான். எல்லாவற்றுக்கும் நான் தான் காரணம், என் தலையில் நான் தான் மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டேன் என்று ஒத்துக் கொவதற்கு அவ்வளவு எளிதாக யாருக்கும் மனசு வருவதில்லை; காரணம் மனதுக்குள் ஒளிந்திருக்கும் பெருமை! நம்மேல் குற்றம் இல்லை என்று நிரூபிப்பதற்காக என்னவெல்லாமே பேசி; எதிரில் உள்ளவரை உண்டு இல்லையென்று ஆக்கும் வரை ஓய்வதில்லை.

விசுவாசம் என்ற அற்புதமான பரலோக சக்தியை (மனோசக்தி, கற்பனை சக்தி) பற்றின தெளிவில்லாத காரணத்தினால் வாழ்க்கை ஏடாகூடமாகிப் போனது. அதைச் சரிப்படுத்தி சரியான பாதையில் கொண்டு வந்து நிறுத்துவதற்கும் இந்த விசுவாச சக்தி தான் வந்தாக வேண்டும். எல்லாம் அவரவர் தலைவிதிப்படித்தான் நடக்கும் என்பது சரியாக புரிந்து கொள்ளப்படாத ஒரு பேச்சுவழக்கு (பழமொழி) யாகும். தலைவிதியை எழுதியது யார்? தேவனா? இல்லவேயில்லை. தலையில் … அதாவது தலைக்குள் உள்ள மூளையின் நினைவுப் பகுதியில் … மனதில் நம்முடைய வாழ்க்கையின் விதிமுறைகளை நீயும் நானும் தான் எழுதினோம். அதைத்தான் தலைவிதி, அல்லது விதி என்கிறோம். எப்படி எழுதினோம்? நம்முடைய நினைவுகளால் எழுதினோம், வார்த்தைகளால் எழுதினோம். நாம் அதில் என்ன எழுதினோமோ அதன்படி தான் வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கிறது. அதை மாற்ற முடியாது என்பது நூற்றுக்கு நூறு உண்மை.

ஐய்யையோ அப்படியானால் தப்பிக்க வேறு வழியே இல்லையா என்று ஓலமிடும் மனதுக்கு ஒரு ஆறுதல் வார்த்தை; கண்டிப்பாக இருக்கிறது. அது நம்முடைய தலையில் … மூளையில் … மனதில் நம்முடைய விதியை மாற்றி நாம் தான் எழுதியாக வேண்டும். தலையெழுத்து என்று இதற்கு இன்னொரு வார்த்தையும் வழக்கத்தில் இருக்கிறது. இது இன்னும் ஆழமான அர்த்தமடங்கியது. நம்முடைய நினைவில் காரியங்கள் படமாக இருந்தாலும் அது வாய்வழியாக வெளியே வரும் போது வார்த்தையாகவும், அந்த வார்த்தைகள் எழுத்துக்களாக இருப்பதும் நமக்கு தெரிந்த காரியங்கள் தான்.

நம்முடைய தலையெழுத்தை மாற்றியெழுத தேவையான உபகரணங்கள் நம்முடைய மூளையிலும், நாக்கிலும் தான் இருக்கிறது. அதில் எதையெல்லாம் எழுத வேண்டுமென்றால் … வேறென்ன, இதுவரையிலும் நாம் கற்றுக் கொண்ட இப்படிப்பட்ட காரியங்களைத் தான். உதாரணமாக: இதுவரையிலும் நான் எதைச் செய்தாலும் உருப்படாது என்று நம்மைப் பற்றின ஒரு தவறான வாக்கியத்தை நம் மனதில் எழுதியிருப்போம். அப்படியே இதுவரையிலும் நடந்து கொண்டேயிருக்கும். இனி மேல் தான் ஒன்று செய்ய வேண்டும். ***"… அவன் (நான்) செய்வதெல்லாம் வாய்க்கும். சங். 1:3" (Whatsoever he do shall prosper)*** என்ற வசனத்தை எடுத்து மனதில் எழுத வேண்டும். இது முன்னதாக நாம் எழுதியிருந்த தவறான வாசகத்தை அழித்துவிட்டு; அதன் இடத்தை பிடித்துக் கொள்ளும். இனியென்ன, இந்த புதிய வார்த்தையின் படி நம்முடைய வாழ்க்கை இயங்க ஆரம்பிக்கும்; நாம் தொட்டதெல்லாம் பொன்னாகும்.

## மூளையில் பதிக்கப்பட்ட Hard disk:

நாம் வரும்போது எதையும் கொண்டு வந்ததில்லை, போகும் போது எதையும் கொண்டு போகப் போவதும் இல்லை என்று சொல்வது சாத்தானுடைய முழுப்பொய். அதை மகா அலெக்சாண்டர் நம்பினார் என்பதற்காக நீங்களும் நானும் நம்ப வேண்டிய அவசியமில்லை. பெண்ணை கல்யாணம் முடித்து புகுந்த வீட்டுக்கு அனுப்பும் போது தாய்வீட்டுச் சீதனத்தை லாரியில் ஏற்றி அனுப்புகிறோமே … நீங்களே இப்படியென்றால்; தேவன் அவருடைய பிள்ளைகளாகிய நம்மை வெறுங்கையோடு பூமிக்கு அனுப்புவாரா? நிச்சயமாக இல்லை. அவருடைய தெய்வத்துவத்தின் பரிபூரணத்தை நம்முடைய ஆவியில் (உள்ளான மனிதனில்), அவனுடைய மூளையில் வைத்து தான் அனுப்பினார். நாம் பூமியில் வந்து மனிதனாக பிறக்க வேண்டிய காரணம், நம்மைப் பற்றின திட்டம், அதை வெற்றியாக முடிக்க வேண்டிய விதிமுறைகள் எல்லாம் அடங்கிய *software & hardware (hard disk)* ஐ மூளையில் பதித்து தான் அனுப்பினார். தேவனுக்குள் என்னென்னவெல்லாம் அடங்கியிருக்கிறதோ; அதுவே தான் மனிதனுக்குள்ளும் அடங்கியிருக்கிறது. தேவனுடைய தரத்தை குறைத்து மதிப்பிடுகிறதாக நினைத்து

விடக்கூடாது. அவர் நம்மை அவரைப்போலவே உருவாக்கியிருக்கிறார் என்று நினைத்தால்; என் மனதில் அவரைப் பற்றின மதிப்பு கூடத்தான் செய்கிறதே தவிர குறையவில்லை. ஒரு யானை தன்னுடைய குட்டியை யானையாகப் போடாமல் பூனையாகப் போட்டால்... அந்த பூனை அந்த யானையைப் பற்றி என்ன நினைக்கும்? நீங்களே யோசித்து பார்த்துக் கொள்ளுங்கள்.

தேவன் நம்முடைய மூளை என்ற கம்ப்யூட்டரில் வைத்திருக்கும் அந்த *hard disk* எல்லாமே இருக்கிறது. அதில் இல்லாத ஒன்றை நீங்கள் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. ஒரு *hard disk* க்குள் இதெல்லாம் இருக்கிறது: கவனியுங்கள் **... computer software: accumulator, application, bit map, buffer, cursor, database, directory, memory, program, RAM, ROM, spell checker, spreadsheet, subdirectory, wallpaper**

**Computer hardware: CD-ROM, central processing unit, chip, disk, diskette, floppy disk, hard disk, integrated circuit, joystick, keyboard, microchip, microprocessor, modem, monitor, motherboard, mouse, numeric keypad, printer, processor, sound card, space bar.** இதைப் போலவே சகலத்தையும் நம் மூளைக்குள் வைத்து தான் அனுப்பியிருக்கிறார். நாம் பூமிக்கு அனுப்பப்பட்ட நோக்கம் நிறைவேற தேவையான எல்லாம் அதில் இருக்கிறது. நம்மைக்குறித்த தேவதிட்டம் நிறைவேறுவதற்குத் தேவையானதெல்லாம் அதில் உண்டு. இந்தப் பூமியைச் சுதந்தரிக்க, அதைக் கீழ்ப்படுத்த, ஆளுகை செய்ய, பண்படுத்த, காக்க, அதன் பலனைப் பெற, அதைக் கொண்டு பூமியை ஏதேனாக்க தேவையானதெல்லாம் அதில் உண்டு. நம் அப்பா தேவைக்கதிகமான தாய்வீட்டுச் சீதனங்களைக் வண்டி வண்டியாக ஏற்றி அனுப்பினார். புகுந்த வீட்டுக்குப் போன மகள்; சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டு அங்கே வாழமுடியாமல் திரும்பினால் எந்த தகப்பனுக்காவது சந்தோஷமாயிருக்குமா? உலகம் அவளை வாழாவெட்டி என்று தானே சொல்லும்? அதற்காக அல்ல, நம்மை வாழ்ந்து காட்டவே தேவன் அனுப்பினார் என்பதை அழுத்தமாக நினைவில் வைப்போம்.

நம்முடைய மூளைக்குள் இருப்பதை உலகத்திற்குள் அனுப்பி நாம் தான் வேலை பார்க்க வேண்டும். **ஒரு கம்ப்யூட்டர் நம் கையில் இருப்பதைப் போல நாம் தேவனுடைய கையில் இருக்கிறோம். கம்ப்யூட்டர் மூலம் செய்ய முடியாத காரியம் எதுவுமில்லை தான்; என்றாலும் எல்லாவற்றையும் அது மனிதனின் மேற்பார்வையில் தான் செய்கிறது. மனிதனால் எல்லாம் செய்ய முடியும் தான்; அவனுடைய மூளை ஒரு அற்புதம், என்றாலும் எல்லாவற்றையும் தேவனின் மேற்பார்வையில் தான் செய்தாக வேண்டும். கம்ப்யூட்டர் இந்த அளவுக்கு பூமியை ஆட்டிப்படைக்கிறதென்றால்; அது மனிதனால் தான். தேவையானதை அதற்குள் வைக்காவிட்டால்; அது எதற்கும் லாயக்கில்லாததாக இருக்கும். மனிதன் பூமியையும், ஏழேழு உலகங்களையும், அண்டசராசரத்தையே ஆட்டிப்படைக்கிறான் தான். என்றாலும் தேவன் தேவையானதை அவனுடைய மூளையில் வைக்காமல் இருந்திருந்தால் அவனுடைய நிலைமையென்ன?**

## புரியாத புதிராகிப் போன தேவன்:

*Be careful how you think; your life is shaped by your thoughts (Pro. 4:23)* நம்முடைய வாழ்க்கையை செதுக்கக்கூடிய செதுக்குக் கருவிகளை நம் மனம் தான் தயாரிக்கிறது; நம்முடைய நினைவுகள் உளிகளாகின்றன. நம்முடைய மனதை பாதுகாப்புடன் இயக்க தேவன் அவசியம்; நம்முடைய பாதுகாப்பு அரண் *(safemode)* இயேசு தான். இயேசுவை வைத்து நம்முடைய நினைவுகளை ஒரு வட்டப் பாதையில் சுழல வைக்க வேண்டும். ஏற்கெனவே இயக்கத்தில் இருக்கிற இந்த காரியத்தை அறிந்து கொள்ளாமல் இருப்பது தான் கிறிஸ்தவர்களின் தோல்விக்கு காரணம். ***"... கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே ... கொலோ. 1:27." which is Christ in you*** தனக்குள் இருக்கும் இயேசுவை அம்போ என்று விட்டு விட்டு; எங்கெங்கோ போய் அலைந்து திரியும் மனம் ...! பொறுப்பில்லாமல் ஊரைச் சுற்றிவிட்டு வரும் பிள்ளையைப் பார்த்து; எங்கே போய் சோவாரிட்டு வர்ரே? என்று திட்டும் கிராமப்புற சொல் வழக்கை கேட்டிருப்பீர்கள். இப்படிப்பட்ட பிள்ளைகளால் யாருக்கு என்ன லாபம்? தலைவலி தான் மிச்சம். நமக்கும், நம் குடும்பத்திற்கும், நாம் வாழும் சமுதாயத்திற்கும், சபைக்கும், தேவ இராஜ்ஜிய கட்டுமானத் திட்டத்திற்கும்

பிரயோஜனமுள்ளவர்களாக வாழ நம் மனதுக்கு பயிற்சி கொடுப்போம்.

இன்றளவும் தேவன் ஒரு புரியாத புதிராகத்தான் சபை விசுவாசிகளின் மனதில் இருக்கிறார். புதிதாக்கப்படாத மனதில் தேவனைப் பற்றிய தெளிவில்லை. ஆனால் தங்களுடைய வாழ்க்கையில் மட்டும் எல்லாவற்றையும் தேவன் சரியாக நடத்த வேண்டும் என்று இவர்கள் எதிர்பார்ப்பது எந்த விதத்தில் நியாயம்? மனதில் இருக்கிற குழப்படி தேவனால் உங்களுக்கு எப்படி உதவி செய்ய முடியும்? தேவனை பயங்கரப்படத்தக்கவராக நான் நினைத்திருந்த அந்நாட்களில் நான் ஜெபித்த காரியங்களை இப்போது நினைத்துப் பார்க்கிறேன். தேவநீதி, கிருபை, பிரமாணம், விசுவாசம், மறுரூபம், இலக்கு, தரிசனம், வெளிப்பாடு, எழுப்புதல், ... இப்படி நூற்றுக்கணக்கான வேத வார்த்தைகளுக்கு அர்த்தமே தெரியாமல்; ஆனால் அந்த வார்த்தைகளையெல்லாம் அடுக்கடுக்காக ஜெபத்தில் கொட்டி தீர்த்தது நினைவுக்கு வருகிறது.

***“தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, 2 பேது. 1:3.”*** **நம்முடைய தேவன் யார்? எப்படிப்பட்டவர்? நமக்கும் அவருக்கும் உள்ள தொடர்பு நிலை என்ன? நமக்காக இயேசுவின் மூலம் என்னவெல்லாம் செய்திருக்கிறார்? நாம் சேவிக்கிற தேவனைப் பற்றின சரியான அறிவிருந்தால் தான் (mutual understanding); நம்முடைய தேவைகளையெல்லாம் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.** இந்த வசனத்தை *reverse-ல்* திருப்பிப் போட்டுப் பார்த்தால் புரியும். **தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறியாமல் போனால், ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தராது.** நாம் எவ்வளவோ ஜெபம் பண்ணியும், எப்படியெல்லாமோ ஜெபம் பண்ணியும் கணக்கிலடங்காத ஜெபக்குறிப்புகளுக்கு பதில் கிடைக்காமல் போனதற்கு இதுதான் காரணம்.

தேவனுடைய வழிகள் நம்மால் ஆராயக்கூடிய ஒன்று தான்; அவரை நம்மால் புரிந்து கொள்ள முடியும். அவர் எப்படிப்பட்டவர், எப்போது எதைச் செய்வார் ... எதைச் செய்ய மாட்டார் என்றெல்லாம் நம்மால் யூகிக்க முடியும். எது அவருடைய சித்தம், எது சித்தமல்ல என்று பிரித்துப் பார்க்க முடியும். **அவரைப் போல் நாமிருக்கிறோமென்றால்; நம்மைப் போலவும் அவர் இருக்கிறார் என்பது தான் உண்மை. நம்முடைய நிலைமையைப் பார்த்து; ஏதோ தீண்டத்தகாத புழு பூச்சியைப் போல அருவெறுப்படைந்து நம்மை உதறித் தள்ளிவிடுகிற தேவனாக அவரைப் பார்க்கின்ற விபரீதக் கற்பனைகளெல்லாம் இனித் தேவையில்லை.**

## *மனம் ... அது ஒரு நாடக மேடை:*

பிறந்த நாள் முதல் இதுவரையிலும் கேட்ட பிரசங்கங்களினால் தேவனைப் பற்றின மகா மட்டமான எண்ணங்கள், யோசனைகள், அபிப்பிராயங்கள் ஆழ் மனதுக்குள் பதுங்கிக் கிடக்கின்றன. ஆனால் உதட்டளவில் பாட்டுகள் மட்டும் இயேசு நல்லவர் என்று! இந்த மாய்மாலம் தான் (நடிப்பு) மனுஷனுக்கு பிரச்சனை. தேவனை கெட்டவர் என்று நினைப்பீர்களானால்; கெட்டவர் என்றே சொல்லிவிட்டுப் போங்கள்; ஒன்றும் பிரச்சனையில்லை. மனதில் ஒன்றை வைத்து வெளியில் ஒன்றைப் பேசும் போது தான் பிரச்சனை ஆரம்பமாகிறது. நடிப்பு தேவையில்லாத மனஅழுத்தத்தையும், இறுக்கத்தையும் கொண்டு வந்து மனதின் செயல்பாட்டைக் கெடுக்கிறது. அழுத்தமடைந்த மனதில் இருந்து திக்கித்திணறியபடி வெளியேறும் நினைவுகளால் எவ்வித நன்மையுமில்லை. தேவன் நல்லவர் என்ற வெளிப்பாட்டை பெற்றுக் கொள்ளும்போது; சரியானதை அறிக்கை செய்தால் போதும், அதுவரையிலும் தேவன் பொறுமையோடு காத்திருப்பார்.

தேவனைப் பற்றின மோசமான அபிப்பிராயங்களுக்குக் காரணம்; இன்னும் நியாயப்பிரமாணத்திற்குள் இருந்து வெளியேறாமல் இருப்பது தான். நியாயப்பிரமாணம் இன்றளவும் சிலுவையில் அறையப்படாத இயேசுவையும், தேவனுடைய கோபாக்கினையையுமே பிரசங்கிக்கிறது. அதைக் கேட்பவர்களின் மனம் சிலுவையில் அறையப்படுமுன் பூமியில் சுற்றித் திரிந்த இயேசுவையும்,

பழைய ஏற்பாட்டின் காலத்தில் தேவனின் செயல்பாடுகளையுமே சுற்றிச்சுற்றி வருகிறது. தேவன் தான் வியாதியைத் தருகிறார் என்று நம்புகிற இவர்கள்; பிறகு ஏன் வியாதியை விரட்ட டாக்டரிடம் போகிறார்கள்? தேவன் தந்ததை பத்திரமாக வைத்திருக்க வேண்டியது தானே. நடப்பதெல்லாவற்றிற்கும் தேவன் தான் காரணம், நல்லதோ கெட்டதோ வியாதியோ தரித்திரமோ இதுவோ எதுவோ எல்லாமே தேவனிடமிருந்துதான் வருகிறது என்று நினைக்கிற எந்வொரு விசுவாசியின் ஆழ்மனதிலும் தேவனைப் பற்றிய நல்ல அபிப்பிராயம் இல்லை என்பதே உண்மை.

*"... நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் (schoolmaster) இருந்தது. விசுவாசம் வந்த பின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே. கலா. 3: 24, 25."* நியாயப்பிரமாண சட்டத்திட்டங்களால் நாம் கசக்கிப் பிழியப்படும் போது; நிச்சயமான மனதில் தேவனைப் பற்றிய நல்லெண்ணங்கள் தலை தூக்காது. பிரம்பை எடுத்து அடி வெளுக்கும் போது வாத்தியாரைப் பார்த்தால் மனதில் என்ன தோன்றும்? இந்த ஆள் ஒழிந்து போனால் நன்றாயிருக்கும் என்று தான் தோன்றும். ***மூளைச் சலவைச் செய்யப்பட்டு, தலையாட்டி பொம்மைகளாக, பூம் பூம் மாடுகளாக, கிணற்றுத் தவளைகளாக, மதில் மேல் பூனைகளாக, குண்டுச்சட்டி குதிரைகளாக இருக்கிற விசுவாசிகளின் பரிதாப நிலைமையை மாற்றவே இயேசு வந்தார் கிருபை பிரமாணத்துடன்.***

இயேசு வரும்போது வெறுங்கையாக வரவில்லை; தன்னுடன் தேவ இராஜ்ஜியத்தையும், அதைக்குறித்த இரகசியங்களையும் கொண்டு வந்தார். *"... பரலோக ராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, அவர்களுக்கோ அருளப்படவில்லை. மத். 13:11."* எங்களுக்கு கிருபையாக அருளப்பட்ட அந்த இரகசியங்களைத் தான் இப்போது சொல்லிக் கொண்டு வருகிறோம். அவர்களுக்கு ஏன் அருளப்படவில்லை? பதில்: *"இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும் படியாக, அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; ... மத். 13:15."* அதாவது கிருபையைப் புரிந்து கொள்ளாமல்; சட்ட திட்டங்களை மனசு நிறைய அடுக்கி வைத்திருக்கிறார்கள். அதனால் இயேசுவுக்கு அங்கே இடமில்லாமல் போய்விட்டது.

கிறிஸ்துவின் சிலுவைக்கு முன்னதாக இயங்கி வந்த நியாயப்பிரமாண சட்டதிட்டங்களை சாப்பிட்டு சாப்பிட்டு மனசுக்குள் பெருமை என்ற கொழுப்பேறிவிட்டது. நாமும் கூட முற்காலங்களில் இப்படிப்பட்ட நிலைமையில் இருந்ததை நிதானித்துப் பார்த்தால் புரியும். சரீரத்தில் தேவையற்ற கொழுப்பு அதிகப்படியாகச் சேரும் போது அது உடல் நலத்தைக் கெடுத்துப் போடுவதைப் போலத்தான் இதுவும். சரீரம் பருத்து, வயிறு பெரிதாகி, எடை அதிகரித்து, இரத்தக்குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு; கடைசியில் உயிருக்கே ஆபத்தாக முடிகிறது. உள்ளான மனிதனின் மனதிற்கும் இப்படிப்பட்ட பிரச்சனை தான் நடக்கிறது. எத்தனை பிரசங்கம் கேட்டாலும் கிருபையை புரிந்து கொள்ளாமல்; தங்களுடைய சொந்த நீதி நியாயங்களையே பேசிக் கொண்டிருப்பார்கள். தங்களுடைய சாதனைகளால் தேவனைக் கட்டுப்படுத்த முயற்சித்துக் கொண்டிருப்பார்கள்; தங்களை சகலகலா வல்லவர்களாக காட்டிக்கொண்டேயிருப்பார்கள். இப்படிப்பட்டவர்களைப் பற்றி பவுல் சபைக்கு கொடுத்திருக்கும் எச்சரிப்பை பாருங்கள்:

*"லௌகீக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலக வழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல.*

*மாய்மாலமான தாழ்மையிலும், தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று, காணாதவைகளிலே துணிவாய் நுழைந்து, தன் மாம்ச சிந்தையினாலே வீணாய் இறுமாப்புக் கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப்பொருளை நீங்கள் இழந்து போகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப் பாருங்கள்.*

*நீங்கள் கிறிஸ்துவுடனே கூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள் போல, மனுஷனுடைய கற்பனைகளின்படியும், போதனைகளின் படியும் நடந்து: தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைக்கு*

*உட்படுகிறதென்ன?*

*இப்படிப்பட்ட போதனைகள் சுயஇஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கததையும் பற்றி ஞானமென்கிற பேர்கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது. கொலோ. 2: 8, 19, 20, 21, 23"*

## வெளிப்பாடில்லாத பிரசங்கங்கள்: [? ... சிலுவையில் அறையப்படாத இயேசு]

வெளிப்பாடுகளில்லாமல் செய்யப்படும் இப்படிப்பட்ட பிரசங்கங்களைத் தொடர்ச்சியாக கேட்பதினால்; கிறிஸ்துவினால் நமக்கு வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்ள முடியாமல் போகின்ற ஆபத்தான சூழ்நிலைகள் அதிகரிக்கின்றது. ஏனென்றால் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவினால்தான் ஆசீர்வாதங்கள் வருகின்றன. சிலுவையில் அறையப்படாத இயேசுவைப் பற்றி வண்டிவண்டியாக பிரசங்கித்தாலும் இந்தக் காலக்கட்டங்களில் எந்த பிரயோஜனமுமில்லை. அப்படிப்பட்ட பிரசங்கங்கள் பலனளித்த காலகட்டங்கள் கிறிஸ்துவின் சிலுவைப் பாடுகளுக்கு முன்னதாகவே முடிந்து போயிற்று. கிறிஸ்துவுடனே நியாயப்பிரமாண சட்டதிட்டங்களுக்கு மரித்த நாம்; இன்னமும் அதற்கு உயிர் கொடுக்க முயற்சி செய்து கொண்டேயிருப்போமானால்; கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே.

எப்படி ஆசீர்வாதமாக வாழ்வது என்று தெரியாமல் சபைக்குள்ளாக முழித்துக்கொண்டு நிற்கும் குழந்தை விசுவாசிகளிடம் சாத்தான் நேரில் வருவதில்லை, குட்டிச்சாத்தான்களையும் அனுப்புவதில்லை. வெளிப்பாடில்லாமல் உலக ஞானத்தையும், பழைய பாரம்பரியங்களையும், பஞ்சாங்கத்தையும் போதிக்கின்ற ஒரு ஊழியக்காரனை அனுப்பிவிட்டு நிம்மதியாக வேறுவேலையைப் பார்க்கப் போய்விடுகிறான்.

இந்த ஊழியக்காரர் அந்த விசுவாசியை உண்டு இல்லையென்று ஒரு வழியாக்கிவிட்டுத்தான் வெளியே போவார் என்பது அவனுக்குத் தெரியும். வாக்குப்பண்ணப்பட்ட ஆபிரகாமின் ஆசீர்வாதங்களை நாம் சுதந்தரித்துவிடக்கூடாது என்பதற்காக சாத்தானால் திட்டமிடப்பட்ட சதிகளுக்கு இரையாகாமல் எச்சரிக்கையாயிருப்போம்.

## இலட்சியம் நம் இயேசுவே:

நம்முடைய பந்தயப்பொருள்; அதாவது இலக்கு கிறிஸ்து தான். அதாவது இயேசுவுக்குள்ளாக மறைந்திருக்கும் ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள்; அதாவது ஒரு குறைவுமில்லாத செழிப்பான நல் வாழ்க்கை. அதை நாம் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதற்காக இப்போது இயக்கத்திலிருக்கும் கிருபையை விட்டுவிட்டு கிரியைக்குள் நுழைந்துவிடாதபடி எச்சரிக்கையாயிருப்போம். வெள்ளை ஆடை அணிவது, நகை போடாமலிருப்பது, பூ வைக்காமலிருப்பது, செருப்பு போடாமல் இருப்பது, பவுடர், செண்ட் அடிக்காமலிருப்பது, அசைவம் சாப்பிடாமலிருப்பது, காப்பி, டீ குடிக்காமலிருப்பது போன்ற காரியங்கள் பழைய உடன்படிக்கையின் காலகட்டங்களில் கூட இருந்தது கிடையாது. நியாயப்பிரமாணத்தை விட படு மோசமான இந்த ஆளைக் கொல்லும் பிரமாணத்தை எங்கே கண்டுபிடித்தார்களோ தெரியவில்லை. இந்த காரியங்களை முதலில் கண்டுபிடித்தது யார் என்பதை கண்டு பிடித்தால் அவருக்கு அவார்ட் கொடுக்கலாம்! கோடி கோடியான தேவ ஜனங்களை ஒன்றுமில்லாத ஓட்டாண்டியாக்குவதென்பது பெரிய சாதனையில்லையா?

*"... பரலோகராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, அவர்களுக்கோ அருளப்படவில்லை. மத். 13:11."* அவர்களுக்கு இன்னும் பரலோக இராஜ்ஜியத்தின் இரகசியங்கள் கொடுக்கப்படவில்லை, இன்னமும் வெளிப்பாடு இல்லை. அவர்களிடம் இல்லாத காரியங்களை இருப்பதாக நினைத்துக் கொண்டு, அல்லது இருப்பதாக நடித்துக் கொண்டு, சபை

மக்களை ஏமாற்றி, இன்னும் என்னென்னவோ செய்து; அவர்கள் எதிர்பார்த்திருக்கிற நன்மைகளை கொடுக்க முயற்சிக்கிறார்கள். கர்ப்ப வேதனைப்பட்டு அலறி கடைசியில் காற்றைப் பெற்றெடுக்கிறார்கள். ஏசா. 26:18.

இவர்கள் தேவனை அறிந்து கொள்ளவில்லை; அதனால் தேவனைப் பற்றிய அறிவைப் போதிப்பதுமில்லை. ஓரளவுக்கு ஆசீர்வதிக்கப்படுகிறார்கள் தான்; என்றாலும் இவர்களின் ஆசீர்வாதம் தேவனைப் பற்றின அறிவினால் உண்டானதல்ல. இவர்களிடம் காணப்படும் ஐசுவரியம் மற்றும் நன்மையான காரியங்கள் யாவும் வாக்குத்தத்தங்களின் வழியாக வந்தவைகளல்ல. தேவனிடத்தில் ஜெபத்தால் கேட்டவைகள் கிடைக்கும் என்று நம்புகிறார்கள். அந்த நம்பிக்கையை இவர்களின் மனதின் சக்தி ***(mind power)*** நிஜமாக்கித் தருகிறது.

வாக்குத்தத்தங்கள் எல்லாம் தேவன் இயேசுவின் மூலமாக நமக்குக் கிருபையாக அளிக்கப்படுகிற ஒன்று. அப்படியிருக்க, பழைய நியாயப்பிரமாண சட்டதிட்டங்களினாலும், பாரம்பரியங்களினாலும், சுயமுயற்சியினாலும் எப்படி பெற்றுக் கொள்ள முடியும்? பெற்றுக் கொண்டபின்; தங்களுடைய பக்தியை, பரிசுத்தத்தைப் பார்த்து தேவன் இவைகளைத் தந்ததாக நினைத்துக் கொள்கிறார்கள். அதையே சாட்சியாக அறிவித்து அதையே பிரசங்கிக்கவும் செய்கிறார்கள். கேட்கிற சபை மக்கள் அதையே முயற்சிக்கிறார்கள்; முயற்சியின் பலனைப் பெறுகிறார்கள். இதுதான் இக்கால சபைகளில் பெரிய அளவில் நடந்து வருகிறது.

## இனி குழப்பம் தேவையில்லை:

தேவனையறியாத உலக மக்களின் புல்லைப்போன்ற செழிப்புக்குத்தான் இதுவும் ஒத்திருக்கிறது. தேவனையறியாத உலகத்தாரின் செழிப்பிற்கும் இவர்களின் செழிப்பிற்கும் பெரிய வித்தியாசம் எதுவுமில்லை. அவர்களைப் பார்த்து இவர்களுக்குக் குழப்பம், இவர்களைப் பார்த்து அவர்களுக்குக் குழப்பம். ஆனால் எங்களுக்கோ (நமக்கோ) யாரைப் பார்த்தும் எந்த குழப்பமுமில்லை. நமக்குள் இருக்கின்ற தேவ இரகசியங்கள் (வெளிப்பாடுகள்) இதெல்லாம் ஏன் நடக்கின்றன? எப்படி நடக்கின்றன? என்பதை நமக்கு புரிய வைக்கின்றன. நம்மால் அவர்களைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் அவர்களின் பார்வைக்கு நாம் புரியாத புதிராக காட்சியளிக்கிறோம்.

அவர்கள் உலகத்தின் மாயையிலிருந்து விடுதலையாகி, சாபத்திலிருந்து, சாத்தானிடமிருந்து விடுதலையாகி, நியாயப்பிரமாண சட்டதிட்டங்களிலிருந்து விடுதலையாகி, கிருபைக்குள் கடந்து வரும் போது; இதுவரையிலும் புரியாதிருந்த புதிர்களுக்கு விடை கிடைக்கும். நானும் அவர்களைப் போல வெளிப்பாடில்லாமலிருந்த காலகட்டங்களை நினைத்துப் பார்க்கிறேன். நான் அக்கட்டங்களைத் தாண்டித் தான் கிருபைக்குள் வந்திருக்கிறேன் என்றால்; அவர்களும் வருவது நிச்சயம். தேவனுடைய கிருபையை புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அக்காலங்களில் எத்தனையோ புதிய உடன்படிக்கையின் ஊழியர்கள் பிரயாசப்பட்டார்கள், மெனக்கெட்டார்கள். அவர்களின் முயற்சிக்கான பலன் தான் நாங்கள்; எங்களுடைய முயற்சியின் பலன் தான் நீங்கள். உங்களுடைய முயற்சிக்கும் நிச்சயம் பலன் உண்டு. நாம் எண்ணிக்கையில் குறைந்தவர்களாக இருக்கலாம். என்றாலும் தேவதிட்டத்தை பூமியில் நிறைவேற்றுவதற்கான இரகசிய கோட்பாடுகள் ***(secret blueprint)*** நம்மிடம் தான் ஏராளமாய் இருக்கின்றது.

## மனமே, உனக்காகவும் ஒரு கவிதை: (சிந்தனைக்கு)

*மனமோ ஒரு பறவை, விரிக்கும் தன் சிறகை, பறக்கும் அது அடையும் தன் இலக்கை.*

*எதையாவது காணவில்லையா? மறந்து எங்கேயாவது வைத்துவிட்டாயா? தேடிக்கொண்டு திரியாதே. மனதை ஆழமாகத் தோண்டு; நீ தொலைத்த பொருள் அங்கே தான் உட்கார்ந்திருக்கும்.*

*மனம் ஒரு **blackmailer;** மனதின் ஆழ் அறைகளில் பதுங்கியிருக்கும் மர்மங்கள் திடீர்*

*திடீரென்று எழும்பி வந்து நம்மை மிரட்டி மிரள வைக்கின்றன.*

*கண்டதையும் இழுத்துக் கொண்டு வரும் கொக்கி (hook) மனதின் வால் பகுதியில் இணைக்கப்பட்டிருக்கிறது.*

*மனதுக்கு வேகத்தடை (speed brake) போடுங்கள்; விபத்துகள் குறையும்.*

*இதயம் போகுதே, என்னையே பிரிந்தே ... நினைத்துப் பார்த்தால் ஆச்சரியம், நம் மனம் நமக்கு கீழ்படிவதில்லை, பிய்த்துக் கொண்டு ஓடுகிறது, நாம் விரும்பாததையும் யோசித்து வைக்கிறது.*

*சிறுகுழந்தையாய் அடம் பிடிக்கும் மனம் ... அழுது, புரண்டு, முரண்டு பிடிக்கும் மனம் ... சொன்ன பேச்சை கேளு மனமே; கேட்காவிட்டால் உனக்கும், உன்னால் எனக்கும் பிரச்சனை.*

*மனதிடம் எச்சரிக்கையாயிருங்கள்; நம்மை எக்குத்தப்பாக மாட்டி வைத்து விட்டு தப்பி ஓடிவிடும். ஒரு நாளைக்கு 70000 நினைவுகள் நம் மனதை கடந்து போவதாக கணக்கிட்டிருக்கிறார்கள். காலுக்கு கீழே கண்ணி வைத்து, காலை பிடித்து வாரி, காலுக்கு கீழே குழி தோண்டி, உங்களை உள்ளே தள்ளி புதைத்து விடும், நம்ப வைத்து கழுத்தறுத்து விடும், எவ்வளவு கெஞ்சினாலும், அழுதாலும் அது கண்டுக்காது.*

*மண்டைக்குள் (மூளையில் – மனதில் – நினைவுகளில்) நம்மையே கவிழ்க்கும் சூழ்ச்சி மகாநாடு நடக்கிறது. மனமே நீ மனிதனுக்கு எதிராக திரும்பியது எப்போது? மனிதனுக்குள்ளே இருந்துக் கொண்டே மனிதனை வெல்லும் யுக்தியை எங்கிருந்து கற்றாய்?*

*கொஞ்சம் இடம் கொடுத்தால் போதும் தலை மேல் ஏறி உட்கார்ந்து விடுவான் என்பார்கள்; ஆனால் மனமோ; அது ஏற்கெனவே நம் தலை மேல் தான் உட்கார்ந்திருக்கிறது.*

*தேவ இராஜ்ஜிய வேலைக்கு எதிராக மனித மூளையில் சாத்தானால் ஒரு network ஏற்படுத்தப்பட்டது உண்மையானால்; சாத்தானுடைய இராஜ்ஜியத்திற்கு எதிராக மனித மூளையில் இயேசுவால் ஒரு network உருவாக்கப்பட்டதும் உண்மை.*

*மனம் தான் மனிதன், மனிதன் தான் வாழ்க்கை, வாழ்க்கை தான் வரலாறு, வரலாறு தான் உலகம், உலகம் தேவனுடைய திட்டம். ஒரு கணக்குப் போடுவோம் ... முள்ளை முள்ளால் தான் எடுக்க முடியும். பூமியின் ஆரம்பக்கட்டத்தில் மனதால் எல்லாம் கெட்டுப் போனது உண்மையானால்; அதே மனதால் எல்லாவற்றையும் சரி செய்ய முடியும் என்பதும் உண்மை.*

*இயேசுவின் சிலுவைப் பாடுகளில் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் உண்டு. ஏன்? என்ன நடந்தது? எதனால் நடந்தது, எப்படி நடந்தது? என்னவாயிற்று? எப்படி சரிசெய்யலாம்? என்ற எல்லா கேள்விகளுக்கும் பதில் உண்டு. சிலுவையை எடுத்து மனதில் வைத்து சுற்ற விடுவோம். சரசரசரசர வென்று ஓராயிரம் கேள்விகளுக்கு பதிலை அள்ளி வீசும்!*

## பணத்தைப் பற்றி வேதம் என்ன சொல்லுகிறது? ஒரு கண்ணோட்டம்:

பணத்தைப் பற்றிய சபை கண்ணோட்டம் மாறி வருவது நல்லதொரு அறிகுறி. பணம் என்றாலே பாவம் என்று நினைக்கக்கூடிய கால கட்டங்களை நினைத்துப் பார்க்கிறேன், அதை கடந்தும் வந்திருக்கிறேன். பணத்தைப் பற்றி பைபிள் சொல்லும் காரியங்களைப் பற்றின சரியான அறிவில்லாத காரணத்தினால் தான் சபையின் நிலைமை கீழ்நோக்கிப் பாய்ந்தது. பணத்தை பற்றின சரியான மனத்தெளிவைப் பெற்றுக் கொண்ட உலக மக்கள் அதை சம்பாதித்து மலைக்குக் கடத்திக் கொண்டுப் போனார்கள். சபை பள்ளத்தாக்குகளுக்குள் பதுங்கிக் கிடந்து அண்ணார்ந்துப் பார்த்துக் கொண்டிருந்தது. வெளிப்பாடு மட்டும் ஒரு சிலருக்கு தேவனிடமிருந்து கிடைக்காமல்

போயிருக்குமானால் ... என்ன நடந்திருக்குமென்று சொல்லத் தேவையில்லை.

***"... பணமோ எல்லாவற்றிற்கும் உதவும். பிர. 10:19 (money answer all things). பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; ... 1 தீமோத். 6:10 (the love of money is the root of all evil)."*** பணம் மிகமிக நல்ல காரியம், தேவனுடைய பரிபூரண சித்தம், யாரும் அதை புறக்கணிக்கக்கூடாது, அது இது என்று பணத்திற்கு ஆதரவாக இங்கு பேச வரவில்லை. அதே நேரத்தில் அதற்கு எதிரிடையாகவும் பேச வரவில்லை. பூமியின் ஆரம்பக்கட்டத்தில், ஏதேனில் பணம் என்று ஒன்று இல்லையென்பது எல்லோருக்கும் தெரியும். தேவன் பணத்தை மனிதனின் கையில் கொடுக்கவில்லை, பொருளாதாரம் ***(economy)*** என்ற சூழ்நிலையும் அங்கேயில்லை. ஆதாமுக்கும் ஏவாளுக்கும் எல்லாம் இருந்தது. அதாவது தேவனுக்கு எதுவெல்லாம் இருந்ததோ; அதுவெல்லாம் முதல் மனிதனிடமும் இருந்தது; அதாவது தேவனால் கொடுக்கப்பட்டது. தேவனுக்கு ஒரு குறைவும் கிடையாது; அதனால் மனிதனுக்கும் ஒரு குறைவுமில்லாதிருந்தது. தேவனிடம் இல்லாத எதையும் அவர் மனிதனுக்குக் கொடுக்க வில்லை, கொடுக்கவும் முடியாது; பணமும் அதிலே ஒன்று! என்ன புரியவில்லையா? தேவனிடம் பணம் கிடையாது; அவருக்கு அது அவசியமுமில்லை, அதனால் தேவன் அதை ஆதாமிடம் கொடுக்கவில்லை, அவனுக்கும் அது தேவையாயிருக்கவில்லை.

பணத்தைப் பற்றின தவறான புரிந்து கொள்ளுதல் சபையின் வளர்ச்சிக்கும், அதைத் தொடர்ந்து வரும் தேவனுடைய திட்டத்திற்கும் பெரிய தடையாகிப்போனது. ஒரு தனிப்பட்ட மனிதனிடம் காணப்படும் பணப்பற்றாக்குறை (வறுமை – தரித்திரம்) சுவிசேஷ அறிவிப்பிற்கு தடையாக அமைகிறது. ஏனென்றால் பணத்தை செலவழிக்காமல் சுவிசேஷத்தை அறிவிக்க முடியாது. சுவிசேஷம் இலவசம் தான்; ஆனால் அதை அறிவிக்க பணம் தேவை. தன்னைத் தவறாக புரிந்து கொண்டவர்களிடம் பணம் வரவே வராது; அவர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தாலும் சரி. தன்னைப் பற்றிய நல்லெண்ணம் கொண்டவர்களிடம் தான் பணம் வந்து சேரும்; அவர்கள் தேவனை அறியாத புறமதஸ்தர்களாக இருந்தாலும் சரி.

## ***பணத்தை சரியாகப் புரிந்து கொள்ளுவோம்:***

**பணத்தைப் பற்றின தவறான கண்ணோட்டம்; பணக்காரர்கள் மேலும் மேலும் பணக்காரர்களாக மாறுவதற்கும், ஏழைகள் மேலும் ஏழைகளாகிப் போவதற்கும் காரணமாகிறது. முதல் மனிதன் பாவத்தால் ஏதேனை விட்டு வெளியேற்றப்பட்டு; சாபத்திற்குள்ளான பிறகு தான் பணம் என்ற முறைமையே வழக்கத்திற்கு வந்தது, பொருளாதாரம் என்ற சூழ்நிலை அதற்குப் பிறகு தான் வந்தது. விலை கொடுத்தால் தான் வாழ்க்கை *(cost of living)* என்ற அவலத்திற்குள் மனிதன் சிக்கிக் கொண்டான். தேவசாயலாக பூமியில் பிறந்து வரும் ஒரு மனிதனுக்கு; பூமி வாழ்க்கையை காசுக்கு விற்றது.** காசு கொடுத்து தனக்கான வாழ்க்கையை மனிதன் பெற்றுக் கொண்டான். ஆனால் இது தேவனுடைய சித்தமல்ல, திட்டமுமல்ல.

தேவன் தன்னுடைய சாயலாயிருக்கிற மனிதன் தன்னைப் போலவே எந்த குறைவுமில்லாமல் பூமியில் வாழ்ந்திருக்க வேண்டுமென்று ஏற்படுத்தின நன்மைகள் கைமாறிப் போனது. ஏதேனில் காணப்பட்ட 1,00,000 விதமான ஆசீர்வாதங்கள் அவனிடமிருந்து பிடுங்கப்பட்டுப் போனது. விலை கொடுத்தால் தான் வாழ்க்கை என்ற நிலை மனிதன் ஏதேனை விட்டு வெளியே வந்தவுடனேயே ஆரம்பமாகி விட்டது ... இன்றளவும் தொடர்கிறது. தேவன் இலவசமாக மனிதனுக்குக் கொடுத்த ஒவ்வொரு ஆசீர்வாதங்களின் மேலும் ஒவ்வொரு விலை அச்சடிக்கப்பட்டு ஒட்டப்பட்டது. பூமியில் இயற்கையாகக் கிடைக்கும் மண், தண்ணீர், காற்றுக்குக் கூட இப்போது விலை தான்.

பணம் தேவனையறியாத உலக மக்களிடமே போய் குவிகிறதே, ஏன்? என்ற கேள்வி எல்லோருடைய மனதிலுமே எழும்பி மறைகிறது. நியாயமான கேள்வி தான்; கேள்வி கேட்டால் தான் பதில் கிடைக்கும். எந்தவொரு பதிலும் கேள்வி என்ற சாவிக்காக காத்திருக்கிறது. சரி, கதவைத் திறந்து பதிலுக்குள் நுழைவோம். பணம் சம்பாதிக்கும் வித்தை, கலை, சூட்சுமம், சூத்திரம் எல்லாம் அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது; அதாவது உலகத்தாருக்கு ***game*** ஆடத் தெரிந்திருக்கிறது; நமக்குத்

தெரியவில்லை அவ்வளவு தான். அப்படியானால் எப்படி ***game*** ஆடுவது என்பதை அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளலாமா? அது சரியாக வருமா? அது வேதத்திற்கு எதிரானதா? என்பதற்கான பதிலை இப்போது பார்ப்போம்.

## *எறும்பு வாத்தியார்கள்:*

***"சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில் போய், அதின் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள். நீதி. 6:6. அதற்கு பிரபுவும், தலைவனும், அதிகாரியும் இல்லாதிருந்தும், கோடைக்காலத்தில் தனக்கு ஆகாரத்தை சம்பாதித்து, அறுப்புக்காலத்தில் தனக்கு தானியத்தை சேர்த்து வைக்கும். சோம்பேறியே, நீ எவ்வளவு நேரம் படுத்திருப்பாய்? எப்பொழுது உன் தூக்கத்தை விட்டு எழுந்திருப்பாய்? இன்னுங் கொஞ்சம் தூங்கட்டும், இன்னுங் கொஞ்சம் உறங்கட்டும்; இன்னும் கொஞ்சம் கைமுடக்கிக் கொண்டு நித்திரை செய்யட்டும் என்பாயோ? உன் தரித்திரம் வழிப்போக்கனைப்போலவும், உன் வறுமை ஆயுதமணிந்தவனைப் போலவும் வரும். நீதி. 6:6–11. அற்பமான ஜெந்துவாயிருந்தும், கோடைக்காலத்திலே தங்கள் ஆகாரத்தைச் சம்பாதிக்கிற எறும்பும், நீதி. 30:25."*** இந்த வசனங்களைக் கூர்ந்து கவனித்தால்; இதிலிருந்து பல இரகசியங்களைக் கற்றுக் கொள்ள முடியும்.

சோம்பேறித்தனத்தினாலும், பணத்தைக் குறித்து வேதத்தினடிப்படையில் சரியான விழிப்புணர்ச்சி இல்லாததினாலும், பணத்தைப் பற்றின வேதத்திற்கு புறம்பான தவறான கருத்துக்களினாலும் தான் சபை பொருளாதாரத்தில் பின்னுக்கு தள்ளப்பட்டு போனது என்பதை ஓரளவுக்கு நிதானிக்கலாம். கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார், என்று சொல்லி நம்முடைய பொறுப்புகளை உதறித் தள்ளுவது வறுமைக்கு காரணமாகிறது. எந்த வேலையும் செய்யாமல் தூங்கிக் கொண்டிருந்தால் போதும்; பணம் தானாக கூரையைப் பிய்த்துக் கொண்டு வந்து கொட்டும் என்று யார் சொன்னது? ***"ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது என்று தான் வேதம் கட்டளையிடுகிறது. ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று ... உங்களுக்கு கட்டளையிட்டோமே. உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய், ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்று கேள்விப்படுகிறோம். இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலைசெய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிடவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே அவர்களுக்குக் கட்டளையிட்டுப் புத்திச்சொல்லுகிறோம். 2 தெசலோனி. 3: 10–12"***

வறுமைக்கு முக்கிய காரணமாக வேதம் சோம்பேறித்தனத்தையே முன் வைக்கிறது. ***"சோம்பல் கையால் வேலை செய்கிறவன் ஏழையாவான்; சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும். நீதி. 10:4."*** பொருளாதாரத்தில் முன்னேற்றம் வரவேண்டுமானால் சுறுசுறுப்பு அவசியம் என்று பார்க்கிறோம். எறும்புகளிடத்தில் போய் சுறுசுறுப்பைக் கற்றுக் கொள்ள வேண்டுமாம். எறும்பு என்றால் ...? சாரை சாரையாக வீட்டோரமாக, வீட்டுக்கு வெளியே, வீட்டுக்குள்ளே ஊர்ந்து போகிற எறும்புகள் தான் நினைவிலும் ஊர்ந்து செல்கின்றன. எழுத்தின்படி அந்த எறும்பை கணக்கிலெடுத்துக் கொண்டாலும் அதனிடமிருந்து பல வெற்றியின் கோட்பாடுகளை கற்றுக் கொள்ள முடியும்.

ஆனால் இந்த வார்த்தைக்கான ஆவிக்குரிய அர்த்தத்தைக் கண்டுபிடித்த போது; என் மனதிற்குள் ஆச்சரியங்கள் நீடித்தன. தேவனை அறியாத, தேவனே இல்லாத உலக மக்களைத் தான் இந்த எறும்புகள் என்ற பதம் படம் பிடித்துக் காட்டுகிறது. இவர்களுடைய சுறுசுறுப்பு, ஞானம், முன்னேறத் துடிக்கிற வேகம், ஏற்றுகிற வெற்றிக் கொடிகள்; நமக்கு ஏணி வைத்தாலும் எட்டாது. தேவனுடைய திட்டத்திற்கு வெளியே (ஏதேனுக்கு வெளியே) முட்காடாக, புல்லின் பூக்களாக செழித்திருக்கும் இவர்களின் வெற்றியின் சூத்திரங்களை, ஞானத்தை, ஒழுங்குகளை, திட்டமிடுதல்களை, நேரத்தை பிரயோஜனப்படுத்தும் முறைமைகளை, கடினமான முயற்சிகளை பின் தொடர்ந்து போய் கண்டுபிடிக்க வேண்டுமாம். எறும்பு தானே என்று அலட்சியப்படுத்த வேண்டாம். தேவன் இந்த விஷயத்தைச் செய்யச் சொல்கிறார் என்றால்; நிச்சயமாக அதில் ஏதோ ஒரு இரகசியம் ஒளிந்திருக்கிறது. சொன்னதைச் செய்யாமல், எறும்புகளைப் பின் தொடராமல் அந்த இரகசியத்தை

கண்டு பிடிக்க முடியாது. தேடுங்கள் கண்டடைவீர்கள் என்று தான் வேதம் சொல்கிறது. எதைத் கண்டுபிடிக்க வேண்டுமோனாலும் சரி; இதைவிட வேறு முறை ***(option)*** உலகில் இல்லை.

## *எறும்புகளை பின்தொடர்வோம் [இரகசியமாக]:*

சகல நன்மைகளையும் தொலைத்து விட்டு நிற்கும் உலகத்தில் தேடுதல் வேட்டையை தொடர்ந்து நடத்த வேண்டும். மரங்கள் அடர்ந்திருக்கும் காடுகளாக இருக்கிற உலக மக்களினூடாக ஊடுருவிச் செல்ல வேண்டிய கட்டாயத்திலிருக்கிறோம். எறும்புகள் பல விஷயங்களில் மனிதர்களை விட பகுத்தறிவாக செயல்படுகின்றன. காலத்தை செலவிடுவதில், நினைத்ததை முடிப்பதில், மனத்தெளிவில், யோசனையில், உணவு சேமிப்பில், ஜாக்கிரதையுணர்வில், புத்திசாலித்தனத்தில், ஒழுங்கில், ஒற்றுமையில் ... இப்படி பல காரியங்களைச் சொல்லலாம். இவைகள் தான் அவைகளின் வெற்றிக்கு காரணமாகின்றன.

அவர்களின் வெற்றித் தடயங்களைப் பின்தொடர்ந்தால் அவற்றின் பாதங்கள் நம் தேவன் நமக்குத் தந்த வேதத்தில் வந்து நிற்பதைப் பார்க்கலாம். நாம் அறியாமல் போன வேத இரகசியங்களை உலகம் அறிந்து கொண்டது. நம்முடைய அஜாக்கிரதையினால், அசதியால், சோர்வினால் சோம்பலினால் அவைகள் சுறுசுறுப்பாக இயங்கிய எறும்புகளிடம் (தேவனை அறியாத உலக மக்கள்) போய்விட்டது. சபை உதறித் தள்ளிய ஆசீர்வாதங்கள்; சபை வட்டாரத்திற்கு வெளியே போய் விழுந்து முளைத்தது. தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு தன்னுடைய இராஜ்ஜிய வேலைக்காக கொடுத்த ஞானம், புத்தி, விவேகம், அறிவு, ஐசுவரியம் எல்லாவற்றையும் தொலைத்து விட்டு வந்து விட்டார்கள். தொலைக்கப்பட்ட விலையுயர்ந்த பொருட்கள் அங்கேயே கிடக்குமா என்ன? போகிறவர்கள் வருகிறவர்கள் எல்லாம் ஆளுக்கொன்றாய் எடுத்துக் கொண்டுப் போனார்கள்.

தேவனுடைய ஆசீர்வாத பிரமாணங்கள் எல்லா மனிதர்களிடமும் ஒரே மாதிரி தான் வேலை செய்யும். அவன் தேவனுடைய திட்டத்திற்கு உள்ளே இருந்தாலும் சரி, வெளியே இருந்தாலும் சரி. இரகசிய பிரமாணங்களை கண்டெடுக்கிறவன் புத்திசாலி, அவன் பிழைத்துக் கொள்ளுவான் அவ்வளவு தான். மழை பெய்யும் போது எல்லாத மனிதர்களும் ஒரே மாதிரி தான் நனைகிறார்கள்; எல்லா மரங்களும் ஒரே மாதிரி தான் மழையை உறிஞ்சுகின்றன. காட்டத்தி மரமானாலும் சரி, வீட்டில் வளர்க்கும் வாழை மரமானாலும் சரி; எல்லாவற்றிற்கும் ஒரே மழை தான். ஆசீர்வாத மழையும் இப்படித்தான் வேலை செய்கிறது. ***"... அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். மத். 5:45."*** மழைகாலங்களில் பட்டணங்களில், தேசங்களில் மழை பெய்யும் போது; காட்டு மரங்கள் அவற்றை சந்தோஷமாக அனுபவிக்கின்றன ***(enjoyment).*** ஏனென்றால் அவைகள் தான் திரளாயிருக்கின்றன, பிரமாண்டமாயிருக்கின்றன, உயரமாயிருக்கின்றன. உலகின் மிக உயரமான காட்டு மரங்களின் பட்டியலை www.monumentaltrees.com–ல் பாருங்கள்.

(***The tallest trees in the world are redwoods (Sequoia sempervirens), which tower above the ground in California. These trees can easily reach heights of 300 feet (91 meters). Among the redwoods, a tree named Hyperion dwarfs them all. The tree was discovered in 2006, and is 379.7 feet (115.7 m) tall.Apr 15, 2013.)*** உலகத்தில் அடர்ந்திருக்கும் காடுகளையும், அதிலுள்ள மரங்களையும், பற்றி அறிந்து கொள்வது நம்முடைய இரகசிய பின்தொடர்வுக்கு உதவியாக இருக்கும் ***(detection).*** காட்டு பூக்கள், ஆகாயத்துப் பறவைகள், குழிமுயல், வெட்டுக்கிளி, சிலந்திப்பூச்சி, சிங்கம், போர்க்குதிரை, வெள்ளாட்டு கிடா... இப்படி பல உயிரினங்கள் உலகத்தாருக்கு ஒப்பனையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. (நீதி. 30: 24–31, எசே. 31:14). எறும்புகள் நமக்கு பல விஷயங்களில் முன்னுதாரணமாக இருக்கின்றன. அறிவு ஜீவியாக, கிடைக்கிற எதையும் கருவியாக உபயோகப்படுத்தும் ஞானமுடையதாக, இரண்டு கால்களில் நடப்பது, எந்த சூழ்நிலையையும் சமாளித்து வாழ்வது. ஏறக்குறைய எல்லாவிதத்திலும் மனிதனைப் போலவே வாழ முயற்சிகளை எடுக்கிறது.

**Researchers now show that ants can accomplish a task more rationally than our -**

**- multimodal, egg-headed, tool-using, bipedal, opposing-thumbed -- selves. This is not the case of humans being "stupider" than ants. http://latteier.com/ants/free.jpg**

**Ants more rational than humans. Researchers at Arizona State and Princeton universities have shown that ants perform tasks more rationally than humans. After examining ant colonies living in cavities the size of an acorn, the scientists observed the ability of ants to find new places to roost. The collective decision-making of ants, and their limited individual choice, resulted in more accurate outcomes. his is being dubbed the â•œwisdom of crowds.â• The researchers say that having fewer individual options reduces the frequency of making irrational errors. Their finding suggests that strategically limiting individual knowledge could improve a groupâ•™s ability to achieve a goal. - science Daily**

## நாழியில் கை வைத்தபடி உன்னதங்களில் உட்கார்ந்திருக்கும் கிறிஸ்தவர்கள்:

நாம் இயேசுவோடு உன்னதங்களில் உட்கார வைக்கப்பட்டிருக்கிறோமென்றால் ... ? சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க உட்கார வைக்கப்படவில்லை. அவரோடு இருந்து அவரைப் போலவே வேலை பார்க்க வைக்கப்பட்டிருக்கிறோம். ***(rule with him in the heavenly world).*** பரலோகத்தை ஆளுகை செய்யும் அதிகாரம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது; நாம் இலேசுப்பட்டவர்களல்ல என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். நாம் இங்கே இருந்து பரலோகத்திற்குள் வேலை பார்ப்பதென்றால் சும்மாவா என்ன? ***"பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மத். 18:18" (whatsoever you shall bind on earth shall be bound in heaven; and whatsoever you shall loose on earth shall be loosed in heaven)***

எப்படி கட்டுகிறோம்? நம் நினைவுகளால் தான். நம்முடைய ***mind*** தடுத்து நிறுத்துகிற எதையும் பரலோகத்ததால் கீழே இறக்க முடியாது. மனிதனுடைய ***mind power*** அந்த அளவுக்கு சக்தி வாய்ந்தது, பயங்கரமானது. நாம் விரும்புகிற சகல ஆசீர்வாதங்களும் நம்மால் தான் தடுத்து நிறுத்தப்படுகின்றன என்ற உண்மை ஆச்சரியமாக இருக்கும். இதுவரை நாம் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளாததற்குக் காரணமாக எதையெதையோ யார் யாரையோவெல்லாம் குறை சொல்லிக் கொண்டிருந்தோமே. தேவனோ, சாத்தானோ, சூழ்நிலையோ, புத்தியீனமோ, எந்த நபரோ காரணமல்ல; நாம் தான் காரணம் என்பதை அறிந்து கொள்வோம். செழிப்பு, ஆசீர்வாதம், ஐசுவரியம், பணம், சுகவாழ்வு, போன்ற வார்த்தைகளைப் பற்றின தவறான நினைவுகளும்***(mental picture)***, கண்ணோட்டங்களுமே காரணம் என்று பார்க்கிறோம்.

## விசுவாசத்தின் நல்ல போராட்டம் (good fight of faith)

விசுவாசிக்கத் திராணியில்லாமல் போவதும் ஒரு முக்கிய காரணமாகும். பலவேளைகளில் சூழ்நிலைகள் விசுவாசத்தின் கழுத்தை நெறித்துப் போடுகின்றன. சூழ்நிலைக் கைதியாக்கப்படும் விசுவாசத்தால் வேலை செய்ய முடியாது. நாம் தேவனிடம் ஜெபித்துக் கேட்ட காரியங்கள் கைகூடி வந்துவிட்டதாகவே நினைக்க வேண்டும், அப்படியே பேச வேண்டும், அதற்கேற்றபடி செயல்பட வேண்டும். இது ரொம்ப ரொம்ப கஷ்டம்; அதனால் தான் பவுல் விசுவாசத்தை ஒரு போராட்டத்திற்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். ***"விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, ... 1 தீமோத். 6:12 (good fight of faith)."*** நாம் வாழ்க்கையில் எதெதெற்கெல்லாமோ போராடுகிறோம்; வாழ்க்கையில் முன்னேற, ஜெயிக்க ... இப்படி பல காரியங்களுக்காக; அது நல்லது தான். என்றாலும் நல்ல போராட்டம் என்று ஒன்று இருக்குமானால்; அது விசுவாசம் மட்டும் தான். ஏன் அப்படியென்றால்; அதற்காகத்தான் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். ***"... அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்; ..."***

அதாவது நாம் அழைக்கப்பட்ட நோக்கமே விசுவாசப் போராட்டத்திற்காகத் தான். நம்முடைய அழைப்பின் காரணத்தைத் தெரிந்து கொள்ளாமல், அதற்காக போராடாமல், வேறு எதற்கெல்லாமோ போராடி என்ன பிரயோஜனம்?

*"... உன்னைக் குறித்து முன் உண்டான தீர்க்கதரிசனங்களின்படியே, நீ அவைகளை முன்னிட்டு நல்ல போராட்டம் பண்ணும்படி, ... நீ விசுவாசமும் நல்மனசாட்சியும் உடையவனாயிரு. 1 தீமோத். 1:18."* நம்முடைய தரிசனத்தை அடைய நிச்சயமாக விசுவாசம் அவசியம்; வேறு எதையும் இயக்கி நம்மால் இலக்கை அடைய முடியாது. யாருமே இந்த உலகத்தில் எதிர்பாராமல் வந்து பிறக்கவில்லை; எங்கிருந்தோ வந்து குதிக்கவில்லை. ஒவ்வொருவருமே தேவனுடைய எதிர்பார்ப்புகளை மனதில் ஏந்தியபடிதான் வந்து பிறக்கிறோம். தேவனுடைய பிரமாண்டமான திட்டத்தை கையோடு கொண்டு வருகிறோம். நம் வாழ்க்கை அர்த்த செறிவு நிறைந்தது; ஆனால் அர்த்தம் புரியாமல் வெட்டியாக வாழ்ந்து விட்டு புதையுண்டு போகிறவர்களின் எண்ணிக்கை கோடி கோடியாக உயர்ந்து கொண்டேயிருந்தாலும்; தேவன் தன்னுடைய திட்டத்தில் சோர்ந்து போய்விடவில்லை. *"... வேறே பேர் மண்ணிலிருந்து முளைப்பார்கள். யோபு. 8:19"*

## நாம் ஏன் பிறந்தோம்?:

மணலத்தைனையாக, எண்ணிக்கைக்கடங்காத ***(infinite)*** மனிதர்களை பூமியில் பிறக்க வைப்பதன் மூலம்; தன் திட்டத்திற்கென்று மனிதர்களை சலித்தெடுக்கிறார். அந்த பிரமாண்டமான சல்லடைக்கு மேல் தேங்கியவர்களில் நாமெல்லோரும் இருக்கிறோம். கிருபையினால் இது நடந்தது; அதனால் நாம் பாக்கியசாலிகள். ஆனால் நிமிடம் தோறும் ஆயிரக்கணக்கான மனிதர்களை பூமியிலிருந்து துளிர்த்தெழும்பச் செய்வது தான்; தேவனுடைய திட்டம் நிறைவேறுவதற்கான ஒரே வழி. அப்படிச் செய்தால்தானே சலித்தெடுக்க முடியும்; கோடிக்கணக்கில் ஆட்கள் இருந்தால் தானே தெரிவு ***(selected)*** செய்ய முடியும்? எண்ணிக்கை அதிகமாக ஆகத்தான்; தெரிந்தெடுக்கப்படும் காரியங்கள் உயர் தரமானதாக ***(classic)*** இருக்கும்.

உலகத் தோற்றமுதல் இதுநாள் வரையிலும் இந்த பூமியின் மேல் வந்து போன மனிதர்களின் எண்ணிக்கையை கணக்கிட்டால்; அது நிச்சயமாக ஒரு அசுர எண்ணாகத் தான் ***(countless)*** இருக்கும். ஆனால் இந்த அளவுக்கு கணக்கில்லாமல் மனிதர்களை சிருஷ்டிப்பதன் மூலமாகத் தான் தேவன் உலகம் உருவானது முதற்கொண்டு; இதுவரையிலும் தன்னுடைய திட்டத்தை வெற்றியாக கொண்டு வர முடிந்தது. ஒரு சில ஆயிரம், அல்லது ஒரு சில இலட்சம் மக்களை மட்டும் உருவாக்கிவிட்டு நிறுத்தியிருந்தால்; அது சாத்தியமாயிருந்திருக்காது. ஏனென்றால் தேவனுடைய மனவிருப்பங்கள் மனிதர்களின் எண்ணங்களின் மூலமாகத்தான் பயணிக்கின்றன. மனிதர்களின் ஆயுசு முடிந்து அவர்கள் இறந்து போனபிறகும் அவர்களின் சிந்தனைப் பயணம் தொடர்கின்றன; அடுத்தடுத்து பிறக்கும் மனிதர்களின் நினைவுகள் மூலமாக.

## வாழையடி வாழையாக பயணிக்கும் நினைவுகள்:

அது எப்படி? சென்று போன மக்கள் பதிவு செய்து வைத்து விட்டுப் போன செய்திகளிலிருந்து பின்வரும் சந்ததியினருக்கு அவைகள் தாவுகின்றன. யோபு 8ஆம் அதிகாரத்தில் இதைப் பார்க்கிறோம்: *"... நீர் முந்தின தலைமுறையாரிடத்தில் விசாரித்து, அவர்களின் முன்னோர்களின் செய்தியை ஆராய்ந்து பாரும். நாம் நேற்று உண்டானவர்கள், ஒன்றும் அறியோம்; பூமியின் மேல் நம்முடைய நாட்கள் நிழலைப்போலிருக்கிறது. அவர்கள் உமக்கு உபதேசித்து, உமக்கு தெரிவித்து, தங்கள் இருதயத்திலிருக்கும் நியாயங்களை வெளிப்படுத்துவார்கள் அல்லவா? யோபு: 8: 8, 10, 9."* பழைய கால கல்வெட்டுகளும், ஓலைச்சுவடிகளும், புத்தகங்களும், இக்கால புதிய தொழில் நுட்பங்களும் இதில் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை மறுக்க முடியாது. சென்றுபோன 100 முதல் 150 வருஷங்களுக்கு முன் வாழ்ந்தவர்கள் யாரும் தற்சமயம் இந்த உலகத்தில் இல்லை. எத்தனையோ அறிவியல் அறிஞர்கள், சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள்... தோன்றி மறைந்தார்கள்; ஆனால் அவர்களின் சிந்தனைத் தொகுப்புகள் மறையவில்லை. கால வீதியில் அவர்கள் நடந்து பதித்து விட்டுப் போன சிந்தனைச் சுவடுகள் கலையவில்லை. அந்தச் சுவடுகளில்

காலடிகளைப் பதித்துத் தான் நாம் தொடர்ந்து பயணித்துக் கொண்டிருக்கிறோம். உலக தோற்ற முதல் இது தான் நடந்து கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு தலைமுறையிலும் வாழ்ந்து முடித்தவர்களின் கதை அவர்களின் மரணத்தோடு முடிந்து போவதில்லை. அவர்கள் செத்தாலும் அவர்களின் நினைவலைகள் சாவதில்லை. அடுத்த தலைமுறையினர் தங்களின் நினைவுகளோடு அவற்றை இணைத்து உயிர் கொடுக்கின்றனர். இந்த தொடர் ஓட்டம் விடாமல் நடந்து கொண்டிருப்பதின் மூலம் தேவனுடைய திட்டம் அவர் தெரிந்து கொண்ட மனிதர்களின் மூலம் பூமியில் நடந்து கொண்டே இருக்கிறது. தேவன் கணக்கிலடங்காத மனிதர்களை நிமிஷந்தோறும் பூமிக்கு அனுப்பிக்கொண்டேயிருப்பதற்கு காரணம் இது தான். சாபம் விழுந்து போன உலகத்தில் மனிதன் சாகாமல் என்றென்றும் உயிரோடிருந்தாலும் பிரச்சனை; செத்தாலும் பிரச்சனை. அதனால் தான் தேவன் இந்த மனுக்குலத்தை பிரித்தாளும் முறைமையை ***(dividing system)*** ஏற்படுத்தினார். அதாவது மனிதனை ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் பூமியில் இருக்கும்படி செய்வது. அவன் எத்தனை வருஷங்கள் பூமியில் வாழப்போகிறான் என்பதை அவனுடைய மனம் தான் குறித்துக் கொடுக்கிறது. ***"பூமியிலே போராட மனுஷனுக்குக் குறிக்கப்பட்ட காலம் உண்டல்லவா? யோபு. 7:1."*** தேவன் ஏன் சரமாரியாக மனிதர்களை பூமியில் இறக்குமதி செய்து கொண்டேயிருக்கிறார்? தன்னுடைய திட்டத்தில் மனிதனின் மனோசக்தியை எப்படி உபயோகிக்கிறார் என்பதை அறிந்து கொள்வது நமக்கு அதிக பிரயோஜனமாக இருக்கும். நம்முடைய தேடல்களுக்கு விருந்தளிப்பதோடு, அவருடைய திட்டத்தில் முன்னேற உற்சாகமளிக்கும்.

## கடலில் மூழ்க வாரீங்களா?:

***"நீ சமுத்திரத்தின் அடித்தலங்கள் மட்டும் புகுந்து, ஆழத்தின் அடியில் உலாவினதுண்டோ? யோபு. 38:16."*** மனிதனின் மனதை கடலுக்கும், நினைவுகளை கடலாழங்களுக்கும் ஒப்பிட்டு நிறைய பேசலாம். எல்லோருமே கடலின் மேற்பரப்பைப் பார்த்திருக்கிறோம், கால்பதித்து கடலோரமாக நடந்த அனுபவமும் அநேகமாக எல்லோருக்கும் இருந்திருக்கும். முழங்கால் அளவுக்குகூட மெதுவாக நடந்து போய் பார்த்திருக்கிறோம்; குளிப்பதற்காக இடுப்பளவுக்குக் கூட இறங்கியிருக்கலாம், நெஞ்சளவிற்குக்கூட இறங்கியிருக்கலாம். ஆனால் மூழ்கி அமிழ்ந்து நீச்சலாழங்களுக்குள் போகும் கூட்டம் மிகவும் குறைவோ குறைவு; ஏன்? ***risk*** எடுக்க யாரும் தயாராக இல்லை. கடற்கரைக்குப் போய் சுண்டல் வாங்கி கொரித்துக் கொண்டு; எதையெதையோ யோசித்துக் கொண்டு நடப்பவர்களில் எத்தனை பேர் அந்தக் கடலாழங்களைப் பற்றி யோசித்திருப்பார்கள்? மிக மிகச் சில பேர் தான்; உங்களையும் என்னையும் போல.

பூமியில் உள்ள பெருங்கடல்களில் 5 சதவிகிதம் மட்டுமே இதுவரை ஆராய்ச்சிகள் நடந்திருக்கிறது. மிச்சமுள்ள 95% பகுதி இன்னமும் மனிதக் கண்கள் படாத பகுதிகளாகவே ***(unexplored)*** இருக்கின்றன; மனிதர்களின் ஆழ் மனதைப் போல! அதைப் போலவே நம்முடைய மனதின் பெரும் பகுதிகள் இன்னமும் சிந்திக்கப்படாத, தேடப்படாத, கண்டுபிடிக்கப்படாத, ஆராயப்படாத, கற்றுக்கொள்ளப்படாத பகுதிகளாகவே இருக்கின்றன. நம்முடைய ஆழ்மனம் பல அற்புதமான, ஆச்சரியமான, நம்ப முடியாத காரியங்களால் நிறைந்திருக்கின்றன. நம்முடைய ஆழ்மனதுக்குள் பயணிக்க வேண்டியது தேவனுடைய திட்டத்திற்கு மிகமிக அவசியமானதொன்று. பெருங்கடல்களின் ஆழமான பகுதி மரியானா டிரெஞ்ச்***(Mariana Trecnch)***; அதன் ஆழம் 11 கி.மீ. எவரெஸ்ட் சிகரத்தின் உயரம் 8.6 கி. மீட்டர் தான். அப்படியானால் பூமியின் உயரமான அளவை விட ஆழத்தின் அளவு அதிகம்; அதுவும் கடலுக்குள் தான் இருக்கின்றன. கண்ணுக்குத் தெரிகின்ற நம் சரீரத்தைவிட; நமக்குள் இருக்கின்ற கண்ணுக்குத் தெரியாத மனமே பல்லாயிர மடங்கு ஆழமாக வாழ்க்கை இரகசியங்களை உள்ளடக்கி வைத்திருக்கிறது.

கடந்த ஆண்டுகளில் ஆயிரக்கணக்கானோர் எவெரெஸ்ட் சிகரத்தில் வெற்றியாக காலடிகளை பதித்து திரும்பியிருக்கிறார்கள். ஆனால் மிக ஆழமான கடலாழமான "மரியானா டிரெஞ்ச்"க்கு சென்று திரும்பியவர்கள் இதுவரையிலும் இரண்டேயிரண்டு பேர்கள் தான். நாம் சுவாசிக்கும் ஆக்சிஜனில் 50 சதவிகிதத்திற்கு மேலாக பெருங்கடல்கள் தான் உற்பத்தி செய்கின்றன.

வளிமண்டலத்தைவிட 50 மடங்கு அதிகமான கார்பன்–டை–ஆக்சைடை பெருங்கடல்கள் கிரகித்துக் கொள்கின்றன. அதைப் போல நம்முடைய வாழ்க்கையின் சகல நன்மைகளுக்கும் (ஜீவன், சமாதானம், செழிப்பு) மனம் தான் காரணமாக அமைகின்றது. பெருங்கடல்கள் ஏராளமான நன்மைகளை மனுமக்களுக்குக் கொடுத்து; அவர்களின் தீமைகளை தன்னிடமாய் உள்வாங்கிக்கொள்கிறது. ***"... நம்முடைய பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார். மீகா. 7:19."***

உலகின் மிகப்பெரிய உயிருள்ள கட்டமைப்பான "கிரேட் பேரியர் ரீஃப்" என்ற 2,600 கி.மீ. நீளமுள்ள பவளத்திட்டு ஆஸ்திரேலியக் கடலுக்குள் தான் இருக்கிறது. நிலவிலிருந்து பார்க்க முடிகிற அளவுக்கு இது பிரமாண்டமானது. உலகில் உள்ள எல்லா அருங்காட்சியங்களில் உள்ள காட்சிப் பொருள்களை விட பல்லாயிரம் மடங்கு அதிகமான காட்சிப் பொருட்களும், வரலாறும் பெருங்கடல்களின் அடியில் உறைந்து கிடக்கின்றன. நம்முடைய ஆழ் மனதும் அப்படித்தான்; பூமியின் சகல விதமான காரியங்களின் உறைவிடம் நம் ஆழ்மனம் தான். ***"மனுஷனுடைய இருதயத்தின் யோசனை ஆழமான தண்ணீர் போலிருக்கிறது; புத்திமானோ அதை மொண்டெடுப்பான். (... the heart of man is like a deep water; but a man of understanding will draw it out நீதி. 20:5."*** அப்படியானால் நம்முடைய மனதைப் பற்றின எந்த விதமான வெளிப்பாடுகளுமில்லாமல் இருப்போமானால், அல்லது அறிந்து கொள்ள முயற்சிக்காமல் இருப்போமானால், அப்படிப்பட்டவர்களை வேதம் புத்தியில்லாதவர்கள் என்று குறிப்பிடுகிறது. அதனால் நம்முடைய மனதின் ஆழங்களை ஆராய்ந்தறிய முற்படுவோம்.

***"நீதிமானுடைய சிரசின் மேல் ஆசீர்வாதங்கள் தங்கும்; (upon the head) ... நீதி. 10:6."*** இந்த வசனத்தின் ஆழத்திற்குள் இறங்கினால்; நீதிமானுடைய தலையின் மேல், அதாவது அதற்குள்ளிருக்கிற மூளையின் மேல், அதிலிருக்கிற மனதில், அதன் நினைவுகளில், யோசனைகளின் மேல் ஆசீர்வாதங்கள் தங்கியிருப்பதை அறிந்து கொள்ளலாம். நம்முடைய தலையின் மேல் தான் தேவனுடைய ஆசீர்வாதங்கள் வீடு கட்டி வசித்து வருகிறது. அது தெரியாமல் தேவனே எங்களை ஆசீர்வதியும் என்று கெஞ்சிக்கொண்டிருப்பவர்கள் அநேகர். தேவன் நமக்கென்று ஏற்படுத்தி வைத்திருக்கிற ஆசீர்வாதங்கள் எல்லாம் நமக்குள் தான் இருக்கின்றன; அதாவது நம் மனதிற்குள். தேவனுடைய ஆசீர்வாதங்கள் எல்லாம் இயேசுவுக்குள் தான் இருக்கின்றன; இயேசு நமக்குள்; வாக்குத்தத்தங்களெல்லாம் நமக்குள் தான் இருக்கின்றன. வேத வசன வெளிச்சத்தில் நம்முடைய மனதின் ஆழங்களை ஆராய்ந்து பார்க்கும் போது இது விளங்கும். ***"... தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமேன் என்றும் இருக்கிறதே. 2 கொரி. 1:20." "(... all the promises of God in Jesus are, yes, and in him Amen (express strong agreement). ... கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள்ளே இருப்பதே அந்த இரகசியம். கொலோ. 1:27 (Christ is in you)"***

## அறிவுக்கு வேலை கொடு:

நம்முடைய மனதுக்கு வேலை கொடுப்போம். மூழ்கி, நீச்சலடித்து ஆழங்களில் கிடக்கிற இரகசியங்களை அது மேலே கொண்டு வந்து விடும். நினைவுகளின் அடுத்தக் கட்ட நடவடிக்கை வார்த்தைகளாக பரிணமிப்பது தான். அடுத்ததாக வார்த்தைகள் நடவடிக்கைகளாகவும், நடவடிக்கைகள் ஆசீர்வாதங்களாகவும் பரிணாம வளர்ச்சியடைகின்றன.

இந்த பூமி தேவனுடைய திட்டம்; நாம் அதை முடிப்பதற்காக உருவாக்கப்பட்டவர்கள். நாம் அவரிடத்திலிருந்து வந்தவர்கள்; நம்முடைய ஆரம்பமே *(seed, core, substance)* தேவன் தான். அதனால் நாம் அவரைப்போலிருக்கிறோம்; அதனால் அவரைப் போலவே யோசிக்க, பேச, வேலை செய்ய நம்மாலும் முடியும். அவரைப் போல் நாம் நடந்துக் கொள்வதில்லையென்பதால்; அது முடியாது என்று சொல்லக்கூடாது. நம்முடைய பலம் நமக்குத் தெரியாததினால் அவரைப்போல சிந்திக்க, செயல்பட மறுக்கிறோம், அது முடியாது என்று நினைத்து ஒதுங்கிப் போய்விடுகிறோம். யானையின் பலம் அதற்கே தெரியாததினால்; அது பாகனுடைய கட்டுப்பாட்டுக்குள் பயந்து ஒடுங்கி, சங்கிலியால் கட்டப்பட்டுக் கிடக்கிறது. கொளுத்தப்பட்ட தீப்பந்தத்தைப் பார்த்து பயந்து ஓடுகிறது,

கண்ணியில் மாட்டுகிறது, பள்ளத்திற்குள் விழுந்து ஓலமிடுகிறது, மின் வேலியில் அடிபட்டு பரிதாபமாக சாகிறது.

பூமியின் மீது நம்முடைய பகுதி, தேவனுடைய பகுதி இரண்டுமாக சேர்ந்து தான் வேலைகளை நடப்பிக்கின்றன. தேவனால் தனியாக பூமியின் மீது வேலை பார்க்க முடியாது; அதே போல் நம்மாலும் முடியாது. தேவன் நாமில்லாமல் தனியாக இந்த பூமியின் மீது வேலை செய்வதில்லை. ஆனால் மனிதன் அவரில்லாமல் பூமியின் மீது வேலை செய்ய முயற்சிக்கிறான்; அதனால் தான் விபரீதங்கள் நடக்கின்றன. பரலோகத்திலும் இதே தான் நடக்கின்றது. தேவன் நமக்காக எதைச் செய்ய வேண்டுமானாலும்; அதற்கு தேவையானவற்றை நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார். உதாரணமாக ஜெபம், விசுவாசம், ஸ்தோத்திரபலி, ஆராதனைகள், வேத தியானம் போன்றவற்றைச் சொல்லலாம். இவைகளில்லாமல் தேவன் நமக்காக எதையும் பரலோகத்தில் இருந்து இயக்க முடியாது. அப்படி அவர் இயக்கினாலும் அதனால் பிரயோஜனமில்லை. ஏற்கெனவே பார்த்தபடி நம்முடைய ஒத்துழைப்பு இல்லாமல் எதையுமே பரலோகத்தால் கீழே இறக்க முடியாது. ஆனால் மனிதன் தேவனோடு ஒத்துழைப்பு தராமல்; ஆனால் எதையாவது செய்து விட மாட்டாரா என்று வாயைப் பிளந்து கொண்டு காத்திருக்கும் காட்சிகள் தான் அதிகம். இப்படிப்பட்ட சோகக்காட்சிகள் நிறைந்த சோகப்படங்கள் திரையிடப்படாமலேயே பெட்டிக்குள் முடங்குகின்றன. அப்படியே திரைக்கு வந்தாலும் தோல்வியடைகிறது. *(flop)* வாழ்க்கையில் ஜெயிக்க வேண்டும் என்ற ஆசை கண்டிப்பாக எல்லோருக்கும் தேவை; அதிலும் முக்கியமாக தேவனை அறிந்த உங்களுக்கும் எங்களுக்கும் அதிகம் தேவை. ஆசை என்ற வார்த்தைக்கு தவறான, தரக்குறைவான அர்த்தத்தைக் கற்பிக்கிற மனதை முதலில் மாற்ற வேண்டும். மட்டரகமான ஆசைகளால் உலகம் சீரழிந்து கிடப்பது உண்மை தான். ஆனால் தேவனுடைய மனதின் விருப்பத்தை கண்டு பிடித்து, அதை பூமியின் மீது செய்ய வேண்டும் என்ற ஆசை எப்படி தவறானதாக இருக்க முடியும்? ***"நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய் தொடர்கிறேன். பிலி. 3:12"***

நம்முடைய பொறுப்பில் விடப்பட்டிருக்கும் பூமியை சீரமைக்க முதலில் மனதில் விருப்பங்களை உருவாக்க வேண்டும். தேவ சித்தம் செய்ய முதலில் மனசு வரவேண்டும். ஆசையில்லாத மனசு இலக்குகளை அமைக்காது. இலக்குகள் இல்லாவிட்டால் முன்னேற முடியாது; முன்னேறாவிட்டால் வெற்றி கிடைக்காது. ஊழியப்பாதையில் இதுவரையிலும் ஓடினது போதும் என்று சலிப்புற்று உட்கார நினைக்காமல்; தேவனுடைய மனதின் விருப்பத்தை நிறைவேற்றியே ஆகவேண்டும் என்று வைராக்கிய ஆசை கொண்ட பவுலை நம் முன்மாதிரியாக்குவோம். *(role model)*

## நாம் வித்தியாசமானவர்கள்: (Something different)

நம்முடைய வாழ்க்கைத் தரம் தனியாகத் தெரிய வேண்டும். தேவனற்ற உலக மனிதர்களும், தேவனைப் பற்றின அறிவில்லாத பழைய ஏற்பாட்டின் பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டிருக்கிறவர்களும் நம்மிடத்தில் வித்தியாசமான ஏதோவொன்றைப் *(something different)* பார்க்க வேண்டும். தேவனற்ற உலக மக்கள் தங்களுடைய சுய பெலத்தினால் நமக்கு முன்பாக ஓடிக்கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிந்த விஷயம் தான். தேவனை ஏற்றுக் கொண்ட, ஆனால் அவரைப் பற்றின மனத்தெளிவில்லாத பழைய உடன்படிக்கையின் மக்களும் ஏறக்குறைய ஓரளவுக்கு அப்படித்தான். என்றாலும் அவர்களின் ஓட்டம் தேவனுடைய திட்டத்திற்கு வெளியே வட்டமிடுகிறது. நாமோ நேர்க்கோட்டில் இருக்கிறோம். ஓட்டப்பந்தயத்தில் ஓடுகிற ஓட்டப்பந்தய வீரனை விட வெளியே இருக்கிற ஒருவன் வேகமாக ஓடினாலும் அவனுக்கு பரிசு கிடைக்காது. ஏனென்றால் அவன் ஓட்டப்பந்தயத்தில் பங்குபெறவில்லை, அதனால் சட்ட திட்டங்களுக்கு வெளியே இருக்கிறான். அதனால் அவன் என்ன தான் பிய்த்துக் கொண்டு ஓடினாலும் பிரயோஜனமில்லை.

நாம் தேவனை ஆராதிக்கிறோம், நிறைய ஊழியங்கள் செய்கிறோம், சபை காரியங்கள் எல்லாவற்றிலும் முன்னால் நிற்கிறோம். என்றாலும் தேவனுடைய கிருபையை அறியாதவர்களாய்

இதையெல்லாம் செய்வோமானால் பிரயோஜனமில்லையே. தேவனுடைய திட்டம் எதுவுமே நிறைவேறாத வட்டக்கோட்டில் ஓடி தலை சுற்றி கீழே விழுவது தான் மிச்சம். ***"... ஒருவன் மல்யுத்தம் பண்ணினாலும், சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான். 2. தீமோத். 2:5."*** அப்படியானால் கிருபைக்குள்ளான நாமே சட்டத்தின்படி தேவனுடைய திட்டத்தில் இருக்கிறோம் என்ற உண்மையை மனதில் நன்றாகப் பதித்துக் கொள்ள வேண்டும். தேவனுடைய புதிய கிருபை பிரமாணத்திற்குட்படாமல் செய்யப்படுகிற எந்த ஊழியமும் இலக்கை அடையாது; அதனால் தேவனுடைய இராஜ்ஜிய வேலையும் நிறைவேறாது. பழைய உடன்படிக்கையின் நியாயப்பிரமாண சட்டத்திட்டங்களுக்குட்பட்ட ஊழியங்கள் மிகப் பிரமாண்டமான அளவுகளில் நடக்கலாம். அவர்கள் உலகத்தையே வளைத்துப் போட்டிருக்கலாம்; என்றாலும் பந்தயச்சாலைக்கு *(race course)* வெளியே ஓடுகிறவனுடைய ஓட்டத்தைப் போன்றது தான் இதுவும். இவர்களுடைய பிரமாண்டங்களைப் பார்த்து மதிமயங்கி இவர்களுக்குப் பின்னே ஓடிக் கொண்டிருப்பவர்கள் யோசிக்க வேண்டிய நேரமிது; ***... நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். 1 கொரி. 9:24*** *(Run, such a way as to win the prize.)*

## செழிப்பின் தேவன் – Prosperous Lord:

நாம் எல்லா வகையிலும் நன்றாக, செழிப்பாக வாழ்ந்திருக்க வேண்டுமென்றே தேவன் விரும்புகிறார் என்பதை கற்றுக் கொண்டு வருகிறோம். *கர்த்தர் **நன்மை**யானதைத் தருவார்; ...* என்று தான் வேதம் சொல்லுகிறது. தீமையானவைகளையும் தேவன் தான் தருகிறார் என்று நாம் நினைப்பது நம்முடைய நினைவுகளின் ஏமாற்று வேலைகளாக *(illusion)* இருக்கிறது. *...the Lord shall give that which is good; ... (KJV) The Lord will make us* **prosperous**.*(Good News Bible).* ஆங்கில வேதாகமத்தில் இந்தக் காரியம் அழுத்தம் திருத்தமாக *(highlight)* இருப்பதைக் கவனியுங்கள். கூட்டிக்கழித்துப் பார்த்தால் தேவன் செழிப்பைத் தருகிறார் என்றும், அந்த செழிப்பு நல்லது என்பதையும் விடையாகக் காணலாம்.

கர்த்தர் நமக்குச் செழிப்பை எப்படி தருகிறார் என்பதைப் பார்க்கப் போகிறோம். கிருபை, சத்தியம், நீதி, சமாதானம் என்ற நான்கு காரியங்களும் இங்கே வேலை பார்க்கின்றன. நமக்கு எந்தவொரு குறைவுமில்லாத, 100% முழுமையான வாழ்க்கையைத் தர இந்த நான்கையும் உபயோகிக்கிறார். ***"கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும், நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும். சத்தியம் பூமியிலிருந்து முளைக்கும், நீதி வானத்திலிருந்து தாழப்பார்க்கும். கர்த்தர் நன்மையானதைத் தருவார்; நம்முடைய தேசமும் தன் பலனைக் கொடுக்கும். சங். 85: 10–13."*** *(Mercy and truth met together; righteousness and peace have kissed each other. Truth shall spring out of the earth; and righteousness shall look down from heaven.)* தகுதியிழந்த நமக்கு தேவன் தன்னுடைய குமாரன் இயேசுவின் தகுதியினடிப்படையில் இரகசியங்களை வெளிப்படுத்தி, அதன் மூலமாக நல்வாழ்க்கையை ஏற்படுத்தித் தருகிறார். கிறிஸ்துவின் சிலுவைப் பாடுகளுக்குப் பிறகு தான் இது சாத்தியமானது, சங்கீதம் 85–ல் இந்தக் காரியங்கள் தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டுள்ளன. கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும் போது; அதாவது நமக்கு வெளிப்பாடு கிடைக்கும் போது, நாம் தேவனுடைய திட்டத்திற்குள் நுழைகிறோம். நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும் போது; அதாவது இயேசுவின் தகுதியினடிப்படையில் நாம் சமாதானத்தை பெற்றுக் கொள்கிறோம். சமாதானம் எந்த குறைவுமில்லாத நல்வாழ்வு என்று அர்த்தம். நமக்கு இயேசுவின் மூலமாக கொடுக்கப்படுகிற செழிப்பான வாழ்க்கையை அவருடைய திட்டத்திற்கு முதலீடாகப் போடுகிறோம். இதன் மூலமாக நாமும் நன்றாக இருப்போம்; மற்றவர்களையும் வாழ வைப்போம். தேவனுடைய கிருபையை புரிந்து கொண்டு, சத்தியத்தை அறிந்து கொண்டு, அவருடைய நீதியை தரித்துக் கொண்டு, சமாதானத்தை சுவிசேஷமாக அறிவிக்க ஆரம்பிக்கிறோம். இந்த சுவிசேஷம் மனிதர்களின் மனதில் வேலை செய்ய ஆரம்பிக்கும் போது; பூமியின் மீது தேவ திட்டம் நடந்தேறுகிறது.

## படிக்க படிக்க முகத்தை மாற்றிக் கொள்ளும் புத்தகங்கள்:

ஏதேனை விட்டு ஆதாம் மட்டும் வெளியேற்றப்படவில்லை; மொத்த மனுக்குலமும் வெளியேறியது. அதற்குப் பிறகு மனிதன் வெறும் ஜீரோவாகிப் போனான். ஆனால் *zero (0)* க்கு

மதிப்பை உருவாக்க முடியும். அதன் இடப்பக்கத்தில் ஏதாவது ஒரு எண்ணை எழுதிவிட்டால் அதற்கு மதிப்பு வந்து விடுகிறது. நாம் தான் 0 என்றும், இயேசுவை 1 என்று வைத்துக்கொள்வோம். நம்முடைய வலப்பக்கத்தில் இயேசுவை நிறுத்தி விட்டால் நம்முடைய மதிப்பு கூடுகிறது; அதாவது 10 ஆகி விடுவோம். நம்முடைய ஜீரோக்கள் எத்தனையாக இருந்தாலும் சரி; இயேசுவால் நம் மதிப்பு கூடிக்கொண்டே போகிறது. இப்படி: 10, 100, 1000, 10000, 100000 ... *so on.* இதில் என்னவென்றால் ஜீரோக்கள் அதிகமாக ஆக ஆக அதன் மதிப்பும் உயர்ந்து கொண்டே போகிறது! ஒன்றுக்கும் உதவாமல் போன மனிதர்களையும் தேவனால் உபயோகிக்க முடியும். ஆனால் அவர் நம்முடன் சேர்ந்து வேலை செய்தால் தான் இது சாத்தியமாகும். நாம் அவருக்கு இடம் கொடுத்தால் தான் அவரால் நம்முடன் சேர்ந்து வேலை செய்ய முடியும். அவர் பக்கத்தில் நிற்காமல் உருண்டு உருண்டு ஓடிக்கொண்டேயிருக்கிற ஜீரோக்களை வைத்து தேவனால் எதுவும் செய்ய முடியாது.

அதிகமாக புத்தகங்கள் படிக்கும் பழக்கம் எனக்கு உண்டு; இந்த பழக்கமே புத்தகங்களை எழுத எனக்கு தூண்டுகோலாக இருந்தது. புத்தகங்களை வாசிக்கும் போது பல வினோதமான காரியங்களை என்னால் உணர முடிகிறது. புத்தகங்கள் காலப்போக்கில் முகம் மாறிக்கொண்டேயிருக்கும் நண்பர்களைப் போன்றது. நம்முடைய சிறுவயது நண்பர்கள் காலம் போகப் போக முக அமைப்பில், வயதில் மட்டுமல்ல, ஞானத்திலும் பழக்க வழக்கங்களிலும் மாறிக்கொண்டேயிருப்பதைப் பார்க்க முடியும். மட்டுமல்ல நம்முடனான அவர்களின் நட்பிலும் வித்தியாசங்களைப் பார்க்க முடியும்.

புத்தகங்களும் அப்படித்தான் இருக்கின்றன. இங்கே நான் வேதவிளக்க புத்தகங்களைப் பற்றி மட்டும் சொல்லவில்லை; சாதாரணமாக, தேவனையறியாத உலக சிந்தனையாளர்களின் புத்தகங்களும் இப்படித்தான் தன் முகத்தின் கோணத்தை காலப்போக்கில் மாற்றிக் கொள்கின்றன. சாதாரணமான உலக புத்தகங்களாலேயே இந்த அளவுக்கு ***magic*** செய்ய முடியுமென்றால்; சர்வவல்லமையுள்ள தேவன் தன்னுடைய ஆவியானவரால் எழுதிக்கொடுத்த புத்தகத்தால் எந்த அளவுக்கு ***magic*** செய்ய முடியும்? இந்த ***magic*** ஐ–த்தான் வேதம், வெளிப்பாடு என்றழைக்கிறது.

காலப் பயணத்தைப் ***(time travel)*** பற்றின ஆராய்ச்சிகள் ஒரு பக்கம் போய்க்கொண்டிருக்க... இதைப் பற்றி வேதம் சொல்லும் காரியங்களைக் கவனிக்க வேண்டியது அவசியம். கடந்த காலத்திற்குள் பயணிப்பது சாத்தியமானது தான் என்ற நல்ல செய்தியை வேதம் நமக்குச் சொல்லுகிறது. காலத்தைப் பற்றி பல கருத்துக்கள், கோட்பாடுகள் உலகத்தில் போய்க்கொண்டிருக்கிறது; அவற்றில் உண்மைகளும் கலந்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது. எல்லா மனிதர்களுமே தேவனுடைய சாயலில்தான் படைக்கப்பட்டிருக்கிறார்கள்; அதனால் அவர்களிடமிருந்து தேவஞானம் வெளிப்படுவதைத் தடுக்க முடியாது. மனிதன் அண்டவெளிக்குள் தன் மனதை, பார்வையை செலுத்தி எதையெதையோ ஆராய முற்படுகிறான். ***(galaxy, cluster, asteroid, black hole, bolide, brown dwarf, comet, constellation, dark star, dwarf star, falling star, giant star, meteor, meteorite, moon, nebula, nova, planet, pulsar, quasar, red giant, shooting star, star, sun,supernova,whitedrarf)***

மனிதனின் ***(DNA - deoxribonucleic acid)*** ஏணியில் ஏறி இறங்கி ஆராய்கிறான். நோய்களை பரப்புகின்ற நுண் கிருமிகளோடு ***(bacterium)*** போராடி அவற்றை ஒழித்துக் கட்டுகிறான். கண்ணுக்குத் தெரியாத காற்றிலேறி பயணம் அதன் இராசாயன கட்டமைப்புகளை ஆராய்கிறான். ***(molecule)*** இவைகளெல்லாம் எதைக் காட்டுகிறது? மனிதனிடமிருந்து வெளிப்படுகிற தேவனுடைய சாயலை, ஞானத்தை, அறிவை, புத்திகூர்மையை, தாலந்துகளை... மொத்தத்தில் சொன்னால் தேவனுடைய குணாதிசயங்கள் மனிதனின் மனதிற்குள் தங்கியிருப்பதால் தான்; மனிதனால் எதை வேண்டுமானாலும் செய்ய முடிகிறது. அவன் நினைப்பதெல்லாம் சாத்தியமாகிறது. மனிதனால் முடியாத காரியம் எதுவுமில்லை என்று சொல்லுமளவுக்கு மனிதன் விஞ்ஞானத்தில் மற்றும் அறிவுசார்ந்த எல்லா விஷயங்களிலும் முன்னேறிக்கொண்டிருக்கிறான். தேவனையறியாத, தேவனற்ற உலக மனிதர்களின் கண்டுபிடிப்புகளே இந்த அளவுக்கு நம்மை பிரம்மிக்க வைக்கிறதென்றால்... வெளிப்பாடுகளைப் பெற்ற நாம் தேவனோடு சேர்ந்து, இயேசுவோடு கைகோர்த்துக் கொண்டு,

பரிசுத்தாவியானவரின் வழிகாட்டுதலோடு களத்தில் இறங்கினால்... என்ன நடக்கும் என்பதை விவரிக்க வார்த்தைகளை இனி மேல் தான் கண்டுபிடிக்க வேண்டும்.

விஞ்ஞானத்தால் இதுவரையிலும் எந்தவொரு ஆராய்ச்சியையும் சரியாக முடிக்க முடியவில்லை. அதாவது சரியான நிச்சயமான ஆராய்ச்சி முடிவுகளை கொடுக்கவில்லை, கொடுக்கவும் முடியவில்லை. தேவனற்ற, தேவனை நம்பாத ஏற்றுக் கொள்ளாத, தேவனே இல்லை என்று சாதிக்கிற மனிதனால் எதற்குமே ஒரு சரியான நிச்சயமான முடிவைக் கொடுக்க முடியாது. அவர்களின் முடிவு கேள்விக்குறிகளோடு நின்று போகிறது. உண்மையை அவர்களால் கண்டுபிடிக்க முடியாத காரணத்தினால் தான்; தங்களுடைய ஆராய்ச்சியின் முடிவுகளை கொள்கைகள், கோட்பாடுகள் ***(theory)*** என்ற கட்டத்திற்குள் சிக்க வைத்துவிட்டு வெளியே வந்து விடுகின்றனர். தொடர்ச்சியாக ஆராய முற்படுகிற அடுத்தக் கட்ட ஆராய்ச்சியாளர்களுக்கு இது மூலக்கருவாக ***(Seed)*** இருக்கிறது. இவர்களின் வம்சாவழியினர் தங்களுடைய கண்டுபிடிப்புகளின் முடிவுகளை இன்னும் சிக்கலான கோட்பாடுகளுக்குள் வைத்து விட்டுப் போகின்றனர். ஆதி முதல் அந்தம் வரை இதுதான் நடந்து கொண்டிருக்கிறது. முடிவு சொல்ல, முடித்து வைக்க ஆளில்லை.

யார் சொன்னது? முடித்து வைக்கவே நாம் எழுப்பப்பட்டிருக்கிறோம். எந்த கேள்விக்கானாலும் மிகச்சரியான ஆணித்தரமான முடிவை வேதம் மட்டுமே கொடுக்க முடியும் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ள முடியாத உண்மை. ஆனால் எங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. காலப்பயணத்தைப் பற்றிய ஆராய்ச்சிகளுக்கும் வேதம் சரியான பதிலைக் கொடுக்கிறது; அதைப் பார்க்கப் போகிறோம்.

## *காலத்தைப் பற்றி வேதம் தரும் வெளிப்பாடு:*

காலப்பயணத்தைப் பற்றி கருத்துப் பேதங்களையுடைய ஆயிரம் கோட்பாடுகள் வெளிவந்து கொண்டிருந்தாலும்; சந்தேகம் கலக்காத மிகச்சரியான பதிலை தேவன் மட்டுமே தரமுடியும் என்று அடித்துச் சொல்ல முடியும். ஒரு கோட்பாட்டைப் பற்றிய சரியான தன்னிலை விளக்கம் அந்த கோட்பாட்டை வகுத்தவரால் தான் கொடுக்க முடியும். பலவிதமான பிரமாணங்களின் அடிப்படையில் தான் பூமியும் அதிலுள்ள யாவும் இயங்கிக் கொண்டிருக்கிறது; நேரமும் அதில் ஒன்று. தேவனுடைய பிரமாணங்களுக்கு ஒழுங்காக கீழ்ப்படிந்து இயங்குவதால் தான்; இதுவரையிலும் பூமி தன் அச்சில் சுற்றிக் கொண்டிருக்கிறது. கீழ்ப்படியாமல் தன்னிஷ்டத்திற்கு இயங்குகிற மனிதர்களின் நிலை குப்பையாகி, தூசு மண்டலமாகி பூமியைச் சுற்றி வந்து கொண்டிருக்கிறது. சனி கிரகத்தைச் சுற்றி வரும் வளையங்களைப் ***(Saturn's Rings)*** போல இது காணப்படுகிறது. ஒரு இலட்சத்திற்கும் மேலான சுருள் வளையங்களை ***(ringlets)*** ஆராய்ச்சியில் கண்டு பிடித்திருக்கிறார்கள். ***(Saturn's rings are extremely wide, but very flat, bands created by orbiting fragments of rock, gas, and ice. Close examination reveals that there are more than 100,000 separate ringlets.)*** தேவனுடைய பிரமாணங்களுக்கு வளைந்துக் கொடுக்காமல்; மனம் போன போக்கில் வாழும் மனிதர்களின் நிலையும் இது தான். காலத்தைப் பற்றி வேதம் பல காரியங்களை நமக்குச் சொல்லிக் கொடுக்கிறது.

காலம் என்று ஒன்று கிடையாது என்றும், பூமியின் மீது மனிதனின் வேலைப்பாடுகளை ஒழுங்குப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட கற்பனை தான் காலம் என்றும் விஞ்ஞானம் கூறுகிறது. இது வெறும் கோட்பாடுதானே தவிர உண்மையல்ல என்பதை மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும். காலம் என்று ஒன்று கிடையாது என்று சொல்லப்படுகிற விஞ்ஞானக்கூற்றை நம்ப ஆரம்பித்தோமானால்; அதை பிரயோஜனப்படுத்தாமல் விட்டுவிடுகிற ஆபத்தான சூழ்நிலைகள் அதிகரிக்கும். இல்லாத ஒன்றை நாம் எப்படி பிரயோஜனப்படுத்துவோம்? அதனால் தான் தேவன் இப்படிப்பட்ட விஞ்ஞான கொள்கைகளை ***(theories, philosophy, idea, belief, guess, viewpoint, thinking, opinion, feeling, thought)*** குறித்தும் எச்சரிப்புக் கொடுக்கிறார். ***"...சீர் கேடான வீண் பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய்ப் பேர் பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு. 1 தீமோத். 6:20."***

காலம் என்ற ஒரு பிரமாணம் உண்டு; அது பூமியின் மீது இயக்க நிலையில் இருக்கிறது

என்பதை வேதம் திட்டவட்டமாக அறிவிக்கின்றது. ***"நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். எபே. 5:16." "புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து, காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்." கொலோ. 4:5."*** இல்லாத ஒன்றை எடுத்து தேவன் உபயோகப்படுத்தச் சொல்ல மாட்டார். காலத்தை எடுத்து உபயோகிக்கின்ற வேலை நம் பொறுப்பில் விடப்பட்டிருக்கிறது; அதை நாம் தான் செய்ய வேண்டும், தேவன் வந்து நமக்கு பதிலாக செய்ய மாட்டார். தேவன் வந்து அதைச் செய்வார் என்று நினைத்து சாப்பிட்டு, ஏப்பம் விட்டு, படுத்து, குறட்டை விட்டுக் கொண்டிருந்தோமானால்; காலம் நம்முடைய அறியாமையினால் ஒன்றுக்கும் பிரயோஜனப்படாமல் விழுங்கப்பட்டிருக்கும். நம் சோம்பலும், அசதியும் அதை ஜீரணித்துப் விட்டு தோல்விகளை கழிவுகளாக வெளியே தள்ளியிருக்கும்.

காலத்தைப் பற்றின சரியான அறிவும், விழிப்புணர்ச்சியும் இல்லாததினால் அடைந்த வாழ்க்கையின் தோல்விகளைச் சரிசெய்ய அதைப் பற்றி சரியாக அறிந்து கொண்டு முன்னேறுவது நல்லது. நம்முடைய வேலைகளுக்கு காலம் ஒரு மூலப்பொருளாக ***(raw material, mineral, reserve, resource)*** இருக்கிறது. காலம் நம்முடைய வேலைகளுக்கு மிகவும் தேவைப்படுகிற ஒரு பொருளாக, உதவிகரமாக, மிக முக்கியமானதாக இருக்கிறது. இதனுடன் கூட்டுச் சேராமல் மனிதனால் எதையுமே பூமியின் மீது செய்ய முடியாது. ஒரு வேலை செய்யும் போது; நேரமானது அந்த வேலைக்குள் இழுத்துக் கொள்ளப்படுகிறது. அதாவது அந்த வேலையைச் செய்து முடிக்கக் காலம் பிரயோஜனப்படுத்திக் கொள்ளப்படுகிறது. ***(Time? : a dimension that enables two identical events occurring at the same point in space to be distinguished, measured by the interval between the events.)***

## உதாரணமாக:

உதாரணமாக: வீட்டில் சப்பாத்தி செய்வதற்காக கோதுமை மாவு, உப்பு, தண்ணீர், எண்ணெய் போன்றவற்றை உபயோகப்படுத்துகிறோம். சப்பாத்தி செய்வதற்கு இவைகள் தான் தேவையான பொருட்கள் ***(ingredients)*** என்று இதுவரை நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால் இனி மேல் அப்படி நினைக்க வேண்டாம்; நேரம் கூட சப்பாத்தி பண்ணுவதற்கான ***ingredients*** ல் ஒன்று தான் என்பதை இதுவரையிலும் யோசித்துக் கூடப் பார்த்திருக்க மாட்டோம்.

சப்பாத்திக்கு மாவை எடுத்து, பாத்திரத்தில் போட்டு, உப்பை போட்டு, கொஞ்சம் எண்ணெய் விட்டு, தண்ணீரை மிதமாக சூடாக்கி, அதில் ஊற்றி சரியான பதத்திற்கு பிசைந்து, சிறிய உருண்டைகளாக்கி, அதைத் தட்டையாக உருட்டி, அடுப்பைப் பற்ற வைத்து, அதில் சப்பாத்தி கல்லை வைத்து, உருட்டிய சப்பாத்தியை அதில் போட்டு, மிதமான சூட்டில் வேக வைத்து, சிறிது எண்ணெயை சுற்றிலும் ஊற்றி, திருப்பிப் போட்டு, சரியான பதத்திற்கு வெந்ததும் எடுத்து சாப்பிடும் தட்டில் வைக்கும் வரைக்கும் அரை மணி நேரம் ஆகிறதென்று வைத்துக் கொள்வோம். சப்பாத்தியானது மேற்சொல்லப்பட்ட பொருட்களை ***(ingredients)*** மட்டுமல்ல அரை மணி நேரத்தையும் தனக்குள் எடுத்துக் கொண்டது என்பதே உண்மை.

அதாவது சப்பாத்தி செய்ய மாவும் எண்ணெயும் மட்டுமல்ல, 30 நிமிடங்களும் தேவை என்பதை கொஞ்சம் உன்னிப்பாக யோசித்துப் பார்த்தால் (இதுவரையிலும் என்றுமே யோசிக்காத அளவில்) புரிந்து கொள்ளலாம். நேரமானது இப்படித்தான் வேலை பார்க்கிறது. அதைக் கண்ணால் பார்க்க முடியாத காரணத்தினால் யாரும் அதைக் கணக்கில் எடுப்பதில்லை, அதை மதிப்பதும் இல்லை, அதை உணர்வதும் இல்லை. ஆக மொத்தத்தில் எல்லாவற்றையும் விட முக்கியமான மூலப்பொருளான காலம் நம்முடைய செயல்பாடுகளினூடே ஊமையாகி நகர்கிறது.

காலத்தைப் பற்றி தெளிவான விளக்கத்தை உள்ளத்தில் பெற்றுக் கொண்டோமானால்; பிறகு அதை வீணாக்க துணியமாட்டோம். நாம் எந்த வேலை செய்தாலும் சரி; அந்த வேலைக்குள்ளாக காலமும் சேர்ந்து வேலை செய்து தன்னைச் செலவழித்துக் கொண்டிருக்கிறது. நாம் சரியானதைச் செய்தாலும் சரி, தவறானதைச் செய்தாலும் சரி; காலம் செலவாகிக் கொண்டுதான் இருக்கிறது. அதாவது நாம் காலத்தை செலவழித்துத்தான் எதை வேண்டுமானாலும் செய்கிறோம். பொதுவாக

மனிதர்களுடைய செயல்பாடுகள் எல்லாமே சரியானதாக இருப்பதில்லை. நல்லது, கெட்டது இரண்டையும் கலந்து தான் செய்கிறார்கள்; இது இயற்கையாகவே மனிதனுக்குள் இருக்கிறது. ஆதாம் தேவனுடைய வார்த்தையை மீறி, பாவம் செய்து, தன்னுடைய மகிமையை இழந்து, ஏதேனை விட்டு வெளியேற்றப்பட்ட பிறகு தான் இந்த விபரீதம் மனிதனுடைய மனதிலும், உடம்பிலும் சம்பவித்தது.

சரியானதைச் செய்யும் போது; அதாவது தேவனுடைய சித்தத்தை செய்யும் போது காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்கிறோம். தேவனுடைய மனதில் விருப்பத்திற்கு மாறானதைச் செய்யும்போது, அதாவது தவறானதை, பாவத்தைச் செய்யும் போது காலத்தை வீணாக்கி விடுகிறோம். அதாவது காலம் வீணாகச் செலவழிந்து போகிறது. தேவனை அறிந்து கொள்ளும் வரைக்கும் நம்முடைய செயல்பாடுகள் எல்லாமே தேவன் நமக்கு வகுத்துக் கொடுத்த காலம் என்ற பிரமாணத்தை வீணாக்கத்தான் செய்கின்றன. அக்காலகட்டங்களில் நாம் தெரியாமல், அறியாமல், அடிமைத்தனத்திற்குட்பட்டு வாழ்கிறபடியினால்; காலத்தை வீணடிப்பது என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடுகிறது. ஆனால் தேவனை ஏற்றுக் கொண்டு, நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு, விசுவாசத்திற்குள் நுழைந்து, தேவனை அறிகிற அறிவில் வளர்ந்து வருகின்ற இந்நாட்களில் நாம் என்ன செய்கிறோம் என்பதே கேள்வி. இக்காலகட்டங்களிலும் தேவன் தன்னுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்காக (தேவ இராஜ்ஜிய வேலையைச் செய்ய) கொடுத்த காலம் என்ற இந்த மூலப்பொருளை *(substance)* வீணாக்கிக்கொண்டேயிருந்தோமானால் அது சரியாகுமா?

## பொல்லாதவைகளை நல்லவைகளாக்கும் காலம்:

*"நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். எபே. 5:16. (Redeeming the time, because the days are evid)."* என்று வேதம் ஆலோசனையை எச்சரிப்புடன் கலந்து கொடுக்கிறது. நாட்கள், அதாவது நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற காலம் மிக மோசமானது என்பது சொல்லாமலேயே தெரியும். எங்கே பார்த்தாலும் பலவிதமான கொடூரமான பாவங்கள், கெட்ட நினைவுகளுடன் நடமாடும் மனிதர்கள், பொறாமை, தீவிரவாதம் (சட்டத்திற்கு புறம்பான காரியங்கள்), ஒழுக்கக்கேடுகள், அசிங்கங்கள், இழிவான காரியங்கள், அழுக்கான சூழல்கள், பயங்கரமான நிகழ்வுகள், வெறுப்புண்டாக்குகிற சூழ்நிலைகள், கலகங்கள் தான் கண்களுக்குத் தெரிகிறது. *(evil, wicked, malevolent, sinful, malicious, criminal, immoral, foul, vile, nasty, horrible, unpleasant, revolting, disgusting, obnoxious)* பாவங்களும், சாபங்களும் சேர்ந்து சுழன்று அடித்து பூமியையே துரசிக்கிரகமாக மாற்றி வைத்திருக்கிறது. என்ன நடக்கிறது என்பதே மனிதர்களுக்குப் புரிவதில்லை. வாழ்க்கையே புரியாத புதிராக இருக்கிறது; கேள்விகள் ஏராளம், பதில் சொல்ல ஆளில்லை.

ஆனால் தேவன் தன்னுடைய ஆவியானவர் மூலமாக வேதத்தில் எல்லாவற்றுக்கும் பதில் சொல்லியிருக்கிறார், பிரச்சனைகளைச் சரி செய்ய ஆலோசனையும் தந்திருக்கிறார், உதவியும் செய்கிறார். இந்த பிரச்சனைகளையெல்லாம் ஒழித்துக் கட்டி, சூழ்நிலையை தலை கீழாக, நல்ல விதமாக மாற்ற வேண்டுமானால் காலத்தைப் பிரயோஜனப் படுத்தச் சொல்கிறார். பிரச்சனைகளுக்கு தீர்வாக காலம் என்ற பிரமாணம் நமக்கு உதவி செய்ய வருகிறது. பொல்லாத உலகத்தை நல்ல உலகமாக மாற்ற காலத்தைப் பிரயோஜனப்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை.

## எப்படி பிரயோஜனப்படுத்துவது?:

தேவனுடைய திட்டத்தை செயல்படுத்தும் போது; நாம் காலத்தைப் பிரயோஜனப்படுத்துகிறோம். அப்படி செய்யாமல் வேறு எதையாவது செய்யும் போது, அல்லது எதுவுமே செய்யாமல் இருக்கும் போது காலத்தை வீணடிக்கிறோம். காலம் என்ற பிரமாணம் பூமியின் மீது வாழ்ந்து வருகிற மனிதர்களால் செலவழிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. ஆனால் எப்படி எதற்காக செலவழிக்கப்படுகிறது என்பது தான் கேள்வி. காலத்தை சரியானபடி பிரயோஜனப்படுத்தி; இந்தப் பொல்லாத உலகத்தை மாற்றியமைப்பது எப்படி? இந்தக் கேள்விக்கான பதிலை வேதத்திலிருந்து தேடி எடுத்து... நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற பொல்லாத உலகத்தை மாற்றி நல்ல உலகமாக மாற்றும் ஆற்றல் காலத்திற்கு உண்டு.

## ***தேவன் – காலம் – நாம்:***

தேவன் காலத்திற்கு வெளியே நின்று செயல்படுகிறார். காலம் என்ற பிரமாணம் தேவனைக் கட்டுப்படுத்துவதில்லை. பூமியின் மீது பலவிதமான பிரமாணங்கள் செயல்பாட்டில் இருப்பது தெரிந்த காரியம் தான். ஆனால் அவைகளெல்லாம் தேவனுக்காக உருவாக்கப்படவில்லை; மனிதர்களுக்காக உருவாக்கப்பட்டவை. பரலோகமும், பரலோகத்திலுள்ள காரியங்களும், தேவனும், தெய்வத்துவமான காரியங்களும் ஆவிக்குரியவைகள்; அதாவது கண்களால் பார்க்க முடியாதவைகள். அப்படிப்பட்ட ஆவிக்குரிய காரியங்களின் செயல்பாட்டிற்கு காலம் என்ற பிரமாணம் தேவையில்லை. ஆனால் பூமியும் அதிலுள்ள காரியங்களும், மனிதனும் அவனுக்குரிய காரியங்களும் கண்களால் பார்க்கக்கூடியவைகள். அவைகளை இயக்க காலம் என்ற பிரமாணம் தேவை, அதனடிப்படையில் தான் பூமியும் அதன் நிறைவும் இயங்கியாக வேண்டும்.

அதாவது மனிதனுடைய சரீரம் காலப்பிரமாணத்தினூடேதான் இயங்கியாக வேண்டும். தேவனுக்குச் சரீரம் இல்லாத காரணத்தினால் அவரால் காலத்திற்கு வெளியே நிற்க முடியும். (புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்; ஆவியானவர் உதவி செய்வார். ***God dwell out side of the time. God is not limited by time; but he deals with his creation in time.)*** தேவனுக்குக் காலம் தேவையில்லாவிட்டாலும் மனிதர்களுடன் தொடர்பு கொள்ளும் போது ***(interacting)*** காலத்தினடிப்படையில் தான் வேலை செய்கிறார்; அப்படித்தான் செய்தாக வேண்டும் வேறு வழியில்லை. காலத்துக்கு வெளியே நின்று கொண்டு தேவனால் மனிதனுடன் தொடர்பு கொள்ள முடியாது. அப்படி அவர் செயல்பட முயற்சிப்பாரானால் காணக்கூடிய முப்பரிமாணமுள்ள மனிதனின் சரீரம் அவரை தடுத்து நிறுத்தி விடும்.

சரி, அப்படியானால் தேவன் மனிதனுக்காக காலத்திற்குள் எப்படி வருகிறார்? மனிதனின் ஆவியின் மூலமாக, பரிசுத்தாவியானவரின் மூலமாக, மனிதனின் ஆத்மா என்ற மனதின் சிந்தனை மண்டலத்தின் மூலமாக. புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்..

தேவனுடைய செயல்பாட்டுக்கு காலம் ஒரு பிரச்சனையாயிருப்பதில்லை என்பதைப் பார்த்து வருகிறோம். ஏனென்றால் அவர் ஆவியாயிருக்கிறார். அவருக்கு கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்றெல்லாம் எதுவும் கிடையாது; எல்லாம் அவருக்கு ஒன்று தான். ஏனென்றால் அவருக்குக் காலமே கிடையாது. அதைத்தான் இந்த வசனங்களில் நாம் பார்க்கிறோம். ... கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம். 2 பேது. 3:8 ***(be not ignornt of this one thing).*** உமது பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக்கழிந்த நாள் போலவும், இராச்சாமம் போலவும் இருக்கிறது.

தேவன் காலத்திற்கு உள்ளே நின்றால் என்ன, வெளியே நின்றால் நமக்கென்ன என்றெல்லாம் இந்த விஷயத்தை நாம் ஒதுக்கி விட முடியாது. அப்படி ஒதுக்கக்கூடாது என்று வேதம் நமக்கு எச்சரிப்பும் கொடுக்கிறது. தேவன் காலத்திற்கு வெளியே நின்று எப்படி வேலை பார்க்கிறார்? காலத்திற்குள் நின்று செயல்படுகிற நம்முடன் அவர் எப்படி இடைபடுகிறார்? காலம் என்றால் என்ன? அது ஏன் அவ்வளவு முக்கியம்? என்ற கேள்விகளுக்கெல்லாம் விடை காணுவது மிகவும் அவசியம்.

தேவன் எப்படியோ நாமும் அப்படித்தான் என்ற ஆச்சரிமான உண்மையை அறிந்து கொண்டோம். அப்படியானால் அவர் எப்படி வேலை செய்கிறாரோ அப்படியே நம்மாலும் வேலை செய்ய முடியும் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். தேவன் காலத்தைக் கையாளும் விதத்தை நம்மாலும் முயற்சிக்க முடியும். அப்படியானால் நமக்கும் ஆயிரம் வருஷம் ஒரு நாளைப் போல் தானா என்று கேட்டால்; ஆம் என்பது தான் பதிலாக இருக்க முடியும். தேவனைப் போலவே இருக்கிற நம்மால் அவருடைய செயல்பாடுகளில் ஒரு சில காரியங்களை மட்டும் செய்ய முடியாது என்றால்... அர்த்தமே ***(logic)*** தப்பாகி விடுமே? அதனால் காலத்தையும் அவரைப் போலவே நாமும் கையாள முடியும் என்பதை நாம் ஒத்துக்கொண்டே ஆகவேண்டும்.

## அது சாத்தியமானது தானா? எப்படி?:

கண்களால் பார்க்க முடியாத ஆவியான பரலோகத்திலிருந்து; பார்க்கக்கூடிய முப்பரிமாணமுள்ள பூலோகத்தை உருவாக்கின தேவன், அதற்கேற்றவாறு பல நியமங்களை ஏற்படுத்தினார் *(eg: Time, Space, Matter, Energy and Motion).* ஆதியாகமம் 1 ஆம் அதிகாரத்தில் தேவன் இந்த 5 பிரமாணங்களையும் பூமியின் மீது ஏற்படுத்தி, அவற்றை உபயோகித்து எல்லாவற்றையும் ஒழுங்கும் கிரமமுமாக உருவாக்குவதைப் பார்க்கலாம். முப்பரிமாணமுள்ள பூமிக்கும், அதிலுள்ள மனிதர்களுக்கும் தான் இந்த பிரமாணங்கள் தேவையே தவிர தேவனுக்குத் தேவையில்லை. ஏனென்றால் அவர் தங்கியிருக்கும் பரலோகத்திலுள்ள காரியங்கள் இந்த 5 பிரமாணங்களுக்கு அப்பாற்பட்டவை. அவைகள் பரலோகத்தில் தேவையில்லை, அவற்றை உபயோகப்படுத்த வேண்டிய அவசியமும் அங்கே இல்லை, செயல்படுத்தவும் முடியாது.

தேவனிலிருந்து நம்மை வேறு பிரித்துக் காட்டுகிற ஒரே ஒரு காரியம் இருக்குமானால் அது நம்முடைய சரீரம் மாத்திரம் தான். மற்றபடி அச்சு அசலாக நாம் அவரைப் போலவே இருக்கிறோம். பரலோகத்திலிருந்து பூமியை வேறு பிரித்துக் காட்டுகிற விஷயங்கள் இந்த 5 பிரமாணங்கள் மாத்திரம் தான்; மற்றபடி பூமியும் பரலோகத்தைப் போன்றது தான். ஆதியாகமம் 2:9, வசனத்தையும், வெளி. 22:2 வசனத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த உண்மை விளங்கும். பரலோகத்தை விட வித்தியாசமான பரிமாணத்தையுடைய பூமியில் நாம் வசிக்க வேண்டியதாயிருப்பதால்; அதற்கேற்ற நியமங்கள் நமக்குக் கண்டிப்பாகத் தேவை. அந்த நியமங்களினடிப்படையில் தான் நாம் இயங்கியாக வேண்டும். இல்லையென்றால் பூமியில் வசிக்க முடியாது. இந்த நியமங்களில் காலமும் ஒன்று. இதைப் பற்றி கண்டிப்பாக அறிந்திருக்க வேண்டும் என்று வேதம் நமக்கு ஆலோசனை தருகிறது. காலத்தைப் பற்றின வெளிப்பாடு நம்முடைய வெற்றிக்கும், வாழ்வுக்கும், தேவனுடைய இராஜ்ஜிய வேலை சிறப்பாக முடிவதற்கும் பேருதவியாக அமையும்.

தேவன் காலத்தைக் கையாளுவதைப் போலவே நாமும் கையாள அழைக்கப்பட்டிருக்கிறோம். பூமியில் மனிதன் பிறந்த நாள் முதல், இறக்கும் நாள் வரை அவன் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்திருக்கும் காலத்தைப் பற்றி எதுவுமே சரிவரத் தெரியாமல் ஓடிக்கொண்டிருப்போமானால் நம் வாழ்க்கையே வீணாகி விடுமே. மனிதனின் பாவத்தால், அதனால் வந்த சாபத்தால், அந்தச் சாபம் பிறப்பித்த வியாதி, தரித்திரம் போன்ற கொடுமைகளால் தத்தளித்துக் கொண்டிருக்கிற உலகம் இது. ஆனால் எல்லாவற்றையும் மாற்றி சரி செய்து பூமியை பரலோகம் போல ஒரு குறைவுமில்லாமல் ஆக்கக்கூடிய சக்தி காலத்திற்குள் ஒளிந்திருக்கிறது. தேவன் தன்னுடைய நியமங்களையெல்லாம் மனிதனின் நன்மைக்கேற்றவாறே உருவாக்கியிருக்கிறார். அதனால் தான் ***"நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். எபே. 5:16."*** என்று தேவன் நமக்கு ஆலோசனை தருகிறார். பிரயோஜனப்படுத்தினால் பொல்லாப்புகள் மாறிப்போகும், நல்லது நடக்க ஆரம்பிக்கும், வாழ்க்கை ஒளிமயமாகும், அந்த ஒளிமயமான வாழ்க்கை தான் ஏதேனின் வாழ்க்கை.

தேவன் காலத்தை மிக நேர்த்தியாகக் கையாள்கிறார்; அதைப் போல நாமும் கையாள வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். அப்படி கையாண்டால் நம்மால் தேவனைப் போல செயல்பட முடியும், செயல்பட்டால் எல்லாம் சரியாகி விடும். சிலவற்றைப் பார்ப்போம்: காலத்தை குறிக்க வேண்டும் *(time setting)* (யாத். 9:5), காலத்தைக் கணக்குப் பார்க்க வேண்டும் (லேவி. 25:50), நம்முடைய மனதின் நினைவுகளுக்கும் ஞானத்திற்கும் காலம் காரணமாக அமைகிறது (பிர. 8:5), காலத்தை நிதானிக்க வேண்டும் 12:56 *(notice, see, perceive, discover, observe, catch sight of, glimpse, detect, spot)*, காலத்தை அறிந்திருக்க வேண்டும். (ரோம. 13:11) *(knowing, meaningful, significant, expressive, eloquent, perceptive, shrewd)* காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும். எபே 5:16 *(Redeeming, saving, good, positive, abiding, compensatory, restorative).*

## கடந்த காலப் பயணம் சாத்தியமானது தான்: (!?)

தேவனுக்குக் காலம் அல்ல, நாம் தான் முக்கியம். அவர் நமக்கு ஆதரவாக இருக்கிறார்.

காலத்தை நம் வசதிக்காக வடிவமைத்தார். அதனால் நாம் நேரம் போகிறதே, நேரமாச்சே, நேரமேயில்லை, என்று பதற வேண்டியதில்லை, நம் இஷ்டத்திற்கு நேரத்தை பிடித்து இழுத்து உபயோகிக்க கற்றுக் கொள்ள வேண்டும். காலம் உனக்காக காத்திருக்காது என்று மிரட்டுகிறார்களா? பயப்பட வேண்டாம், காத்திருக்கச் சொல்லி கட்டளையிடுவோம், அது நிற்கும். பூமியில் நாம் தான் முக்கியமானவர்கள் ***(highlight).*** நியமங்களெல்லாம் நம் காலின் கீழ் இருக்கின்றன. கடந்த காலத்தில் இழந்து போனவைகளை ***(lost)*** நினைத்துக் கவலைப்படவேண்டாம். அங்கே போய் அவற்றை மீட்டெடுக்க முடியும். முடியுமா? ***Yes,*** முடியும்! தேவனை அறிந்த, அவருடைய பிள்ளைகளாகிய நமக்கு காலப்பயணம் ***(time travel)*** சாத்தியம் தான்! நம்மால் கடந்த காலத்திற்குள்ளும் பயணம் செய்ய முடியும். நம்முடைய சரீரத்தினால் அங்கே போக முடியாவிட்டாலும்; நம்முடைய உள்ளான ஆவி மனிதனால், அவனுடைய மனதின் நினைவுகளால் அங்கே போக முடியும். தாயின் கருவறை வரைக்கும் போக முடியும்; பரிசுத்தாவியானவருடன். போய் இழந்த, பட்சிக்கப்பட்ட எல்லாவற்றையும் மீட்டு நிகழ்காலத்திற்குள் கொண்டு வர முடியும்.

எதிர்காலத்தில் நமக்காக தேவன் வைத்திருக்கும் நன்மைகள் காத்திருக்கின்றன. தரிசனத்தை சரியாக அமைத்துக் கொள்வதன் மூலமாக அவைகளை அடைய ***(achieve)*** முடியும் என்பதை ஒத்துக் கொள்கிற தேவபிள்ளைகள்; அதே வேலையை கடந்த காலத்திற்குள்ளும் செய்ய முடியும் என்பதை ஒத்துக் கொள்ள தயக்கம் காட்டுகிறார்கள். ஆனால் ***"... வெட்டுகிளிகளும், பச்சைகிளிகளும், முசுக்கட்டைப்பூச்சிகளும், பச்சைப் புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்கு திரும்ப அளிப்பேன். யோவே 2:25 என்று தேவன் உறுதிமொழி கொடுத்திருக்கிறார்."*** வருங்காலத்திற்குள்ளானதை மட்டுமல்ல, இறந்த காலத்திற்குள்ளானதையும் நம்மால் பெற்றுக்கொள்ள முடியும். நம்முடைய மனதின் ஆற்றல்களின் மூலமாக, கற்பனை சக்தியின் மூலமாக கடந்த காலத்திற்குள் போக முடியும். எல்லோருமே கற்பனை செய்கிறார்கள் தான்; ஆனால் அவைகளெல்லாம் பிரயோஜனமில்லாதவைகளாக, அர்த்தமில்லாதவைகளாக, தேவ சித்தத்திற்கு விரோதமானதாக, பாவம் நிறைந்தவைகளாக, பயங்கரப்படத்தக்கவைகளாக, இச்சை சார்ந்த அசுத்த சிந்தனைகளாகவே இருக்கின்றன. இப்படிப்பட்ட கற்பனைகளால் இழந்து போன ஆசீர்வாதங்களை திரும்பப் பெற முடியாது. மட்டுமல்லாமல் ஆசீர்வாத பாதையில் தடி வெட்டிப்போடுவதற்குத்தான் இவைகள் உபயோகப்படும்.

நம்முடைய அறியாமையினால் கடந்த காலங்களில் நாம் செய்த தவறுகளை நம்முடைய கற்பனை நினைவலைகளின் மூலமாக சரி செய்ய முடியும். எப்படி? கடந்த காலத்தில் நாம் செய்த எதிர்மறைக் காரியங்கள் நடந்த காலகட்டங்களுக்குள் நம் நினைவுகளை பறக்க விட வேண்டும். அந்த இடத்தில் நினைவுகள் ஒரு பறவை போல பறந்து சென்று இறங்கும். அந்த காலகட்டத்தில் நாம் சரியான, தேவனுக்குப் பிரியமான, நேர்மறையான காரியங்களை செய்ததாக நினைக்க வேண்டும். சரி, இப்படிச் செய்வதால் என்ன நடக்கிறது? நம்முடைய மனம் நம்முடைய நினைவுகளை நம்பி விடுகிறது; அதாவது நடக்காத நல்ல காரியங்களை நடந்ததாகவே நம்பி விடுகிறது. இதனால் நம்முடைய மனம் உற்சாகம் கொள்கிறது, நம்மையும் உற்சாகப்படுத்துகிறது. பிறகென்ன இழந்து போனதை மீண்டுமாக பெற்றுக் கொள்ள வேண்டிய உத்வேகம் நமக்கு கிடைக்கிறது.

இதே காரியத்தைத்தான் எதிர்காலத்திற்குள்ளாகவும் செய்ய வேண்டும். நம்முடைய பயத்தை, சந்தேகத்தை, கவலைகளை அங்கே பறக்க விடாமல்; தைரியத்தை, நம்பிக்கையை, சந்தோஷத்தை நினைவுப் பறவைகளாக்கி எதிர்காலத்திற்குள் பறக்க விட வேண்டும். அவைகள் பறந்து நாம் விரும்பும் காலகட்டங்களுக்குள்ளாக போய் இறங்கும். அது இன்னும் 5 அல்லது 10 வருடங்களுக்கு அப்பாலுள்ள காலகட்டங்களாக இருக்கலாம். அல்லது 20, 30, 40 வருஷங்களுக்கு அப்பாலுள்ள காலமாகவும் இருக்கலாம். நம் விருப்பப்படி காலத்தை ஒழுங்குபடுத்தி அனுப்ப வேண்டும். நாம் அனுப்பின தேவனுடைய வாக்குத்தத்தம் சார்ந்த நல்ல காரியங்களை ஏற்கெனவே நடந்து முடிந்ததாகவே மனம் நம்பி பிரகாசமடைகிறது. சீக்கிரமாகவே அவற்றை ***achieve*** பண்ணக்கூடிய வேகத்தையும், சக்தியையும் நமக்குத் தருகிறது.

தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற ஒரு மிகவும் ஆச்சரியமான, ***interesting and thrilling***

ஆன பிரமாணம் இது. சந்தோஷமாக முயற்சி செய்வோம். வெற்றி நிச்சயம்.

## முடிவாக ...

முடிவாக: கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ***maximize*** செய்வது தான் இந்த புதிய உடன்படிக்கை ஊழியத்தின் பிரதான நோக்கம். சிலுவையில் அறையப்பட்ட இயேசுவினால் நமக்கு உண்டாகியிருக்கிற ஆசீர்வாதங்களை அவருடைய பிள்ளைகள் தங்களுடைய அறியாமையினால் இழந்து போய்விடக்கூடாது என்பதே எங்களுடைய ஆதங்கம். ***"மாயமான தாழ்மையிலும், தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று, காணாதவைகளிலே துணிவாய் நுழைந்து, தன் மாம்ச சிந்தையினாலே வீணாய் இறுமாப்புக் கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப் பொருளை நீங்கள் இழந்து போகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப் பாருங்கள். கொலோ. 2:19"***

இந்த புதிய உடன்படிக்கையின் ஊழியம் தொடர்ந்து வெற்றியாக நடக்க வேண்டும் என்ற சிந்தனையை மனதில் வைத்து ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக என்று முடிப்பது சரியாக வராது; **ஏனென்றால் ஏற்கெனவே "நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்".**

உங்களது சந்தேகங்கள் – கேள்விகள் – ஆலோசனைகள்
ஏதேனுமிருப்பின் எங்களுக்கு எழுதுங்கள். தொடர்பு கொள்ளுங்கள்.

எங்கள் முகவரி:
சகோதரி. **லதா டேவிட்**

**நித்தியர் இயேசு ஊழியங்கள்**
5-A/200, கால்டுவெல் காலனி, 2–ம் தெரு,
தூத்துக்குடி–628 008

அலைபேசி: **+91 0-94424 66250 & +91 0-90034 56506**
Email : **sovereignjesus@gmail.com**
Web : **http://tamilchristian.com/index.php/resources/seeds**

**Our Address:**

**Sis. LATHA DAVID**

SOVEREIGN JESUS MINISTRIES

**5-A/200, CALDWELL COLONY,
2nd STREET, TUTICORIN-628 008**

**Mobile: +91-0-94424 66250 & +91-0-90034 56506**
Email : **sovereignjesus@gmail.com**

Web : **http://tamilchristian.com/index.php/resources/seeds**